
KMMO 796

மணிக்கோடிப் பிரசுரம்: 8

லெனின்

*

வி. கிருஷ்ணஸ்வாமி, எம். ஏ.

*

நவயுகப் பிரசுராலயம் லிமிடெட்

ஜி. டி., மதராஸ்

 1939 [விலை: 8 அணா

1335

∴/32

பொருளடக்கம்

அத்தியாயம்	விஷயம்	பக்கம்
1.	பிறப்பும் வளர்ப்பும்	1
2.	ஆரம்ப முயற்சிகள்	15
3.	முதல் புரட்சி—1905	23
4.	ஜார், ஜாரிணு, ராஸ்புட்டின்	29
5.	பிரளயம்—1917	34
6.	பொதுவுடைமை அரசு	60
7.	புதிய பொருளாதாரத் திட்டம் ...	79
8.	முடிவு	85
9.	நிர்மாண கர்த்தா லெனின்	102
	—[ஸ்டாலின் எழுதியது]	
10.	லெனின்	114
	—[மாக்ஸிம் கோர்க்கி எழுதியது]	



லெனின்

—டிராயிட்ஸ்கி வரைந்த சித்திரம்

லெனின்

1. பிறப்பும் வளர்ப்பும்

1917-ம் வருஷத்தில் ருஷியா தேசத்தில் நிகழ்ந்த மகத்தான புரட்சிக்கு உலக சரித்திரத்திலேயே ஈடு மில்லை, இணையுமில்லை. அதை வெறும் புரட்சி என்று கூடச் சொல்லப்படாது. பிரளயம் என்றே சொல்லவேண்டும்.

உலகத்திலே எத்தனையோ பெரிய பெரிய மாறுதல்கள் எல்லாம் இதற்கு முன் வந்திருப்பது உண்மைதான். பெரிய பெரிய விபத்துக்கள், வெள்ளங்கள், பூகம்பங்கள், உயிரை வாரிக்கொண்டு போகும் பிளேக், காலரா, இன்புளுயன்ஸா நோய்கள், மரணத்தை மழைபோல் சொரிந்த யுத்தங்கள் நேர்ந்து மனித வர்க்கங்களே அழிந்து போயிருக்கின்றன. இரும்பு நெஞ்சும், எதற்கும் அஞ்சாத தைரியமும் படைத்த வீரர்கள்—அலெக்ஸாந்தர், செங்கிஸ்கான், நெப்போலியன் முதலியவர்கள், பிரசித்திபெற்ற ராஜ்யங்களை அழித்து, செல்வங்களைக் கொள்ளைகொண்டு, லக்ஷக்கணக்கான பேர் களை அடிமைப்படுத்தி யிருக்கிறார்கள். புத்தரையும், கிறிஸ்து வையும், முகம்மதுவையும் போன்ற அவதார புருஷர்கள் தங்கள் போதனையால் கோடிக்கணக்கான மனிதர் இதயங் களை வசியம் செய்து அவர்கள் வாழ்க்கையையே மாற்றியிருக் கிறார்கள். பரந்த, வலுத்த சாம்ராஜ்யங்கள், ஒன்றன்பின் ஒன்றாய், இடிந்து விழுந்து மண்ணோடு மண்ணாய்ப் போய், அவற்றின் சின்னங்கள்கூட இல்லாமல் அழிந்திருக்கின்றன.

ஆச்சரியமான நாகரிகங்கள், எகிப்திலும், பாபிலோனிலும், இந்தியாவிலும், சினவிலும், கிரீஸிலும், ரோமாபுரியிலும், அரபு நாட்டிலும் முளைத்தெழுந்து, வானளாவி வளர்ந்து, பின் பட்டுப் போயிருக்கின்றன. ஆனல் அத்தகைய சரித்திர நிகழ்ச்சிகள் எதுவும் ருஷியா தேசத்தில் 1917-ல் நிகழ்ந்த பிரளயத்துக்கு ஒப்பாகாது.

ஏனெனில், இந்தப் புரட்சி, அண்டங்களையும் புவனங்களையும் நிர்மூலமாக்கும் பராசக்தியின் ஊழிக் கூத்தைப் போல ஸம்ஹாரப் புரட்சியாய் மட்டும் நிகழவில்லை. மிக உன்னதமான, சிரேஷ்டமான, தர்மம் நிறைந்த ஒரு புது யுகத்தையே சிருஷ்டித்தது. உலகம் தோன்றியதிலிருந்து நேற்று வரைக்கும் நொந்து வருந்தியவர்கள் கனவுகண்டு வந்த சொர்க்கத்துக்கு அடிகோலிற்று. பல்லாயிர வருஷங்களாக உதைபட்டு, இடிபட்டு, மிதிபட்டு, அடிமையாகி, பிறர்க்கே உழைத்து, தாம் எந்த லாபத்தையும் அடையாமல், அறிவிலிகளாய், இகழ்ச்சிப் பிணங்களாய், குருட்டுப் புழுக்களாய் உழன்று வந்த பாட்டாளி மக்கள், தோள் தட்டி நிமிர்ந்தெழுந்து நின்று, "நாம் மனிதர், நாம் இங்கு வாழ உரிமையுண்டு, நாம் உழுது விதைத்து அறுத்ததை நாமே உண்போம்!" என்று உலகறியக் கூறும் காலத்தைக் கொண்டுவந்தது. உண்மையான சுதந்தரம், உண்மையான சமத்துவம், உண்மையான சகோதரத்துவம் மண்ணுலகில் தழைக்க விதை விதைத்தாயிற்று! புது யுகம் பிறந்துவிட்டது!

> "இடிபட்ட சுவர்போலே கலிவிழுந்தான்,
> கிருதயுகம் எழுக மாதோ!"

இந்த நம்பிக்கை, இந்த ஆவேசம், ருஷியா தேசத்தினர் மனத்தில் மட்டும் எழவில்லை. அகில உலகத்திலும் உள்ள

ஏழைக் குடியானவர்கள், பாடுபடும் தொழிலாளர்கள் உள் ளத்திலெல்லாம் எழுந்தது. ருஷியாவில் வெடித்தெழுந்த சமதர்மத் தீ உலகெங்கும் பரவத்தான் போகிறது என்பதை அக் கொள்கையின் நண்பர்களும் விரோதிகளும் கண்டு கொண்டார்கள். குடியானவனும் தொழிலாளியும் தம்மைச் சூழ்ந்திருந்த இருள் விலகியதென்று களிக்கும்போது, முத லாளிகளும் பணக்காரரும் தம்முடைய கோட்டையில் நெருப் புப் பற்றி எரிகிறதே என்று நடுநடுங்கினர்கள்.

அது என்ன அப்படிப் பிரமாதமான புரட்சி? ஏன் ஏழைகள் எல்லாம் களிக்கவும், பணக்காரர்கள் நடுங்கவும் வேண்டும்?

நீங்கள் ஒரு பணக்காரர் என்று வைத்துக்கொள்ளுங் கள். உங்கள் முன்னோர்கள் தேடிவைத்த ஆஸ்தி, நன்செய் நிலங்களாகவும் புன்செய்க் காணிகளாகவும், தோட்டங்கள் தோப்புக்களாகவும், ஆடு, மாடு, வீடுகளாகவும் எதேஷ்டமா யிருக்கிறது. நீங்கள் அவற்றைப் பராமரித்தும், பல இடங் களில் வட்டிக்குக் கடன் கொடுத்தும், பற்பல வியாபாரங்கள் செய்தும் வளர்த்து வருகிறீர்கள். உங்கள் வாழ்க்கை சௌக் கியமாய் நடக்கிறது. தினசரி ஸோப்புத் தேய்த்துக் குளித்து, பட்டுக்கரை 'நைஸ்' வேஷ்டிகள் உடுத்தி, காபி பலகாரங்கள், பட்சணங்கள், உயர்ந்த சம்பா அரிசிச் சாதம், நெய், தயிர், பால், பழங்கள் சாப்பிட்டு, சங்கீதம், நடனம், நாடகம், சினிமா, ரேடியோ முதலிய இன்பங்களை அனுபவிக்கிறீர்கள். பெரிய காற்றோட்டமான மாடி வீடுகள், மின்சார விளக்கு, மின்சார விசிறி, வெளியே போக மோட்டார், உங்கள் மனைவி குழந்தைகளுக்கு ஆபரணங்கள், எல்லாம் உண்டு. உங்கள் உற்றார் உறவினர் நண்பர்கள் எல்லாரும் இதேபோல நல்ல நிலையி லிருக்கிறார்கள். நீங்கள் நிறைய வரி கொடுப்பதால்

உங்களுக்கு அரசாங்கத்தில் எல்லாச் சபைகளுக்கும் வோட்டுரிமை உண்டு. தேர்தலுக்கு அதிகப் பணம் செலவழிக்க முடிந்ததால் நீங்கள் அந்த ஸ்தாபனங்களில் எல்லாம் அங்கத்தினர். சம அந்தஸ்துடைய உங்கள் நண்பர்கள்தான் மற்ற அங்கத்தினர்கள். நீங்கள் எல்லாரும் சேர்ந்துதான் அரசாங்கம் நடத்துகிறீர்கள். உங்கள் நலன்களைப் பாதுகாக்கக்கூடிய சட்டங்களை அங்கு நிறைவேற்றுகிறீர்கள். அந்தச் சட்டங்களை யாரும் மீறுமல் பார்த்துக்கொள்ள, மீறினுல் தண்டிக்க, அரசாங்கப் போலீஸும் ராணுவமும் உள்ளன. சர்க்கார் உங்கள் நன்மைக்காகப் பெரிய கட்டடங்களாய், கோர்ட்டு, பள்ளிக்கூடம் முதலியவை கட்டுகின்றனர்; வைத்தியசாலைகள் வைக்கின்றனர்; மோட்டார் போகும் ரஸ்தாக்கள், அழகான தோட்டங்கள், அவற்றில் ரேடியோக்கள் அமைக்கின்றனர்.

சமூகத்தில் நீங்கள் எங்கே சென்றுலும் மரியாதை. குடியானவன், வண்டிக்காரன், தொழிலாளி, குமாஸ்தா, கடைக்காரன் எல்லாரும் உங்களைக் கண்டால் வணங்கி வழி விடுகிறுர்கள். ஈசுவர சந்நிதியில்கூட உங்களுக்குத்தான் விசேஷ மரியாதை. நீங்கள் கோவிலுக்கு வந்தால்தான் அங்குள்ள தெய்வத்துக்கு 'ஸ்பெஷல்' அபிஷேகங்கள், அலங்காரங்கள், பூஜை நைவேத்தியங்கள்.

அடுத்தாற்போல், உங்கள் குடியானவன், கிராமத்தில் மண் குடிசையில் வசிக்கிறுன். அவனுக்குக் குடி தண்ணீர் வசதிகூடக் கிடையாது. அவன் தெருக்களைப் புதுப்பிக்கவும், கூட்டவும், முனிஸிபாலிட்டி கிடையாது. அவனுக்கு மின்சார விளக்குகள் யாரும் போடமாட்டார்கள். வோட்டு உரிமை இல்லை. அரசாங்கத்தில் அவனுக்கு ஒரு அதிகாரமும் கிடையாது. பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி, பார்க்கு,

ரேடியோ — ஒன்றும் அவனுக்கில்லை; அவனால் அவற்றை எட்டிப் பார்க்கவும் முடியாது. கோர்ட்டில் நியாயம் கிடைக்க வேண்டுமானால், கோர்ட்டு பீஸ், வக்கீல் பீஸ், என்று கொட்ட வேண்டும். கிராமத்தில், வெயிலிலும் மழையிலும், சேற்றிலும் புழுதியிலும் அவன் உழைப்பான். உழுது விதைத்து அறுத்து உங்களுக்குக் கொடுத்துவிட்டு, நீங்கள் கொடுத்தது போதுமென்று இருக்கவேண்டும். அவனுக்கு நல்ல வாழ்க்கை ஏது? சம்பாதிக்கும் கூலி உண்பதற்கே போதாது. உடுக்கவும், குடும்பத்தைப் பராமரிக்கவும் இன்னும் அதிகமாய் உழைக்கவேண்டும். ஆடு மாடுகள் அவன் மேய்ப்பான்; பால், தயிர்,நெய் உங்களுக்கு. தோட்டம் அவன் வளர்ப்பான்; காயும் கனியும் உங்களுக்கு. அவன் அசுத்தமாயிருப்பான்; அம்மையும் காலராவும் அவனைப் பலி கொள்ளும். எழுதப் படிக்க அவனுக்குத் தெரியாது. புராண இதிகாசங்கள் தெரியாது. சங்கீதம் வராது. அரசியல் விவகாரம் அறியமாட்டான். ரயிலையும், மோட்டாரையும், ஏரோப்பிளேனையும் பார்த்து ஆச்சரியப்படுவான். ரேடியோவையும் மின்சார விளக்கையும் கண்டு மலைப்பான். உங்களைக் கண்டு பயந்து எழுவான். ஒன்றுக்கும் தைரியம் வராது. ஊக்கம் இராது. ஆமையைப் போலே அடங்கி ஒடுங்குவான். "நான் புண்ணியம் செய்யவில்லை. நான் ஏழை, இது என் விதி" என்று குன்றிச் சாவான். அவன் மனைவியும், மக்களும், சந்ததியும் இன்னும் கீழே கீழே போய்க்கொண்டே இருப்பார்கள்.

அப்படிப்பட்ட ஏழைகளைப் பார்த்து, ருஷியப் புரட்சி சொன்னது இதுதான்:

"மனிதரில் நீயுமோர் மனிதன்; மண்ணன்று!
இமை திற! எழுந்து நின்று எண்ணுவாய்!
தோளை உயர்த்து! சுடர்முகம் தூக்கு!

மீசையை முறுக்கி மேலே ஏற்று!
விழித்த விழியில் மேதினிக் கொளிசெய்!
நகைப்பை முழக்கு! நடத்து லோகத்தை!
உன் வீடு—உனது பக்கத்து வீட்டின்
இடையில் வைத்த சுவரை இடித்து,
வீதிகள் இடையில் திரையை விலக்கி,
நாட்டொடு நாட்டை இணைத்து, மேலே
ஏறு! வானை இடிக்கும் மலைமேல்
ஏறு, விடாமல்! ஏறு மேன்மேல்!
ஏறி நின்று பாரடா எங்கும்!
எங்கும் பாரடா இப்புவி மக்களை!
பாரடா உனது மானிடப் பரப்பை!
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்!
'என் குலம்' என்றுனைத் தன்னிடம் ஒட்டிய
மக்கட் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சிகொள்!
அறிவை விரிவு செய், அகண்டமாக்கு!
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை,
அணைந்துகொள், உன்னைச் சங்கமமாக்கு!
மானிடசமுத்திரம் நானென்று கூவு!
பிரிவிலை, எங்கும் பேதமில்லை!
உலகம் உண்ண உண், உடுத்த உடுப்பாய்!"*

"எல்லாம் உன்னுடையது! எல்லாவற்றையும் நீயே எடுத்துக்கொள்! உலகம் பூரா உனக்குத்தான்! நியாயமான சொந்தக்காரன் நீதான்! ஆஸ்தி ஐஸ்வரியம் யாவும் உன்னுடையதுதான். சர்க்கார், சட்டம், போலீஸ், ராணுவம்,

---

* பாரதி தாஸன்

கோவில், மதம் எல்லாம் உன் நன்மைக்காக, உன் தொண்டுக்காகத்தான்! நீதான் எல்லாவற்றிற்கும் அதிகாரி!" என்று கூவினார்கள் ருஷியப் புரட்சித் தலைவர்கள். ஏழைகள் கையில் துப்பாக்கியையும், பீரங்கியையும் கொடுத்தார்கள். ராணுவத்தை அவர்களுக்குச் சகாயமாய் வைத்தார்கள். சர்க்காரை அவர்கள் கையிலேயே கொடுத்தார்கள். சட்டம் அவர்களையே செய்யச் சொன்னார்கள். ராஜாங்க அதிகாரத்தோடு, தேசத்திலிருந்த சொத்துக்கள் எல்லாம்—நிலம், வீடு, ஆடு, மாடு, கன்றுகாலி, மாளிகைகள், பங்களாக்கள், தங்கம், வெள்ளி, ரயில், மோட்டார் வண்டிகள், கோயில்கள்—எல்லாமும் ஏழைகள் கைவசமாயின.

"யாரடா, திருட்டுப்பயல்—ஒரு மணி நெல்லைத் தொட்டாயோ, போலீஸ் கையில் பிடித்துக் கொடுப்பேன்!" என்று சொன்னீர்களே, உங்கள் நிலம் புலம் அறுவடை எல்லாம் குடியானவனுக்கு என்றால் எப்படியிருக்கும்? "என் அப்பா சம்பாதித்த சொத்து, நான் கஷ்டப்பட்டுத் தேடிய காசு, என் வீடு, என் நிலம்; என் பணம், என் பிள்ளைகளுக்குப் போகவேண்டியது" என்று சொல்லிக்கொண்டிருந்தீர்களே, அதையெல்லாம் உங்கள் வேலைக்காரன், உங்கள் ஆணைக்குக் கீழ்ப்படிபவன், நீங்கள் கொடுத்தால்தான் சாப்பாடு, இல்லாதுபோனால் பட்டினி என்று, உங்கள் தயவையும் இரக்கத்தையும் எதிர்பார்த்த பஞ்சை, அறிவிலி, அசுத்தம், அவலட்சணம் நிறைந்தவன், நாகரிகமற்றவன் எடுத்துக் கொள்வதென்றால்? அவனும் நீங்களும் 'சமம் என்றால்? பாதாம் ஹல்வாவும், ஆரஞ்சுப்பழமும், பட்டு ஆடையும், கட்டில் மெத்தையும் அவனுக்கும் உண்டானால்தான் உங்களுக்கும்; இல்லாவிடில் இல்லை என்றால்? அது மட்டுமா? நீங்களும் அவனைப்போல் உழைத்தால்தான் கஞ்சியாவது

கிடைக்குமாம். அவன் பிள்ளைகளுக்குக் கிட்டும் கல்வியும் வைத்திய உதவியும்தான் உங்கள் பிள்ளைகளுக்காம். சட்ட சபைகளில் உங்களுக்குள்ள அதிகாரம் யாவும் அந்த 'மடைய'னுக்கும் உண்டாம்! நீங்கள் பிறந்த பிறப்பென்ன, வளர்ந்த வளர்ப்பென்ன? உங்களுக்குத் தெரிந்ததில் லக்ஷத்தில் ஒரு பங்கு அவனுக்குத் தெரியுமா? நறுவிசாய் வேஷ்டி கட்டிக்கொள்ளவாவது தெரியுமா? பந்தியில் உட்கார்ந்து சாப்பிடத் தெரியுமா? அதெல்லாம் என்னத்திற்கு? மொத்தத்தில் உங்கள் கால் தூசி பெறுவானு அவன்? அவன் உங்கள் தோழனும்—எல்லாருமே எல்லாருக்கும் தோழர்களாம்! நன்றாயிருக்கிறதல்லவா சமத்துவமும் சகோதரத்துவமும்? கலி முற்றிப்போய்விட்டது! வேறென்ன? குலம் கிடையாது, கோத்திரம் கிடையாது, ஜாதி போச்சு, மதம் போச்சு, அவனவன் சம்பாதித்து வைத்திருக்கிற ஆஸ்திபாஸ்திகளையும் கொள்ளையடிக்கிறார்கள்! எல்லாரும் ஒன்றும்! எல்லாரும் எல்லாவற்றையும் பங்கு போட்டுக்கொள்ளுகிறதாம்! அப்புறம் நியாயமேது? தர்மமேது? காவலேது, கட்டுப்பாடேது? சட்டமேது, திட்டமேது?—இன்னமுமா சும்மாயிருப்பது? கட்டுங்கள் கச்சையை......!

உலகத்திலுள்ள பணக்காரர்கள் எல்லாரும் ருஷியப் புரட்சியைப்பற்றிக் கேட்டதும் இப்படித்தான் எண்ணினூர்கள், கோபங்கொண்டார்கள். கட்சி கூடி அதை எதிர்த்தார்கள். பாவம்! ஒரு புறம் உலகம் இதுவரை கண்டிராத பயங்கரமான யுத்தம், அந்த யுத்தத்திற்குள், அறிந்தோ, அறியாமலோ, தங்கள் கொள்கைகள் மூலம் அவர்கள் மாட்டிக் கொண்டாய்விட்டது; அதில் ஜெயித்தவருக்கும் நஷ்டம், தோற்றவருக்கும் நஷ்டம். இன்னொருபுறம் இந்த விபரீத

மான புரட்சி! யுத்தமாவது தேவலை, இந்தப் புரட்சி சமூகத்தின் அஸ்திவாரத்தையே உடைத்து எறிந்து விட்டதே!

பணக்காரக் கட்சியைச் சேர்ந்த இங்கிலாந்தும், அமெரிக்காவும், பிரான்ஸும் ருஷியப் புரட்சிக்காரர்களை முழுபலங்கொண்டு தாக்கின. அவர்களுக்கு ஆகாரம் கிடைக்காதவாறு நாலாபுறத்திலும் காவல் வைத்து வழிமறித்து நின்றன. பட்டினியாலும் வியாதியாலும் குழந்தைகளும் ஸ்திரீகளும் சாகின்றனர் என்று தெரிந்தும் சற்றுவது அவர்கள் மனமிளகவில்லை.

அவர்களுடைய எதிரிகளோ அப்பொழுதுதான் விலங்கைத் தறித்துக்கொண்டு வெளியே வந்தார்கள். சிறையின் இருட்டு அவர்கள் கண்ணை விட்டு இன்னும் நீங்கவில்லை. சுயமாக நிற்கவும், தற்காப்புச் செய்துகொள்ளவும் பலம் சேகரித்துக்கொள்ளவில்லை. யுத்தத்தின் அபாயங்களிலிருந்தும் பஞ்சத்தின் கொடுமைகளிலிருந்தும் அப்பொழுதுதான் பிழைத்தார்கள்; இன்னும் மூச்சுவிட அவகாசம் கிடைக்கவில்லை. அதற்குள் இன்னொரு பெரிய அபாயம் அவர்களைக் கௌவினல் என்ன செய்வார்கள்?

அவர்களுக்கு உயர்ந்த ஒரு தலைவன் கிடைத்திருந்தான். இந்தியாவுக்கு காந்தியடிகள் கிடைத்ததுபோல ருஷியாவுக்கு லெனின் கிடைத்திருந்தான்.

1917-ம் வருஷம் ருஷியாவில் நிகழ்ந்த புரட்சி பிசுபிசுவென்று புகைந்து அழியாமல், ஜகஜ்ஜோதியாய், வருங்காலத்துக்கெல்லாம் வழிகாட்டும் ஒளிவிளக்காய், புயலையும் மழையையும் சட்டை செய்யாது நின்றெரியும் அக்னி ஜ்வாலையாய்ச் செய்தது லெனின். நிலையிழந்து நின்றவர்களுக்குச் சமயம் உணர்த்திச் சந்தர்ப்பம் காட்டியது லெனின். ஊக்கம்

கொடுத்து, பலத்தைப் பெருக்கி, விரோதிகளுடன் போர் தொடுத்து அவர்களை ஒழித்து, புரட்சியின் உயிரைக் காப்பாற்றியது லெனின். பிறகு மறுபடியும் அதைப் பேணிப் பராமரித்து, உணவூட்டி வளர்த்து மகா பலிஷ்டனாகச் செய்ததும் லெனின்.

இன்றைத் தேதியில், உலகத்தின் ஆறில் ஒரு பகுதி நாட்டில், ஏழை மக்களுக்காக அரசாங்கம் நடக்கிறதென்றால் அது லெனினால். உலகத்திலுள்ள ஏழை எளியவர்கள் தங்களுக்கு விமோசனம் உண்டு என்பதைத் திடமாய் நம்பினால் அது லெனினால்தான். பட்டினியையும், பசியையும், இல்லாக் கொடுமையையும் ஒழிக்கும் காலம் வரத்தான் போகிறது என்ற உறுதி இருந்தால் அது லெனினால்தான். லெனின் ருஷியாவுக்கு மட்டும் தலைவனில்லை. ருஷியாவில் மட்டும் புரட்சி உண்டுபண்ணவில்லை. ருஷியாவை மட்டும் விடுதலை செய்யவில்லை. மனித வர்க்கத்துக்கே தலைவன் லெனின். மனித சமூகம் முழுவதையுமே விடுதலை செய்தவன் லெனின். உலகம் எங்கும் ஒவ்வொரு தேசத்திலுமே புரட்சியைத் தூண்டினவன்.

ஒரு சாரார் அவனைத் தெய்வமாகக் கொண்டாடுகிறார்கள். இன்னொரு கூட்டத்தார் அவனை ராக்ஷஸன், பிசாசு, சாபத்தீடு என்று திட்டுகிறார்கள். எது வேண்டுமானாலும் உண்மையாயிருக்கட்டும். அவ்வளவு அன்பையோ, கோபத்தையோ தூண்டுவதற்கு ஒரு மனிதனுக்கு மகத்தான சக்தி இருந்திருக்கவேண்டும். எதாவது மறக்க முடியாத செயல்கள் புரிந்திருக்கவேண்டும். அப்படி இந்த லெனின் என்ன செய்து விட்டார்? அவர் எப்பேர்ப்பட்டவர்?

"மிக சாமர்த்தியமான மூளை, புரட்சிக்கென்றே பிறந்த மேதாவி" என்று லெனினைப்பற்றி வியக்கிறார் ஜவாஹர்லால்.

நேரு. இன்னொரிடத்தில், "...நாளாக ஆக லெனினுடைய மகத்துவமும் வளருகிறது; பொறுக்கி எடுக்கப்பட்ட உலக சிரஞ்சீவிகளில் லெனினும் ஒருவராகிவிட்டார்" என்று அவர் எழுதுகிறார். "ஒரு காலத்தில் நம்முடைய சதாப்தத்தையே லெனின் சதாப்தம் என்றுதான் சொல்லப்போகிறார்கள்" என்பது பேர்ட்ரண்ட் ரஸலின் அபிப்பிராயம். பிரான்ஸ் தேச ஆசிரியர் ரோமேய்ன் ரோலண்ட், "நம்முடைய நூற்றாண்டின் மிகப் பெரிய கர்மவீரன் லெனின் தான். தன்னலம் என்பது சிறிதேனும் இல்லாதவரும் அவர் தான்" என்று துதிக்கிறார். இன்னொரு ஆசிரியர், "20-ம் நூற்றாண்டின் இரு தீர்க்கதரிசிகள் லெனினும், காந்தியும்" என்று பறை சாற்றுகிறார்.

பிற்காலத்தில்தான் இத்தனை பிரசித்தி லெனினுக்கு. அவருடைய பிறப்பும் வளர்ப்பும் சாமானியம்தான். 1870-ம் வருஷத்தில், ருஷியாவில் வால்கா நதிக்கரையிலுள்ள ஸிம்பர்ஸ்க் என்னுமிடத்தில் அவர் பிறந்தார். அவருடைய பெற்றோர் அவருக்கிட்ட பெயர் வ்ளாடிமிர் இல்யிச் உல்யனோவ் என்பது. 'லெனின்' என்ற பெயர் அவராக வைத்துக் கொண்ட மாறு பெயர். அவர் தகப்பனருக்கு ருஷிய சர்க்காரின் கல்வி இலாகாவில் உத்தியோகம்.

அந்தக் காலத்தில் ருஷியாவில் ஒரு பெரிய மாறுதல் நிகழ்ந்துகொண்டிருந்தது. மாணக்கர்களும் அறிவாளிகளும் அபேதவாத நோக்கங்களுடன் பலரகசியச் சங்கங்கள் நடத்தி, பயங்கரச் செயல்கள் புரிந்து வந்தனர். பட்டணங்களில் யந்திரசாலைகளில் தொழிலாளர்கள் பெருகிக்கொண்டிருந்தனர். அவர்கள் மத்தியிலும் அபேதவாதக் கொள்கைகள் பரவிக் கொண்டிருந்தன. ஜார் சக்கரவர்த்தியின் தலைமையில் நடந்த ராஜாங்கமோ எப்போதும் போலக் கண்மூடித்தன

மாக அடக்குமுறை தர்பார் நடத்தி வந்தது. அதனுடைய கொடுமை பொறுக்காமல்தான் இளம் வாலிபர்களும் மாணாக்கர்களும் பயங்கரச் செயல்களில் ஈடுபட்டதும், ரகசியச் சங்கங்கள் நடத்தியதும்.

“ இரணியன் போலரசாண்டான் கொடுங்கோலன்
    ஜார் எனும் பேரிசைந்த பாவி
சரணின்றித் தவித்திட்டார் நல்லோரும்
    சான்றோரும்...........
இம் மென்றால் சிறைவாசம் ; ஏனென்றால்
    வனவாசம் ; இவ்வாறங்கே
செம்மையெலாம் பாழாகிக் கொடுமையே
    அறமாகித் தீர்ந்த....”

காரணத்தால் தேசத்தின் நடுத்தர மக்களிடையே கொந்தளிப்பு ஏற்பட்டிருந்தது. அந்தக் கொந்தளிப்பிலும் சுழலிலும் லெனின் குடும்பத்தார் அகப்பட்டுக்கொண்டனர். லெனினுடைய அண்ணன் அலெக்ஸாண்டர், 1887-ம் வருஷத்தில், ஜார் அரசனைக் கொல்லச் சதியாலோசனை செய்ததற்காகத் தூக்கிலிடப்பட்டான். அண்ணனுடைய முடிவு லெனின் மனப்பான்மையிலேயே அடிப்படையான மாறுதலை உண்டாக்கியது. பயங்கரச் செயல்களால் விடுதலை கிடைக்காதென்றும், சர்வ ஜனப் புரட்சியால்தான் அது சாத்தியமென்றும் தெளிவாக அவன் உணர்ந்தான்.

அப்பொழுது லெனினுக்குப் பதினேழு வயது. அந்த வயதிலேயே கார்ல் மார்க்ஸ் முதலிய அபேதவாதிகள் புஸ்தகங்களை எல்லாம் அவன் படிக்க ஆரம்பித்தாயிற்று. அடுத்த வருஷம் லெனினுக்கு ‘ஸ்கூல் பைனல்’ பரீட்சை. அதிலும் மெச்சத் தகுந்த முறையில் தேறினான். ஒரு புறம் அண்ணன்

கொலேயின் துக்கம், இன்னொருபுறம் அபேதவாத லட்சியங்களில் ஆர்வம். இதற்கிடையே பள்ளிக்கூடப் பரீட்சையிலும் மேன்மையாகத் தேற ஊக்கமும் உறுதியும் அவனுக்கு இருந்தது மிகவும் ஆச்சரியமானது.

உள்ளூர்ப் படிப்புக்குப் பிறகு, சட்டம் படிக்கவேண்டுமென்று காஸான் சர்வகலாசாலேக்குச் சென்றான் லெனின். ஆனால் ஒரு மாதம்கூட அங்கே இருக்கவில்லே. மாணவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் ஒரு சண்டை நடந்தது. லெனின் மாணவர்களின் தலேவர்களில் ஒருவனுகக் கருதப்பட்டான். அதிகாரிகள் சர்வகலாசாலேயிலிருந்து அவனே 'டிஸ்மிஸ்' செய்து விட்டார்கள்.

எப்படியாவது மறுபடியும் சர்வகலாசாலேயில் சேர வேண்டுமென்று லெனின் எல்லா முயற்சிகளேயும் செய்து பார்த்தான். வெளி தேசத்துக்குக்கூடப் போகலாமா என்று யோசித்தான். அவனுடைய தகப்பனர், அவருடைய மூத்த மகன் தூக்கில் இறக்கு முன்பே காலமாகிவிட்டார். லெனினுக்கு வேறு உதவியுமில்லே. விடாமல் படித்துக்கொண்டே ஒவ்வொரு சர்வகலாசாலேயாகப் பார்த்தான். கடைசியில் பீட்டர்ஸ்பர்க் சர்வகலாசாலேயில் சட்டப் பரீட்சைக்கு அமர அனுமதி கிடைத்தது. 1890-ல் லெனின் வக்கீல் பட்டம் பெற்றான்.

வயிற்றுப் பிழைப்புக்கு வக்கீல் தொழில், ஆத்ம திருப்திக்கு அபேதவாதப் பிரசாரம். இரண்டையுமே நடத்த முயன்றான் லெனின். அது சாத்தியமில்லே என்பது தேசிய சமூக வேலேகளில் அனுபவமுள்ளவருக்குத் தெரியும். ஸாமரா என்ற ஊரில் அப்படி முடியவில்லேயே என்று பீட்டர்ஸ்பர்க் சென்றான். கொஞ்ச நாளில், சிறிய பட்டண

மானாலும் பெரிய நகரமானாலும் சரி, உத்தியோகம் பண்ணிக் கொண்டே சேவை செய்வது இரண்டுங் கெட்டானாகும் என்று உணர்ந்தான். உடனே தொழிலை விட்டு, சேவையை மாத்திரம் மேற்கொண்டான், மகாத்மா காந்தியைப் போலே. அப்பொழுது அவனுக்கு இருபத்திமூன்று வயதுதான்.

2. ஆரம்ப முயற்சிகள்

அக்காலத்தில் பீட்டர்ஸ்பர்க்கில் யந்திரசாலைகள் பல கட்டப்பட்டு, தொழிலாளர்கள் பெருகிக்கொண்டிருந்தனர். அந்தத் தொழிலாளர்களிடையே கார்ல் மார்க்ஸின் சித்தாந் தங்களையும் அபேதவாத தத்துவங்களையும் தெளிவான முறை யில் எடுத்துச் சொல்லுவதுதான் லெனினுடைய முக்கிய வேலையாயிருந்தது. ஏற்கெனவே ஸாமரா சர்வகலாசாலைத் தகராறு சம்பந்தமாகப்போலீஸார் கண் பார்வையில் விழுந்து விட்ட லெனினுக்கு இரகசிய வேலை மிகக் கடினமாய்த்தான் இருந்தது. ஆனால் சட்ட பூர்வமாகத் தீவிரப் பிரசாரம் செய் வதோ, பச்சை பச்சையாகத் தொழிலாளர் போர் முறையை எடுத்துக்காட்டுவதோ அசாத்தியம். ஆகையால் வாராந்திரப் பள்ளிக்கூடம் (Sûnday School) என்றும், தேநீர் விருந் தென்றும், படிக்கும் சங்கங்கள் என்றும் சாக்குச் சொல்லிக் கொண்டு, அபேதவாதிகளுடனும் தொழிலாளிகளுடனும் கலந்து படிக்கவும், விஷயங்களைத் தர்க்கித்துப் புகட்டவும் ஆரம்பித்தான் லெனின். கூடிய சீக்கிரத்தில் இப்படிப் பட்ட ரகசிய வழிகளால் ஒரு தீவிர அபேதவாத இயக்கத் தைப் பீட்டர்ஸ்பர்க்கில் ஸ்தாபித்து விட்டான்.

1895-ல் லெனின் சீக்காய்ப் படுத்துவிட்டான். வியாதி சொஸ்தமாவதற்கு ருஷியாவிலிருந்து வெளிநாடு செல்ல அனுமதி கிடைத்தது. ஆனால் லெனின் இந்தச் சந்தர்ப்பத் தையும் தொழிலாளர் சேவைக்கே பயன்படுத்திக்கொண் டான். பெர்லினுக்கும் ஜெனீவாவுக்கும் சென்று அங்கே யிருந்த தொழிலாளர் தலைவர்களையும் தேசப்பிரஷ்டம் செய் யப்பட்ட அபேதவாதிகளையும் அறிமுகம் செய்துகொண் டான்.

அவர்களுடைய பழக்கத்தின் பலனாக, பத்திரிகை நடத்தவேண்டுமென்ற யோசனை லெனினுக்கு உண்டாயிற்று. தொழிலாளருக்கு உண்மையாக உழைக்கும் பத்திரிகைக்கு சர்க்கார் அனுமதி ஒருபோதும் கிடைக்காது. ரகசியமாய்த் தான் அச்சிட்டுப் பிரசுரிக்கவேண்டும். அவ்வாறே செய்வதென்று நிச்சயித்து, லெனின் சாமர்த்தியமாய் ஒரு அச்சு யந்திரம் கூட ரகசியமாக ருஷியாவுக்குள் கொண்டுவந்துவிட்டான். பத்திரிகை நடத்த ஆட்கள் எல்லாம் பிடித்து, முதல் பிரசுரம் வெளிவர இருக்கும் சமயம் போலீஸுக்கு எவ்வாறோ உளவு தெரிந்து இந்த முயற்சி பூராவும் வீணாகி விட்டது. லெனின் சிறையில் அடைக்கப்பட்டான்.

ருஷியாவில் அந்தக் காலத்தில் நியாய விசாரணை ரொம்ப ஜரூராய்த்தான் நடந்தது! போலீஸார் கையில் ஒருவன் அகப்பட்டுக்கொண்டால் அவன் தண்டனை அடையக் குறைந்தது ஒரு வருஷமாவது பிடிக்கும்! அதுவரை அவன் சிறையில்தான் இருக்கவேண்டும். லெனினுக்கும் அதே கதிதான். தண்டனையடைய ஒரு வருஷமாயிற்று. அந்த வருஷம் பூராவும் அவனுக்குத் தனிக் காவல். இதன் பிறகு ஸைபீரியாவுக்குப் பிரஷ்டமாகும்படி தண்டனை.

சிறையிலிருந்த பொழுதும் லெனின் சும்மா இருக்கவில்லை. வெளி உலகத்துடன் ரகசியமாய்ச் சம்பந்தம் வைத்துக்கொண்டும், படித்துக்கொண்டும், புஸ்தகங்கள் எழுதிக்கொண்டும் இருந்தான். 1897-ல் லெனினை ஸைபீரியாவுக்குக் கொண்டுபோய்விட்டார்கள்.

பீட்டர்ஸ்பர்க்கில் அபேதவாதப் பிரசாரம் செய்து வருகையில் நடேஷ்தா க்ரப்ஸ்காயா என்ற ஒரு பெண் லெனின்கூட அவ்வியக்கத்தில் சேர்ந்து உழைத்து வந்தாள். பிற்காலத்தில் இவள் லெனினை மணம் புரிந்துகொண்டாள்.



க்ரப்ஸ்காயா

[லெனின் மனைவியார். இவருடைய முழுப் பெயர் நடேஷ்டா
கான்ஸ்டன்டினேவ்ன க்ரப்ஸ்காயா. போல்ஷிவிக்
இயக்கத்தில் நெடுநாள் உழைத்தவர். ருஷியக்
கல்வி வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டவர்.
மரணம்: 1939, பிப்ரவரி 27-ம் உ.]

லெனின் ஸைபீரியாவுக்குச் சென்ற பிறகு இப்பெண்மணியும் அரசாங்கத்தால் தண்டிக்கப்பட்டு தேசப்பிரஷ்டம் செய்யப் பட்டாள். இவளும் இவள் தாயாரும் 1898-ல் லெனின்கூட வசிக்க அரசாங்கத்தார் அனுமதித்தார்கள். அதிலிருந்து க்ரப்ஸ்காயா லெனினுக்கு வலது கை போல ஆனாள். லெனின் அபேதவாத நூல்களைப் பயிலவும், எழுதவும், புரட்சி இயக் கத்தை நடத்தவும் இவள் செய்த உதவி சாதாரணமான தல்ல.

1900-ம் வருஷத்தில் லெனினுடைய பிரஷ்ட தண்டனை பூர்த்தியாயிற்று. ஆனாலும் அரசாங்கத்தார் லெனினைப் பீட்டர்ஸ்பர்க் வர அனுமதிக்கவில்லை, ஸ்கோவ் என்னு மிடத்தில் வசிக்கலாம் என்று மட்டும் அனுமதித்தார்கள்.

லெனினுக்கு இப்போது முப்பது வயது. கடந்த நான்கு வருஷங்களாய்ப் பிரஷ்டம் செய்யப்பட்டிருந்ததால் தொழிலாளர் இயக்கத்துடன் நேரடியான சம்பந்தம் வைத் துக்கொள்ள முடியவில்லை. ஆனால் தேசப் பிரஷ்டமான மற்ற ஊழியர்களுடனும் வெளி நாட்டு ஊழியர்களுடனும் லெனினுக்குப் பழக்கம் அதிகரித்தது.

முன்பு நிறைவேறாமல் போன பத்திரிகை முயற்சியை மீண்டும் தொடங்கவேண்டுமென்று பல ஊழியர்கள் விரும்பி னார்கள். அதற்காக லெனின் வேறு நாடு செல்லுவதென்றும், அங்கிருந்தே பத்திரிகை நடத்துவதென்றும் ஏற்பாடாயிற்று. அவ்வாறே 1900-ம் ஸூ ஜூலை மாதம் லெனின் ஜெர்மனியி லுள்ள ம்யூனிக்குக்குச் சென்றார்.

சில மாதங்களுக்குப் பின் க்ரப்ஸ்காயாவும் அங்கு போய்ச் சேர்ந்தாள். அங்கேயிருந்துகொண்டு லெனின் இரண்டு பத்திரிகைகள் நடத்த ஆரம்பித்தார். ஒன்றின் பெயர் 'இஸ்க்ரா' (தீப்பொறி); இன்னொன்றுக்கு 'ஸார்யா'

(உதயம்) என்று பெயர். முன்னது சாமானிய மக்களுக்கு; பின்னது தத்துவங்களை விளக்குவதற்காக. க்ரப்ஸ்காயா நிர்வாக வேலைகளை யெல்லாம் பார்த்துக்கொள்வதென்றும் லெனின் பத்திராதிபரா யிருப்பதென்றும் தீர்மானமாயிற்று.

மேற்சொன்ன இரண்டு பத்திரிகைகளையும், ருஷியாவில் 1898-ல் ஸ்தாபிதமான ஸோஷல் - டெமொக்ராடிக் தொழிற் கட்சியின் சார்பாக, லெனின் ம்யூனிக்கில் அச்சடித்து ரகசியமாக ருஷியாவுக்குள் அனுப்பிவந்தார். ஸோஷல் - டெமொக்ராடிக் கட்சி ருஷியாவில் ரொம்ப நாளாய் இருந்து வந்த கட்சி. ஆனால் அக்கட்சிக்கு லெனின் விரும்பியதைப் போல அவ்வளவு தீவிரமான புரட்சி மனப்பான்மை இல்லை. கார்ல்மார்க்ஸ் கூறியதை அவர்கள் முழுவதும் ஒப்புக்கொள்ளவில்லை. லெனினுடைவெனில், கார்ல் மார்க்ஸ் போதனைப் பிரகாரம் பணக்காரர் - ஏழைகள் என்ற இரு வர்க்கத்துக்கும் போராட்டம் நிகழ்ந்து, ஏழைகள் அரசாங்க அதிகாரத்தையும் பொருளாதார அதிகாரத்தையும் பிடித்துக்கொள்வது ஒன்றுதான் அபேதவாத லட்சியங்களைச் சித்திக்கச் செய்யும் வழி என்று பூரணமாக நம்பினர். மற்ற வழிகள் எல்லாம் தொழிலாளரை வெறும் பாலைவனத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பிக்கும் என்று அவருக்குத் தெரியும். ஆகையால் இப் பத்திரிகைகள் மூலம் போலிச் சித்தாந்தங்களை உடைத்தெறியவும், கட்சி ஸ்தாபனத்தை ஒற்றுமைப்படுத்தி வளர்க்கவும், லெனின் பிரயாசைப்பட்டார். பதினேழு வருஷங்களுக்குப் பிறகுதான் தம்முடைய சித்தாந்தங்களை நிரூபிக்க அவருக்குச் சந்தர்ப்பம் வாய்த்தது. ஆனால் அந்தப் பதினேழு வருஷமும், ஒரே நிலையாக நின்று, எத்தனை கஷ்டங்கள் நேர்ந்த காலத்தும் மனம் சோராது அந்த லட்சியத் தீபத்தை அணையாமல் எரியச் செய்தவர் லெனின்தான்.

ம்யூனிக்கில் லெனின் பத்திரிகை நடத்த ஆரம்பித்ததி லிருந்து ஸோஷல் டெமொக்ராடிக் கட்சியின் உண்மையான தலைமைப் பதவி லெனின் கைக்கே வந்துவிட்டது. லெனி னும் அவர் மனைவியான க்ரப்ஸ்காயாவும் கட்சிப் பணத் தைக் கொண்டுதான் ஜீவனம் செய்துவந்தனர். ஆனால் அவர் களைப் போல எளிய வாழ்க்கை நடத்த ஒருவராலும் முடிந் திராது. அற்ப சௌகரியங்களையும்கூட வெறுத்துவிட்டு துறவிகள்போல், ஏழையினும் ஏழையாக அவர்கள் வாழ்க்கை நடத்தினார்கள். எளிய வாழ்க்கை நடத்துவதையே லட்சிய மாகக் கொண்ட பலர் நம் நாட்டுத் தேசியப் போரில் தோன்றி யதை நாம் பார்த்திருக்கிறோம். அவர்களைப் போன்றவர்கள் அல்லர் லெனின் தம்பதிகள். கட்சியின் நலம் ஒன்றே அவர்களுக்குப் பிரதானம். கட்சிக்குப் பணம் அதிகமும் கிடையாது. கிடைத்ததும் மிக்க அபாயகரமான முறை களில் சம்பாதித்தது. ஆகையால், லெனின் தம்பதிகள் எல் லாக் கஷ்டங்களையும் சகித்துக்கொண்டு பரம ஏழைகளாகவே வாழ்ந்தனர்.

1902-ம் வருஷத்தில் ம்யூனிக்கில் ரகசியமாய்ப் பத்திரி கைகள் அச்சடித்துவந்த பிரஸ் சொந்தக்காரர் அந்த வேலை யைத் தொடர்ந்து நடத்த மறுத்துவிட்டார். அவருக்குப் பயம் அதிகமாகிவிட்டது. பத்திரிகைகள் அப்பொழுது தான் நன்றாய் விருத்தியாகி யிருந்தன. ஆயினும் என்ன செய்வது? ம்யூனிக்கில் வேறு அச்சுக்கூடம் இந்த வேலையை ஏற்றுக்கொள்ளாது. ரகசியமான, அபாயகரமான வேலை அல்லவா? கட்சியின் தலைமைச் சபையோர் யோசனை செய் தனர். லண்டன் ஒன்றுதான் பத்திரமான இடம் என்று முடிவு செய்தார்கள். அவ்வாறே 1902 ஏப்ரல் மாதம் லெனின் லண்டனுக்குப் போய்ச் சேர்ந்தார்.

லெனின் லண்டனி லிருக்கும் பொழுதுதான் முதன் முதலாக ட்ராட்ஸ்கியைச் சந்தித்தது. ட்ராட்ஸ்கி ருஷியப் புரட்சி வீரர்களில் ஒருவர். பேச்சிலும் எழுத்திலும் நிக ரற்றவர். அவருக்குள்ள சுறுசுறுப்பு வேறு யாருக்கும் இல்லை. 1917-ல் ருஷியப் புரட்சி நடக்கும்போது லெனி னுக்கு வலதுகையா யிருந்தது ட்ராட்ஸ்கிதான். முதலாளித் துவ தேசங்கள் எல்லாம் திரண்டு பொதுவுடைமை ருஷி யாவை நசுக்கிவிட வந்தபோது, ராணுவப் பயிற்சியற்ற தொழிலாளர்களைப் பிரசித்தி பெற்ற 'செஞ்சேனை' யாக நிர் மாணித்து,எதிரிகளை முறியடித்து ஓட்டியது ட்ராட்ஸ்கிதான். லெனினுக்குப் பிறகு ட்ராட்ஸ்கிதான் ருஷிய சர்வாதிகாரி யாவார் என்றுகூட எதிர்பார்க்கப்பட்டது. ஜவாஹர்லால் இவரை, "மின்சார பாட்டரியைப் போலே, நிறையச் சக்தி கொண்டவர்" என்று சொல்லுகிறார். அப்பேர்ப்பட்ட ட்ராட்ஸ்கி, ஒரு இளம் வாலிபனாக ஸைபீரியாவிலிருந்து தப்பி ஓடி, நடு ராத்திரியில் லண்டனில் லெனின் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். லெனின் இவரைத் தம் பத்திரிகைக்கு எழுதுவதற்காகக் கூடவே வைத்துக்கொண்டார்.

லண்டனில் இரவும் பகலுமாய் உழைத்துவந்த லெனி னுக்கு உடம்பு அசௌக்கியமாயிற்று. அதோடு பத்திரி கையை ஸ்விட்ஸர்லந்திலிருந்து பிரசுரிப்பது என்றும் பலர் அபிப்பிராயப்பட்டதால், 1903 ஏப்ரல் மாதம் லெனின் ஜெனீவாவுக்குப் போய்ச் சேர்ந்தார்.

இவ்வருஷத்தில் எப்படியாவது ஸோஷல் டெமொக்ரா டிக் கட்சியின் வருஷாந்திரக் காங்கிரஸை நடத்திவிடுவதென்று ஏற்கெனவே தீர்மானித்திருந்தார்கள். இந்தக் காங்கிரஸ் பிரஸ்ஸெல்ஸில் கூடியது. ஆனால் முதல் நாள் நடவடிக்கை

களுக்குப் பிறகு மேற்கொண்டு நடத்துவதற்கு அரசாங்கம் விடவில்லை யாதலால், காங்கிரஸ் லண்டனுக்குப் போய்க் கூடும் படி ஆயிற்று. அங்கே வெளியிலிருந்து தொந்தரவு ஏதும் இல்லை. உள்ளே சண்டைகள் அதிகரித்தன.

லெனினும் அவருடைய கட்சியும் தங்கள் கொள்கை களைத் தளர்த்த முடியாதென்று தீவிரமாக நிற்கையில், இக் கட்சியின் பழைய தலைவர்கள் சற்று நிதானமாய்ப்போக மனங் கொண்டார்கள். பிரான்ஸ், பிரிட்டன், ஜெர்மனி, பெல்ஜியம், இதாலி எங்கும் அந்தச் சமயத்தில் கார்ல் மார்க்ஸ் கட்சியினர் தளர்ந்து பலஹீனமாகிவிட்டனர். 'கொஞ்சம் கொஞ்சமாய், படிப்படியாய் அபேதவாதத்திற்குப் போவோம்' என்று ஏமாற்றும் 'ஹம்பக்' பேர்வழிகள் பார்லிமெண்டு அங்கத் தினர்களாகவும் மந்திரிகளாகவும் ஆகி, இயக்கத்தைப் பாழ் பண்ணிக்கொண் டிருந்தார்கள். லெனினுக்கு அது பிடிக்க வில்லை. இன்பங்களை வெறுத்துத் துன்பத்திற்குத் தயாரா யிருப்பவன் மட்டும் கட்சியில் சேரட்டும். அவன் தன்னுடைய மனோ வாக்கு காயம் மூன்றையும் புரட்சி நோக்கத்துக்கே அர்ப்பணம் செய்யவேண்டும். அவன் தன் தாய், தந்தை, மனைவி, குழந்தை எல்லாரையும் கூடத் தியாகம் செய்துவிட வேண்டும். பணம் காசு ஒன்றும் தனக்கென வைத்துக் கொள்ளக் கூடாது. பிறர் மெச்சுவதற்காகக் காரியங்கள் செய் யக் கூடாது. கொள்கை ஒன்றுதான் முக்கியம். லட்சியம் நிறைவேறுவதைக் கண்டு களிப்பது ஒன்றுதான் தனக்குப் பரிசென்று அவன் எண்ணவேண்டும். அப்பேர்ப்பட்டவர் கள் மட்டும் சேரட்டும். மற்றவர்கள் வேண்டியதில்லை என்று லெனின் கட்சி கட்டினார். இயக்கத்தைப் பலப்படுத்தக்கூடிய உண்மை ஊழியர்களைத் தயார் செய்யவேண்டும் என்பது லெனின் நோக்கம். உபயோகமற்ற 'வௌவால்' பேர்வழி கள் நூற்றுக் கணக்காய்ச் சேருவதில் லெனினுக்கு நம்பிக்கை

யில்லை. ஆனால், காங்கிரஸில் லெனினுடைய இந்த நோக்கத்துக்கு ஆதரவு இல்லை.

இன்னொரு தீர்மானத்தில் லெனின் கட்சிதான் மெஜாரிடி. ஸோஷல் டெமோக்ராடிக் கட்சிக்கு ருஷியாவில் ஒரு மத்தியக்கமிட்டி இருப்பதோடு, வெளிநாட்டிலும் ஒரு கமிட்டியிருந்து, இஸ்க்ரா முதலிய பத்திரிகைகளை நடத்துவது என்ற தீர்மானத்தை லெனின் கட்சியார் ஆதரித்தனர். பழைய தலைவர்களும் ட்ராட்ஸ்கி முதலியோரும் இதை எதிர்த்துத் தோற்று விட்டனர். இன்னொரு மத்தியக் கமிட்டி ஏற்படுத்தினால் தங்கள் கையில் பூரண அதிகாரம் தங்காது என்ற பயம் அவர்களுக்கு. லெனின் கட்சி ஜெயித்தபடியால் லெனினுக்குப் பூரண அதிகாரம் வந்திருக்கவேண்டும். ஆனால் அப்படி வரவில்லை. அதற்குப் பதிலாக ஸோஷல் டெமோக்ராடிக் கட்சியே போல்ஷிவிக் (மெஜாரிடி) கட்சி என்றும் மேன்ஷிவிக் (மைனாரிடி) கட்சி என்றும் இரு பிளவாகப் பிரிந்துவிட்டது!

இந்தக் காங்கிரஸ் கூடியது ருஷியாவில் அல்ல, லண்டனிலே. வந்திருந்த பிரதிநிதிகள் 57 பேர்தான். அவர்களில் பெரும்பாலோர் தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டவர்களும் ஸைபீரியாவிலிருந்து தப்பி ஓடி வந்தவர்களும்! எப்படி?

3. முதல் புரட்சி — 1905

காங்கிரஸ் நடந்த ஒன்றிரண்டு மாதங்களுக்கெல்லாம் மத்தியக் கமிட்டியிலிருந்து லெனின் ராஜீநாமா செய்து விட்டார். மைனாரிடியும், மெஜாரிடியும் இசைந்து போவதால் கொள்கைகளை இழக்க வேண்டி நேரிடுகிறது என்று கண்ட பிறகுதான் அவர் அப்படிச் செய்தார். இதிலிருந்தே லெனினுக்கு ஜனநாயக முறைகளில் நம்பிக்கை குறைந்துபோய் விட்டது. அதாவது, ஜனநாயகத்துக்கு அநுசரணையாயிருக்கும் தேர்தல், வோட்டு, மெஜாரிடி மூலம் தீர்மானம், பிரதிநிதித்துவ சபைகள் முதலியவற்றையே ஜனநாயகம் என்று நம்புகிறார்களே, அவர்கள் மோசம் போகிறார்கள் என்று தெரிந்து கொண்டார்.

ராஜீநாமா செய்தபின், இரண்டு மாதங்கள் லெனின் ஒரு வேலையுமில்லாமல் பிறர் கைபார்த்துப் பிழைக்கவேண்டி யிருந்தது. ஆனால் கூடிய சீக்கிரத்தில் போல்ஷிவிக் கட்சியைப் பலப்படுத்துவது என்று பல சிநேகிதர்கள் தீர்மானிக்கவே, லெனின் ஜெனீவாவிலிருந்து இன்னொரு பத்திரிகை நடத்த ஆரம்பித்தார்.

இந்தச் சமயத்தில் ருஷியாவின் நிலைமை சற்று மோசமாக ஆரம்பித்தது. ஜார் சக்ரவர்த்தியின் கொடுமைகளைப் பொறுக்கமாட்டாமல், தென் ருஷியாவிலுள்ள தொழிலாளர்கள் அடிக்கடி வேலை நிறுத்தம் செய்தார்கள். வேலை நிறுத்தங்கள் தொழிலாளி-முதலாளிகள் தகராறினால் அவர்கள் சம்பளம், வேலை நேரம் முதலியவை விஷயமாகவும் நேரலாம். அல்லது அரசியல் (தலைவர் கைது செய்யப்பட்டதற்காக, அல்லது வேண்டாத உடன்படிக்கை செய்துகொண்டதற்காக, இத்தியாதி) காரணங்களை முன்னிட்டும் நிகழலாம். ருஷியா

வில் இப்போது அடிக்கடி ராஜீயக் காரணங்களை முன்னிட்டு வேலை நிறுத்தங்கள் நடந்தன.

அடுத்த வருஷத்தில் ஜார், கொரியா சம்பந்தமாக ஜப்பானுடன் போர் தொடுத்தான். இதை ராஜீய வாதிகள் யாவரும் அநாவசியம் என்றே கருதினார்கள். ஜப்பானுடைய பலம் அறியாத ஜாரோ, பொது ஜனங்களுடைய கஷ்டங்களைச் சற்றும் பொருட்படுத்தாமல், யுத்தத்தில் போய் விழுந்தான். ஜப்பான் ருஷியாவைப் புரட்டிப் புரட்டி அடித்தது. கடைசியில் ருஷியா ஜப்பானைக் கெஞ்சிச் சமாதானம் செய்துகொண்டது.

இதன் நடுவே 1905 ஜனவரியில், பல்லாயிரம் ஏழை ஜனங்கள் தங்கள் கஷ்டம் பொறுக்க முடியாமல் கூடி கேப்-பான் என்ற ஒரு பாதிரியார் தலைமையில் ஜார் சக்ரவர்த்தியின் மாரிகால அரண்மனைக்கு ஊர்வலமாகச் சென்றனர். சக்ரவர்த்தியிடம் முறையிடுவதுதான் அவர்கள் நோக்கம். அவர்கள் குறைகளைக் கேட்பதற்குப் பதிலாக அந்தப் பாவி ஜார் என்ன செய்தான் தெரியுமா? தன்னுடைய போர் வீரர்களை நிராயுதர்களான அந்த ஏழைகள்மீது சுடச்சொன்னான். இருநூறு மனிதர்கள் செத்து விழுந்தனர். வெள்ளைப் பனிக்கட்டியால் மூடப்பட்ட பீட்டர்ஸ்பர்க் நிலம் ஏழைகள் இரத்தத்தால் சிவப்பாக மாறியது. அந்தக் கொடிய நாளுக்கு ருஷிய சரித்திரத்தில் 'இரத்த ஞாயிறு' என்றே பெயர் வந்துவிட்டது!

ஜாலியன்வாலாபாக் படுகொலை இந்தியாவைத் தூக்கிவாரிப் போட்டது போல, இந்த நிகழ்ச்சி ருஷியா முழுவதையுமே ஒரு கலக்குக் கலக்கிற்று. தேசத்தின் பல இடங்களிலும் வேலை நிறுத்தங்கள் நடந்தன. பீட்டர்ஸ்பர்க்கிலிருந்த ஸோஷல் டெமொக்ராடிக் ஸ்தாபனம் ஜனங்களை

ஆயுதப் புரட்சிக்கே தூண்டியது. நாடெங்கும் புரட்சி மேகங்கள் சூழ்ந்து கறுத்தன.

லெனின் தூரத்தி லிருந்தபடியே இதை எல்லாம் கூர்ந்து கவனித்தார். பாதிரி கேப்பானை ஜெனீவாவில் சந்தித்துப் பேசினர். நிராயுதர்களான பொதுமக்களை ஆர்ப்பாட்டம் செய்யத் தூண்டுவதால் பலனில்லை என்று கண்டார். கட்டுப்பாடும் பயிற்சியும் உள்ள கட்சியால் ஆயுதப் புரட்சி விளைவிப்பதுதான் சரி, அக்கட்சிக்குச் சாதகமாக ராஜாங்கத்தின் போலீஸ், ராணுவப் படைகளின் மனம் மாறவேண்டும் என்று நிச்சயித்தார். உடனே போல்ஷிவிக் கட்சியாருக்கு வேண்டிய ஆயுதங்களைக்கூடத் தருவித்து ரகசியமாக அனுப்பினர். அதோடு இன்னொரு ஸோஷல் டெமோக்ராடிக் காங்கிரஸை லண்டனில் கூட்டினர். இந்தக் காங்கிரஸுக்குப் பல மென்ஷிவிக்குகள் வரவில்லை. ஆகவே லெனின் கட்சி வலுவாக இருந்தது. இருந்தபோதிலும் ருஷியாவில் அமைக்கப்படும் கமிட்டிகள் ஒவ்வொன்றிலும் அசல் தொழிலாளர்கள் எண்ணிக்கை அதிகமாயிருக்கவேண்டும் என்று லெனின் கூறியதைப் பிரதிநிதிகள் ஏற்கவில்லை.

இதன் மத்தியில் நாட்டிலிருந்த அபாயமான நிலைமை ஜாருக்குக்கூட உறுத்தியது. பொது ஜனங்களுக்கு ஏதாவது சீர்திருத்தம் கொடுத்துச் சமாளிக்க ஜார் நிச்சயித்தான். அவ்வாறே 'டுமா' என்ற ஜனப் பிரதிநிதிகளின் சபை அமைக்கவும் தேர்தல் நடத்தவும் உத்தரவு அளித்தான். தேர்தலும் டுமாவும் நிதானக் கட்சியாருக்கு ரொம்பத் திருப்திகரமா யிருந்தன. நடுத்தர மக்கள் புரட்சியைக் கைவிட்டனர்.

ஏழை மக்களோ? பட்டணங்களிலிருந்த தொழிலாளிகளுக்குக் கூலி போதவில்லை, கிராமங்களில் குடியானவர்களுக்கு உழுவதற்கு நிலமில்லை. ஆகவே ஏழைகள் கதி முன்

போலவேதா னிருந்தது. இவர்களுடைய புரட்சி மனப்பான் மையை உருவாக்கவேண்டிய லெனின் திருட்டுத்தனமாக ருஷியாவுக்குத் திரும்பினர். கோர்க்கி என்ற பிரசித்தி பெற்ற ருஷிய எழுத்தாளர் ஆரம்பித்திருந்த 'நவ ஜீவன்' பத்திரிகை மூலமாகவும், ரகசியக் கூட்டங்கள் மூலமாகவும், மாறுவேஷம் தரித்துப் பொதுக் கூட்டங்களில் பேசியும் லெனின் மிகப் பாடுபட்டார். பீட்டர்ஸ்பர்க்கில் 'தொழிலா ளர் பிரதிநிதிகளின் ஸோவியத்' ஒன்று எங்கிருந்தோ முளைத்தது. (இந்த ஸோவியத்தில் புரட்சி மனப்பான்மை ஆரம்பத்தில் இருக்கவில்லை.) இதில் ட்ராட்ஸ்கியும் ஒரு அங் கத்தினர். லெனினுக்கு இந்த ஸ்தாபனத்தின் அநுகூலங் கள் நன்றாய் விளங்கின. ஆகையால், இந்த ஸோவியத்தில் மென்ஷிவிக் கட்சியாரே வலுத்திருந்த போதிலும் லெனின் ரொம்ப சிரத்தை காட்டினர். அதன் கூட்டங்களுக்கெல் லாம் சென்றார்.

மாஸ்கோவில் வசித்த தொழிலாளர்களிடை லெனின் பிரசாரம் அதிகப் பலன் அளித்தது. பீட்டர்ஸ்பர்க்கி லிருந்த தொழிலாளர்கள் மென்ஷிவிக் கட்சிப் பிரசாரத்தினு லும், அடிக்கடி வேலைநிறுத்தங்கள் செய்து அலுத்துவிட்டத ைலும் ஆயுதப் புரட்சிக்கு ஏற்றவர்களா யில்லை. ஆகவே லெனின் மாஸ்கோவுக்குப் போனர்.

நடுத்தர மக்களையும் நிதானக் கட்சிகளையும் திருப்தி செய்த பிறகு ஜாரின் அரசாங்கம் சும்மாயிருக்கவில்லை. தேசத் தின் பல மூலைகளில் ஜாதிச் சண்டைகளைக் கிளப்பிவிட்டு அடக்கினர்கள். பிறகு, புரட்சித் தொந்தரவுகளுக்குப் புற றுக்களான பீட்டர்ஸ்பர்க்கிலும் மாஸ்கோவிலும் தங்கள் கைப் பலத்தைக் காண்பிக்கத் தொடங்கினர்கள். பீட்டர்ஸ் பர்க் ஸோவியத் சபையின் தலைவர் முதலில் கைது செய்யப்

பட்டார். ஆனால் அதன் பலனாய்க் கலகம் ஒன்றும் நடக்க வில்லை. உடனே அந்த ஸோவியத் சபை அங்கத்தி னர்கள் எல்லாரையுமே அரசாங்கத்தார் கைது செய்தார் கள். அத்துடன் பீட்டர்ஸ்பர்க்கில் புரட்சி இயக்கம் அடங்கிவிட்டது. பிறகு மாஸ்கோ மீது பாய்ந்தார்கள் சர்க்கார். ஆனால் மாஸ்கோ தொழிலாளர்கள் லேசில் அடங்க வில்லை.

அவர்களுடைய ஸோவியத், அரசாங்கத்தை எதிர்த்துப் பொது வேலை நிறுத்தம் செய்தது. மாஸ்கோவிலிருந்த ராணுவம் தொழிலாளருக்குச் சாதகமா யிருக்கவே அச்சபை யினர் இச்சந்தர்ப்பத்தை ஆயுதப் புரட்சியாக மாற்றினார்கள். உடனே தொழிலாளர்கள் நகரிலிருந்த ஆயுதங்களை எல்லாம் கைவசப்படுத்திக்கொண்டு, ரயில்வே ஸ்டேஷனையும் பிடித் துக்கொண்டார்கள். இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு பீட்டர்ஸ்பர்க்கிலிருந்து படைகள் வந்தன. பீரங்கிகள் கொண்டு அந்தப் படைகள் நகரத்தின்மீது சுட்டன. ஐந்து நாட்கள் அப்படைகளுக்கும் தொழிலாளர்களுக்கும் கடுமை யான யுத்தம் நடந்தது. கடைசியில் தொழிலாளர்கள் தோற் றுப்போனார்கள். இவ்விதமாக முடிந்தது 1905-ம் வருஷத்து ருஷியப் புரட்சி.

தொழிலாளர் இயக்கத்துக்கு இத் தோல்வியினால் தாற் காலிகமாகப் பாதகம் ஏற்பட்டது உண்மையே. சுமார் ஆயிரம் பேர்களை விசாரணை யில்லாமல் ஜாரின் அரசாங்கம் மரண தண்டனைக்கு உட்படுத்தியது. எழுபதினாயிரம் பேரைச் சிறையில் அடைத்தது, பதினாலாயிரம் பேர் வரை இந்த எழுச்சிகளால் மாண்டுபோயினர். என்றாலும் லெனின் மனச் சோர்வு அடையவில்லை. இந்த முயற்சியை ஒரு பெரும் படிப்பினையாக அவர் கொண்டார். வாஸ்தவத்தில், பன்னி

ரண்டு வருஷங்களுக்குப் பிறகு நிகழ்ந்த பெரும் பிரளயத்துக்கு இது ஒரு ஒத்திகையே ஆயிற்று. பொது ஜனங்களின் மனப்பான்மையையும் போக்கையும் நெருக்கடியான இந்தச் சந்தர்ப்பத்தில் பக்கத்திலிருந்து உணர்ந்த லெனினுக்கு இந்த அனுபவமே பிற்கால வெற்றிக்குத் துணை புரிந்தது. இன்னும் பிடிவாதமாகவும், ஒழுங்காகவும், விடா முயற்சியுடனும் இயக்கத்தை வலுப்படுத்திச் சரியான காலம், இடம் அறிந்து கிளம்பவேண்டுமென்று லெனின் உறுதி செய்து கொண்டார். மகத்தான லட்சியத்தைச் சாதிக்க மனங்கொண்டவர்களுக்குத் தோல்வியும் முன்னேற்றத்தின் ஒரு படி யாவது சகஜந்தானே.

4. ஜார், ஜாரிணா, ராஸ்புட்டின்

1905-லிருந்து 1914-வரை ஒன்பது வருஷங்கள் லெனின் பழையபடி மறைந்திருந்தும் வெளி நாடுகளி லிருந்தும் ரகசியமாகத் தொழிலாளர் இயக்கத்தை நடத்தி வந்தார். பத்திரிகைகள் ஒன்று போக ஒன்று அவர் விடாமல் போட்டுக்கொண்டே இருந்தார். மாறு வேஷந் தரித்துப் பெரிய பெரிய பொதுக் கூட்டங்களிலும் சிறு சிறு ரகசியக் கூட்டங்களிலும் பேசினார். டூமா தேர்தலில்கூட அபேட்சகர்கள் நிறுத்திப் பார்லிமெண்டரி முறையிலும் இயக்கத்தை வளர்த்துப் பார்த்தார். ஆனால் காலம் சரியாக இல்லை. ஜாரினுடைய போலீஸுக்கு எங்கும் பலம் அதிகமாயிற்று. டூமாவில் தொழிலாளர் கட்சித் தலைவனா யிருந்தவன் போலீஸ் உளவாளி! பீட்டர்ஸ்பர்க் போல்ஷிவிக் கமிட்டி அங்கத்தினர் ஏழு பேரில் மூவர் இரகசியப் போலீஸ் உத்தியோகஸ்தர்கள்! பொது ஜனங்களும் அசட்டையா யிருக்க ஆரம்பித்து விட்டார்கள். நகர வாசிகளான தொழிலாளர்களுக்குக் குடியானவர்கள் இயக்கத்தின் அவசியம் தெரியவில்லை. கார்ல் மார்க்ஸின் அனுபவ சாத்தியமான கொள்கையைப் புறக்கணித்து வெறும் வாய் வேதாந்தம் பேசுபவர்களின் தர்க்கங்கள் அதிகமாயின. ஸோஷல் டெமொக்ராடிக் கட்சிக் குள்ளும் முன்பு மைனாரிடியா யிருந்தவர்கள் (ட்ராட்ஸ்கி முதலியவர்கள்) மெஜாரிடியாக வளர ஆரம்பித்தார்கள்.

லெனின் ஒன்றுக்கும் சளைக்கவில்லை. போலீஸ் தம்மைப் பிடிக்கச் செய்த முயற்சிகளுக்கெல்லாம் தப்பி ஓடிக்கொண்டும், வாய் வேதாந்தக்காரர்களைத் தர்க்கங்களால் அடக்கிக்கொண்டும், தம்முடைய கட்சி ஸ்தாபனங்களைப் பலப்படுத்திக்கொண்டும், வெளி நாடுகளில் நடக்கும் பொதுவுடைமை இயக்கங்களுடன் சம்பந்தம் வைத்துக்கொண்டும் ஓய்வு

ஒழிவின்றி உழைத்தார். கடைசியில் 1912-ல் மென்ஷிவிக் கட்சியை விட்டு போல்ஷிவிக் கட்சியார் தீர்மானமாக விலகிக் கொண்டார்கள்—1907-ல் சூரத் காங்கிரஸில் திலகர் கட்சியாரும் நிதானக் கட்சியாரும் பிரிந்தது போலே. அதன் பிறகுதான் ருஷியாவில் புரட்சி மனப்பான்மை மீண்டும் பலப்பட ஆரம்பித்தது. ஜாரினுடைய ஆட்சியை ஒழித்தால் தான் விடுதலை கிடைக்கும் என்று ருஷிய நாடு முழுவதும் ஏகோபித்து எண்ணத் தலைப்பட்டது. ஆனால், வெண்ணெய் திரண்டு வரும் சமயத்தில் தாழி உடைந்ததுபோல, 1914-ல் தோன்றிய உலக மகா யுத்தம் இந்த முயற்சிகளை யெல்லாம் வீணாக்கி விட்டது!

ஆரம்பத்திலிருந்தே லெனின் மகா யுத்தத்தைக் கண்டித்தார். ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காக இடப்படும் யுத்தம் என்று லெனின் கொஞ்சங்கூட ஏமாறவில்லை. அநேகமாக எல்லா யுத்தங்களுமே பணக்காரர்களுடைய போட்டியாலும் ஏகாதிபத்தியச் சச்சரவாலும் விளைகின்றன என்று அவருக்குத் தெரியும். குறுகிய தேசீய மனப்பான்மையால் ஏழை மக்களுக்கு நன்மை கிடையாதென்றும் அவர் அறிவார். ஆகலால் தொழிலாளர்கள் இந்த முதலாளிகள் சண்டையைப் பயன்படுத்திக்கொண்டு விடுதலை அடையவேண்டும் என்றுதான் அவருக்குத் தோன்றியது.

எல்லாத் தேசங்களிலு மிருந்த தொழிலாளர் இயக்கத் தலைவர்கள் தம்மைப் போலவே எண்ணுவார்கள் என்று லெனின் எதிர்பார்த்தார். அப்படி அவர்கள் செய்யவில்லை. ஜெர்மனியில் ஒன்றிரண்டு தலைவர்களும், இங்கிலாந்தில் டாமஸ் மான், ராம்ஸே மாக்டனல்ட் முதலிய சிலரும் மற்றத் தேசங்களில் ஓரிருவரும்தான் யுத்தத்தில் தொழிலாளர்கள்

சேர வேண்டாமென்று எதிர்த்தார்கள். மற்றவர்கள் எல்லாரும் தேசீய வெறிபிடித்து யுத்தத்தில் இறங்கிவிட்டார்கள்.

யுத்த ஆரம்பத்தில் லெனின் ஆஸ்திரியாவி லிருந்தார். ருஷியா ஆஸ்திரியாவுக்கும் ஜெர்மனிக்கும் எதிர்க் கட்சியில் இருந்தபடியால் ஆஸ்திரியாவிலிருந்த ருஷியர்கள் சந்தேகிக்கப்பட்டார்கள். லெனினை ஒரு ருஷிய ஒற்றன் என்று எண்ணி ஆஸ்திரிய அரசாங்கம் அவரைச் சிறையிலடைத்து விட்டது. நல்ல வேளையாக, ஆஸ்திரிய அபேதவாதிகள் உதவி செய்ய, லெனின் விடுதலை அடைந்தார். அதன் பிறகு அவர் ஸ்விட்ஸர்லந்துக்குப் போனர்.

யுத்தத்தினல் லெனின் ருஷியாவில் நடத்திவந்த வேலைகள் யாவும் தடைப்பட்டன. என்றாலும், இப்போது லெனின் வேறு திஞசாய் உழைக்க ஆரம்பித்தார். யுத்தத்தைத் தொழிலாளர் எவ்விதம் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதைப் பற்றி அவர் அநேகச் சிறு புஸ்தகங்கள் எழுதி அச்சிட்டு மிக்க சிரமத்துடன் அவற்றை ருஷியாவுக்கு அனுப்பி வந்தார்.

லெனின் யோசனைப் பிரகாரம், ருஷியாவில் டூமா பிரதிநிதிகளா யிருந்த போல்ஷிவிக் தலைவர்கள் யுத்த எதிர்ப்பு இயக்கத்தை ஆரம்பித்தார்கள். ஆனல் ஜார் அரசாங்கம் அவர்களை உடனுக்குடனே பிடித்து ஸைபீரியாவுக்கு அனுப்பி விட்டது. யுத்த காலத்துத் தடை யுத்தரவுகளின் பலனாய் கட்சி ஸ்தாபனத்தின் அங்கத்தினர்கள் மிகவும் குறைந்து போனர்கள். கட்சிக்குப் பணமும் இல்லாமற் போய்விட்டது. மிக எளிமையான வாழ்க்கை நடத்தி வந்த லெனினுக்குக்கூட ஜீவனம் நடத்தக் கஷ்டமாயிற்று. அப்பொழுதும்கூட லெனின், நம்பிக்கை குறையாமல், புரட்சி எப்படி

உண்டாக்குவது என்பதைப் பற்றிப் படித்துக்கொண்டும், யோசித்துக்கொண்டும், எழுதிக்கொண்டும் இருந்தார்.

மகா யுத்தத்தில் ஆரம்பத்திலேயே பெருத்த நஷ்ட மடைந்த தேசம் ருஷியாதான். ஜாரினுடைய சேனைத் தலைவர்கள் ஜாரைப் போலவே மகா மூடர்கள். அவர்கள் தங்கள் போர் வீரர்களைத் துப்பாக்கி ரவைகள்கூட இல்லாமல் போர் முனைக்கு அனுப்பினார்கள். போதிய ஆகாரங்களும் அனுப்பவில்லை. ஜெர்மானியப் படைகள் ருஷியப் போர் வீரர்களை ஆயிரக் கணக்காகச் சுட்டுத் தள்ளினார்கள்.

இவ்வாறு அழிந்து கொண்டிருந்த ருஷியப் படைகளுக்கெல்லாம் ஜாரே சேனாதிபதியாகவு மிருந்தான். ஜார் அவனுடைய மனைவி ஜாரினா கைக்குள் அடக்கம். இருவரும் அவர்களைச் சூழ்ந்திருந்த தியர்கள் கைக்குள் அடக்கம். அந்தச் சுற்றுப் படைகளுக்குள்ளே ரொம்பப் பொல்லாதவன் ராஸ்புட்டின் என்ற ஒரு ராவண சந்நியாசி. இவன் தன் 'பூர்விக ஆச்ரமத்தில்' குதிரை திருடி மாட்டிக்கொண்டான். அதிலிருந்து சாமியார் வேஷம் போட்டான். மரியாதையும் செல்வாக்கும் பணமும் நிறையக் கிடைத்தது. தலைமயிரைக் காடாய் வளரவிட்டான். தலைமயிர் வளர வளர இவன் கீர்த்தியும் வளர்ந்து, கடைசியில் ஜாரினா காதுக் கெட்டியது. ஜாரினாவின் பிள்ளை பட்டத்து இளவரசனுக்குத் தீராத ஒரு நோயிருந்தது. அதைத் தன்னால்தான் தீர்க்க முடியும் என்று நம்ப வைத்துவிட்டான் ராஸ்புட்டின். அவ்வளவுதான். ஜாரினாவும் ஜாரும் அவன் இஷ்டப்படியெல்லாம் ஆடினார்கள். அவனுடைய இஷ்டர்களுக்கெல்லாம் உத்யோகம்; விரோதிகளுக்கெல்லாம் தண்டனை. ராஸ்புட்டினுக்கு நாலா பக்கமும் வரும்படி. ஒரு அழகான ஸ்திரீ அவன் கண்ணில் படக்கூடாது; பட்டால் அவள் மானம் போய்விடும். இப்படியாக அட்டகாசம் பண்ணிக்கொண்டு வாழ்ந்தான் ராஸ்புட்டின்.

ராஜசபையைச் சேர்ந்த பிரபுக்களாலும் இந்த அநியாயத்தைச் சகித்திருக்க முடியவில்லை. கலகம் செய்து, ஜார் நிக்கலஸை விரட்டிவிட்டு, வேறு ஜாருக்குப் பட்டம் கட்டுவது என்று கூட அவர்களுக்குள் பேச்சு எழுந்தது. இப்படியிருக்கும்போது, அதாவது 1916-ம் வருஷ முடிவில், ஜார் குடும்பத்தைச் சேர்ந்தவன் ஒருவனே ராஸ்புட்டினைச் சுட்டுக் கொன்றுவிட்டான். சனி ஒழிந்தது என்று எல்லாரும் சந்தோஷித்தார்கள். ஆனால் ஜாரினாவும் ஜாரும் அளவிறந்த கோபத்துடன் குடிகளை இன்னும் வருத்தத் தலைப்பட்டார்கள்.

ஜனங்களுக்கு ஜார்மீது ஆத்திரம் உண்டாயிற்று. வேண்டாத பயங்கரமான யுத்தத்துக்கு அவர்களை வலுக்கட்டாயமாக ராணுவத்தில் சேரச் செய்து, போர்முனையில் ஆயுதமும் ஆகாரமும் இல்லாமல் மடியச் செய்வதை அவர்களால் பொறுக்க முடியவில்லை. உள்நாட்டில் தரித்திரமும் பசியும் பிடுங்கித் தின்றது. ஆனால் பெரிய நகரங்களிலிருந்த சில பணக்காரர்களுக்கு யுத்தத்தினால் இன்னும் அதிகமாகப் பணம் சம்பாதிக்க முடிந்தது. அவர்களும் அவர்களைப் பின்பற்றும் நடுத்தர மக்களும் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்திப் பகைவரைத் தோற்கடிக்க வேண்டும் என்று கூச்சலிட்டார்கள். அதன் பிரகாரம், பெட்ரோகிராடிலும் (பழைய பீட்டர்ஸ்பர்க்) மாஸ்கோவிலும் ஆயுதம், வெடிமருந்துகள் ஏராளமாக உற்பத்தி செய்ய ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் தொழிலாளர்கள் நடுத்தர மக்களுடன் ஒத்துழைக்க மறுத்துவிட்டார்கள். மாஸ்கோவிலும் பெட்ரோகிராடிலும் வேலை நிறுத்தங்கள் தொடர்ந்து நடக்க ஆரம்பித்தன. ஆகாரமில்லாது தவித்தவர்கள் உணவுக்காகக் கலகம் செய்யத் தொடங்கினார்கள். புரட்சி வெள்ளம் போலப் பெருக்கெடுத்தது.

5. பிரளயம் — 1917

1917-ம் வருஷம் மார்ச் மாதம் 8-ம்தேதியிலிருந்து 12-ம் தேதி வரை ஐந்து நாட்களுக்குள் புரட்சி ருஷியாவின் அஸ்தி வாரத்தையே ஆட்டிவிட்டது. இந்தப் புரட்சியின் விசேஷம் என்ன வென்றால், இதற்குத் தலைவர்களே கிடையாது! இன்ன லட்சியத்திற்காக,இன்ன முறைகளில், இன்னார் யோச னைப்படி, இவ்விதக் காரியங்கள் செய்வோம் என்று யாரும் கூட்டம் கூடி ஆலோசித்துச் செய்த புரட்சியன்று. தானாக, அங்கங்கே, ஊற்றுக்கள் போல அடியிலிருந்து கிளம்பிப் பெருக்கெடுத்த புரட்சி இது. ஆனாலும் இவ்வாறு கிளம்பின பெட்ரோகிராட் ஜனங்களை, அறியாத, கட்டுப்பாடில்லாத ஜனங்கள் என்று சொல்லுவதற்கில்லை. அவர்களில் பெரும் பாலார் யந்திரசாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள். லெனின் முதலிய புரட்சித் தலைவர்களிடம் மார்க்ஸின் தத்து வங்களையும் அபேதவாதக் கொள்கைகளையும் கற்றவர்கள். வெறுங் கலகம் விளைவித்தும், கல்லெறிந்தும், தீ வைத்தும் அழிக்கப் புறப்பட்ட ஜனங்கள் இல்லை.

மார்ச் 8-ம் தேதி யன்று புரட்சி தலையெடுத்தது. ஸ்திரீ கள்தான் அதை ஆரம்பித்தார்கள். நெசவு மில்களில் வேலை பார்க்கும் ஸ்திரீகள் தெருக்களில் ஊர்வலம் சென்று ஆர்ப் பாட்டம் செய்தனர். அடுத்த நாள் எங்கும் வேலை நிறுத்தம் பரவியது. ஆண்களும் பெண்களோடு சேர்ந்து ஆர்ப்பாட் டம் செய்தனர். "உணவு தா!" என்றும் "யதேச்சாதிகாரம் ஒழிக!" என்றும் கூச்சலிட்டார்கள். அரசாங்கம் துருப்புக் களை அவர்கள் மீது சடும்படி எவினது. துருப்புக்கள் தொழி லாளர்களை அங்குமிங்கும் தள்ளினார்களே தவிர துப்பாக்கி எடுத்துச் சுடவே இல்லை. சிப்பாய்களுக்குத் தங்களிடம்



லெனின்

[1922-ல் எடுக்கப்பட்ட புகைப்படம்]

அனுதாபம் இருக்கிறதென்பதை ஜனங்கள் உணரவும் அவர்களுடைய உற்சாகம் பீறிட்டெழுந்தது. மறுநாள் அரசாங்கத்தார் போலீஸை அனுப்பிக் கலகத்தை அடக்கப் பார்த்தார்கள். அதுவும் முடியவில்லை. ஜனங்கள் மீது சுட்ட போலீஸாரைச் சிப்பாய்கள் சுட்டு விரட்டியதாக வதந்தி உலவியது. பாட்டாளி மக்களும் ராணுவத்தாரும் குலவிக் கூடிக் கொண்டார்கள்.

அடுத்த இரண்டு நாட்களில் நிலைமை உறுதிப்பட்டு விட்டது. இருபத்தையாயிரம் துருப்புக்கள் கலகக்காரருடன் சேர்ந்து போலீஸ்காரர் மீது சுட ஆரம்பித்தனர். பெட்ரோகிராட் முழுவதும் ஒரே குழப்பம். எல்லாத் தெருக்களிலும் துப்பாக்கிகள், மிஷின் பீரங்கிகள் சுட்டுக்கொண்டே இருந்தன. யார் யாரைச் சுடுகிறார்கள் என்று ஒருவருக்கும் விளங்கவில்லை.

இத்தனை தடபுடலில் ஜார் எங்கே தெரியுமா? அவர் அச்சமயம் பெட்ரோகிராடில் இல்லை. சேனாதிபதி என்ற ஹோதாவில் வேறொரு சிறு பட்டணத்திலிருந்தார். பெட்ரோகிராடில் குழப்பமாகிறது என்று கேள்விப்படவும், வேலை நிறுத்தங்கள் கூடாதென்றும், தெருக்களில் கூட்டங் கூடக் கூடாதென்றும் அவர் உத்தரவுகள் அனுப்பினார். ஜனங்கள் அவற்றைச் சட்டை செய்யவில்லை. பிறகு பெட்ரோகிராட் பூராவும் ராணுவச் சட்டம் பிறப்பித்திருப்பதாக அறிவித்தார். அவ்வுத்தரவுகளை ஜனங்களுக்கு அறிவிப்பது எப்படி? தண்டோரா போட, அல்லது நோட்டீஸ் அடித்துச் சுவர்களில் ஒட்ட யார் இருந்தார்கள்? பெட்ரோகிராடில் அரசாங்கமே இல்லை. ஆனால் ஜாருக்கு இதெல்லாம் ஒன்றும் தெரியாது. அவர் பெட்ரோகிராட் திரும்பி வருவதற்கு முயற்சி பண்ணிக் கொண்டிருந்தார். அவர் புறப்பட்டு வந்த ரயில் வண்டியை

ரயில்வே தொழிலாளர்கள் மேலே செல்லவொட்டாமல் தடுத்து நிறுத்திவிட்டார்கள். ஜாரின் மனைவி பெட்ரோ கிராட் பக்கத்திலேயே இருந்தாள். கலகம் நடப்பது தெரிந்து அவள் ஜாருக்குத் தந்தி அடித்தாள். அத் தந்தி யைத் தந்தி ஆபீஸ்காரர் "விலாசதார் போன இடம் தெரிய வில்லை" என்று திருப்பிக் கொடுத்து விட்டார்கள்.

இதன் மத்தியில் மார்ச் 12-ம் தேதியன்று ஒரு பெரிய கூட்டம் அரண்மனையை நோக்கிப் புறப்பட்டது. மந்திரிகள் எல்லாரும் நடுநடுங்கிப் போய்த் தத்தம் ராஜீநாமாவைக் கொடுத்துவிட்டுத் தப்பிக்கப் பார்த்தார்கள். பெட்ரோகிரா டில் அரசாங்கம் ஒழிந்தது. அடுத்தபடியாக மாஸ்கோவில் அதே முடிவு. அகில ருஷியாவிலுமிருந்த கிராமத்தார்கள் இப்புரட்சியைப் பற்றிக் கேள்விப்பட்டார்கள். ஆனால் அவர் கள் இதைப் பற்றி அதிக சிரத்தை காட்டவில்லை.

போர்முனையிலிருந்த சேனைத் தலைவர்களும், பெட்ரோ கிராடிலிருந்த மிதவாதிகளும் புரட்சி வெள்ளம் கழுத்துக்கு வந்துவிட்டதை அறிந்து அஞ்சலானார்கள். 'மூச்சு முட்டிப் போகாமல் காப்பாற்றிக் கொள்ளுவோம்' என்ற நோக்கத் துடன் அவர்கள் ஜாரைப் பட்டம் துறந்துவிடும்படி கெஞ்சி னார்கள். வேண்டா வெறுப்புடன் ஜார் சம்மதித்தார். தனக்குப் பின் ஜாராக இன்னார் வரவேண்டும் என்றும் நியமித்தார். பாவம், ருஷியாவில் இனி ஜார்களே தலை எடுக்க முடியாது என்று அவருக்குத் தெரியவில்லை.

திடீரென்று தோன்றிய இந்தப் புரட்சி மேல் வகுப் பார் மனத்தில் திகில் உண்டாக்கியது. பிரபுக்கள் குலத்தாரும் நிலச்சுவான்தார்களும், நடுத்தர மக்களும், மிதவாதிகளும் தங்களை இதுவரை வேலிபோல் காத்துவந்த ராணுவத் துருப்புக்கள் கலகக்காரருடன் சேர்ந்து புரட்சி செய்வதைக்

கண்டு செயலிழந்தார்கள். எந்தக் கட்சி ஜெயிக்குமென்றும் அவர்களால் நிச்சயம் சொல்ல முடியவில்லை. போர்முனையி லிருந்து பட்டாளங்களுடன் ஜார் ஒரு வேளை திரும்பி வந்து கலகத்தை அடக்கி விடலாம். ஒரு பக்கம் புரட்சியைப் பற் றிப் பயம். இன்னொரு புறம் ஜாரிடம் பயம். அவர்களு டைய பிரதிநிதிகளான டூமா சபை மெம்பர்களுக்கும் அதே மன நிலைதான். அவர்கள் எல்லாரும் நடுங்கிக்கொண்டிருந் தார்கள்.

தொழிலாளர்கள் ஸோவியத் கொஞ்சம் கொஞ்சமாய் வலுத்தது. அந்தச் சபையில் தொழிலாளர் பிரதிநிதிகளோடு துருப்புக்கள் பிரதிநிதிகளுக்கும் இடம் கிடைத்தது. புரட்சி யின் ஜயத்தால் வந்த உற்சாகத்துடன் இந்த ஸோவியத், டூமா சபையிருந்த அரண்மனையில் ஒரு பாகத்தை வசப்படுத் திக்கொண்டு, அங்கு கூட ஆரம்பித்தது. ஆனால் அடுத்தாற் போல என்ன செய்வதென்று அதற்குத் தெரியவில்லை. ஜாருடைய அரசாங்கத்தை ஒழித்தாகிவிட்டது. அதற்கு மேல் தானே அதிகாரத்தை மேற்கொள்ளுவது என்று ஸோவியத்துக்குத் தோன்றவில்லை. டூமா சபை ஆளட்டுமே என்றுதான் அது எண்ணிற்று. அதற்காக ஒரு தூதுக் கோஷ்டியை டூமா சபைக்கு ஸோவியத் அனுப்பியது.

இந்தத் தூதுக் கோஷ்டியார் தங்களைக் கைதுசெய்ய வருகிறார்களென்று டூமா பிரதிநிதிகள் முதலில் எண்ணினார் கள்! அவர்களுக்கும் ஆட்சிப் பொறுப்பை எடுத்துக்கொள் ளத் தைரியம் இல்லை. ஆனால் ஸோவியத் கட்டாயத்தின் பேரில், டூமா அதை ஏற்றுக்கொண்டு, ஒரு கமிட்டி கையில் அதிகாரத்தை ஒப்படைத்தது. யாரோ புரட்சி செய்ய, யாருக்கோ அதிகாரம் போய்ச் சேர்ந்தது!

டுமா நியமித்த தாற்காலிக அரசாங்கம் மிக்க மோசமானது. அதன் தலைவர் (அதாவது பிரதம மந்திரி) ஒரு சிற்றரசர். மந்திரி சபையில் பல்வேறு கட்சிகளுக்கும் பிரதிநிதித்துவம் உண்டு. இந்த சர்க்கார் இருந்த கட்டடத்திலேயே ஸோவியத்தும் உட்கார்ந்து, அதிகாரஞ்செலுத்திக்கொண்டும், சர்க்கார் வேலைகளில் அடிக்கடி தலையிட்டுக்கொண்டும் இருந்தது. ஸோவியத் சபையில் போல்ஷிவிக்குகள் அதிகமாகவும் இல்லை. இந்த இரு சபைகளும் என்ன செய்யப்போகின்றன என்று கவனித்துக்கொண்டிருந்தனர், புரட்சி செய்து அதிகாரத்தை மாற்றிய பாட்டாளி மக்கள்!

ஐரோப்பாக் கண்டத்துக்குள்ளே ருஷியாதான் மிகப் பெரிய தேசம். நெடுங்காலமாக இந்தப் பெரிய தேசத்தை இஷ்டம்போல் ஆண்டுவந்தார்கள் ஜார்கள். ஜாருக்கும் பணக்காரர்களுக்கும் உதவியாக ராணுவமும் போலீஸும் நின்று காத்து வந்தன. ஜாரின் யதேச்சாதிகாரம் ஒழிவதுதான் விடுதலையின் ஆரம்பம் என்று எல்லாரும் அறிவார்கள். ஆனால் ஜாரை இலேசில் ஒழிக்க முடியும் என்று யாரும் நம்பவேயில்லை. அரசர்கள் திமுதிமுவென்று விழுந்து மறைவது மகா யுத்தத்தின் பிறகே சாதாரண நிகழ்ச்சியாயிற்று. அதற்குமுன் ஒரு ராஜாவை அகற்றுவதென்பது பிரமப் பிரயத்தனம்தான். மேலும் ருஷியா மற்ற தேசங்களைப் போல் கல்வியிலோ, வர்த்தகத்திலோ, தொழிலிலோ முன்னேற்றமடையவில்லை. ஆதலால் கார்ல் மார்க்ஸ் சிஷ்யர்கள் ஐரோப்பாவிலேயே கடைசியாகத்தான் ருஷியாவில் புரட்சி நடக்கும் என்று எதிர்பார்த்தார்கள்.

புரட்சித் தலைவர்கள் எல்லோருக்கும் இன்னொரு விசித்திரமான நம்பிக்கை-கார்ல் மார்க்ஸ் எழுதி வைத்தபடியேதான் புரட்சி நடக்கும் என்று. அதாவது, யதேச்சாதிகாரம் ஒழிந்த

பிறகு நடுத்தர மக்களின் பார்லிமெண்டரி ஆட்சி, அதற்கப் புறம் கடைசியாகத் தொழிலாளர் ஆட்சி—இந்த முறைப்படி தான் புரட்சிகள் நிகழும், நிகழவேண்டும் என்று லெனின் கூட எழுதியிருந்தார். இவ்வாறெல்லாம் தாங்கள் படித்தபடி தான் புரட்சி இயக்கம் செல்லவேண்டுமென்று தொழிலாளர் தலைவர்கள் ஸோவியத் கைக்கு வந்த அதிகாரத்தைக் கொண்டு போய் டூமா கையில் கொடுத்தார்கள்!

புரட்சி நடக்கும்பொழுதே ருஷியாவுக்குப் போய்விட வேண்டும் என்று லெனின் துடித்துக்கொண்டுதா னிருந்தார். ஆனால் ஸ்விட்ஸர்லந்திலிருந்து ருஷியா போவதென்றால் விரோதிகள் நாடு வழியாகச் செல்லவேண்டும். மகா யுத்தம் ரொம்பப் பலமாக நடந்துகொண்டிருந்தது. லெனின் என்னெல்லாமோ முயற்சிகள் செய்தும் ஒன்றும் பயன்படவில்லை. கடைசியில், ஜெர்மன் ராணுவத் தலைவர் லுடன்டார்ப் லெனினையும் அவருடைய சகாக்களையும் ஜெர்மனி வழியாக அனுமதிக்க உடன்பட்டார். ருஷியாவில் யுத்தத்தை எதிர்த்துக் குழப்பம் ஏற்பட்டால் ஒரு விரோதியின் உபத்திரவம் குறையும் என்பது லுடன்டார்ப் நோக்கம். ஆனால் லெனினும் மற்ற அபேதவாதிகளும் ஜெர்மனி வழியாகச் செல்லும் போது அவர்கள் 'ஸீல்' வைக்கப்பட்ட வண்டியில்தான் போகலாம் என்று அவர் நிபந்தனையிட்டார். அதன்படியே லெனினும் அவருடைய தோழர்களுமாய் 'ஸீல்' வைத்த ஒரு ரயில் வண்டியில் அனுப்பப்பட்டனர். லெனின் அத்தனை அபாயகரமான பேர்வழி, அவரை வெளியே தலைகாட்டவிட்டால் புரட்சிக் குண்டு வெடித்துவிடும் என்று அவர்கள் பயந்தார்கள்!

ஏப்ரல் 16-ம் தேதியன்று பெட்ரோகிராட் ரயில்வே ஸ்டேஷனில் லெனினுக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்

பட்டது. தங்களுக்கு அவரால்தான் கதிமோட்சம் என்று அறிந்தது போல, புரட்சிக்குக் காரணமாயிருந்த பாட்டாளி மக்கள் இற்றுப்போன உடையணிந்த லெனினை உற்சாகத் துடன் வரவேற்றார்கள். ஸ்டேஷன் வாசலில் ஒரு பீரங்கி மோட்டார் நின்றது. அதன்மேல் ஏறி நின்றார் லெனின். "சமூகப் புரட்சி நீடூழி வாழ்க! தொழிலாளர் ஸோவியத் துக்கு ஜே! பாட்டாளி மக்களே! உங்களிடமிருந்து பறிக்கப் பட்டதை எல்லாம் திரும்ப எடுத்துக் கொள்ளுங்கள்!" என்று கூவினார். ஜனங்கள் இந்தக் கோஷத்தை ஏற்றுக் கொண்டு லெனினை ஸோவியத் காரியாலய மிருந்த அரண் மனைக்கு அழைத்துச் சென்றார்கள்.

லெனினுக்குப் பாட்டாளி மக்களின் ஆதரவு நிறைய இருந்தது. ஆனால் அவர் கட்சிக்கு ஸோவியத்தில் ஆதரவு இல்லை. ஸோவியத்திலும் டுமாவிலும், யுத்தத்தை நீடித்து நடத்தவும், நடுத்தர மக்களின் ஜனநாயக ஆட்சியை ஸ்தாபிக்க வும் விரும்பியவர்களே பெருவாரியாக இருந்தனர். போல்ஷி விக் கட்சியைச் சேர்ந்த ஸ்டாலினும் காமனீவும் லெனின் வருவதற்கு முன் ஸோவியத் தங்கள் கொள்கைகளை ஏற்கு மாறு என்ன பாடுபட்டும் பயனில்லை. தங்கள் கட்சிக்குப் பலங் குறைவதால் உடனே வரவேண்டும் என்று அவர்கள் லெனி னுக்குத் தந்திபடித்திருந்தார்கள். ஏப்ரல் 12-ம் தேதி நடந்த ஸோவியத் கூட்டத்தில் போல்ஷிவிக் கட்சிக்கு 57 வோட்டும் எதிர்க் கட்சிக்கு 325 வோட்டும் கிடைத்தது.

லெனின் இதனால் சற்றும் பயப்படவில்லை. திரும்பி வந்த நாளன்றே பெரிய ஒரு கூட்டத்தில் அவர் பேசினார். ஆதரவு இல்லாது போனாலும் சரி, கொள்கைகளை விடக் கூடாது என்று பிடிவாதமாக ஒரே நிலையில் நின்றார். அவர் ஒருவருக் குத்தான் தொழிலாளர் ஆட்சியை ஸ்தாபிக்கச் சந்தர்ப்பம்

வந்துவிட்டது என்று ஸ்பஷ்டமாகத் தெரிந்தது. ஏட்டுச் சுரைக்காய் வாதம் செய்கின்ற அபேதவாதிகளைப் போலன்றி, அனுபவத்தில் தங்கள் லட்சியங்களைப் பூர்த்தி செய்து கொள்ள வாய்த்த தருணம் இதுவே என்று அவருடைய அசாதாரணமான புத்தியில் பட்டது. ஆகையால் ஸோவி யத்தே அரசாங்கப் பொறுப்பை ஏற்கவேண்டும் என்றார் லெனின். நடுத்தர மக்களின் ஜனநாயக ஆட்சிக்குப் பிறகு தான் தொழிலாளர் ஆட்சி வரவேண்டும் என்று காத்திருப் பது முட்டாள்தனம் என்று எடுத்துக் காட்டினார். "இப் பொழுதே ஒரே தாவாகத் தாவிப் பொதுவுடைமை ஆட்சியை ஸ்தாபிப்போம்" என்றார். இப்பேர்ப்பட்ட அசாத்தியமான காரியத்தை, வெறும் ஆதர்ஸமாய், கனவாய், சிந்தனை உலகத் தில் மட்டும் இருந்த கருத்தை இப்பொழுதே சாதிக்கலாம் என்ற தைரியமும், சாதிக்க வேண்டும் என்ற பிடிவாதமும், சாதிக்கும் வழி இது என்று அறிந்து சொல்லும் கூர்மை யான புத்தி சாமர்த்தியமும் வேறு யாருக்குமே இல்லை. மேலும், இச்சாதனைக்கு அநுகூலமாக, சமாதானம் பண்ணிக் கொண்டு, முதலாளிகளின் யுத்தத்திலிருந்து ருஷியா விலகி விடவேண்டும் என்றும் லெனின் சொன்னார்.

லட்சக் கணக்காகப் போர் முனையில் சாகக் கொடுத்த பொது ஜனங்கள், யுத்தத்தினால் ஒருவித லாபமும் பெறாத பாட்டாளி மக்கள், பசியாலும் வறுமையாலும் துடிக்கும் சாதாரணக் குடியானவர்கள், தொழிலாளர்கள், "இன்னும் யுத்தம் நடக்கவேண்டும், நாங்கள் இன்னும் இரத்தம் சிந்த வும் பட்டினி கிடக்கவும் தயார்" என்று இதயபூர்வமாகச் சொல்லமாட்டார்கள் என்று லெனினுக்குத் தெரியும். அவர் களுக்கு வேண்டியது உணவு, நிலம், தொழில், பிழைப்பு, மூச்சு விடச் சற்று அவகாசம், இவ்வளவுதான்.

ஆனால் உடம்பு சரியாயில்லாதவர்கள் தங்களுக்கு இன்னது செய்கிறது என்று சொல்லத் தெரியாமல் விழிப்பதைப் போல், பொதுஜனங்களுக்குந் தங்களுக்கு வேண்டியது என்ன என்று தெளிவாய்ச் சந்தேகத்துக் கிடமில்லாமல் சொல்லத் தெரியவில்லை. ஆயிரக் கணக்கான வருஷங்களாக அவர்கள் ஊமையா யிருந்தவர்களல்லவா? லெனின், கை தேர்ந்த வைத்தியரைப் போல, அவர்களுடைய நோய் இன்னதென்றும், சிகிச்சை இவ்வாறு செய்ய வேண்டும் என்றும் கண்டுகொண்டார்.

லெனின் கூறியதை மற்ற வைத்தியர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. போல்ஷிவிக் கட்சியாருக்குக்கூடத் தங்கள் தலைவர் லெனின் கூறுவது சரிதானு, சாத்தியமா என்று சந்தேகமாகவே யிருந்தது. ஸோஷல் டெமொக்ராடிக் கட்சியின் பழைய தலைவர் ப்லெக்கனேவ், "லெனினுக்குப் பைத்தியம் முற்றிவிட்டது. ஜன்னி கண்டவனைப் போல் உளறுகிறார்" என்றார். மென்ஷிவிக் கட்சியார் லெனின் வற்புறுத்தும் புரட்சிக்கு இப்போது அவசியமில்லை என்றார்கள். மற்றவர்களுக்கோ லெனின் பேச்சில் பயங்கரமான அபாயம் இருப்பதுதான் தெரிந்தது.

தம்முடைய கட்சியாரையே திருப்பவேண்டிய வேலை லெனினுடைய முதல் கடமையாயிற்று. ஸ்டாலின், காமனீவ் முதலிய தோழர்கள் லெனினிடம் வைத்திருந்த அபார நம்பிக்கையால் அவரை ஆதரித்தார்கள். ஒரு மாதத்தில் ட்ராட்ஸ்கி கனடாவிலிருந்து வந்து சேர்ந்தார். இதற்குமுன் ட்ராட்ஸ்கி லெனினுக்கு விரோதமாயிருந்த மென்ஷிவிக் கட்சியிலிருந்தபோதிலும் இப்போது லெனினுடைய வாதங்களை ஒப்புக்கொண்டு ஒத்துழைக்கலானார். இருவரும் பொது ஜனங்களிடமும் தொழிலாளர்களிடமும் பிரசாரம் செய்ய

லானார்கள். "ஸோவியத்துக்கு அதிகாரம்! குடியானவருக்கு நிலம்! பசித்தவருக்குச் சாப்பாடு! ஜனங்களுக்குச் சமாதானம்!" என்ற முழக்கங்களுடன் பிரசாரம் ஆரம்பித்தது. எதிராளிகளின் வாதங்களை லெனின் பிய்த்துப் பிய்த்து அலசி வெறும் சக்கை என்று ஊதித் தள்ளினார். அவருடைய தோழர் ட்ராட்ஸ்கி உணர்ச்சி ததும்பும் தம்முடைய பேச்சு வெள்ளத்தினால் கேட்பவருடைய மனங்களை இழுத்துச் செல்லலானார்.

பெட்ரோகிராடின் நிலைமை லெனினுக்கு ரொம்பச் சௌகரியமாயிருந்தது. அங்கே அந்த நாட்களில் ஒரு நிமிஷம் இருந்தாற்போல இன்னொரு நிமிஷமிராது. கட்டும் காவலும் ஒழிந்துவிட்டபடியால் எந்தவிதமான ஒழுங்கும் கிடையாது. கவர்மெண்டுக்கு அதிகாரம் கிடையாது. ஜனங்கள் என்ன செய்தாலும் ஏனென்று கேட்பவரில்லை. யாரிடம் பலமிருந்ததோ அவன் வைத்தது சட்டம். கலகம் செய்து மீறிவிட்ட போர்வீரர்கள் இஷ்டம்போல் தெருக்களில் சுற்றினார்கள். அவர்களுக்கு கவர்மெண்டு ஒரு உத்தரவிடும். அவர்களுடைய ஸோவியத் இன்னொரு உத்தரவிடும். ஒரு உத்தரவுப்படியும் அவர்கள் நடக்கமாட்டார்கள். தண்டனை என்ற பயமிருந்தால்தானே? குடிப்பதும், அடிப்பதும், கொள்ளையிடுவதும் மிதமிஞ்சிப் போய்விட்டது. தெருக்களில் சேனாதிபதிகளையும் மந்திரிகளையும் இடித்துத் தள்ளிக்கொண்டு போர்வீரர்கள் கேள்வி முறையில்லாமல் சுற்றினார்கள். "அதிகாரமெல்லாம் உங்களுக்குத்தான்" என்று லெனினும் ட்ராட்ஸ்கியும் சொல்லும்போது அவர்கள் சந்தோஷமாய் ஆரவாரம் செய்தார்கள். அவர்களுக்கிருந்த உற்சாகத்தையும் உணர்ச்சியையும் ட்ராட்ஸ்கி மிக அழகாக வர்ணித்திருக்கிறார். 'மாடர்ன் சர்க்கஸ்' என்ற கட்டடத்தில்

நடந்த ஒரு கூட்டத்தைப் பற்றி அவர் இவ்வாறு எழுதுகிறார் :

"........அங்கே எழுந்த இரைச்சலும் ஆவேசக் கூச்சலும் வானத்தையே பிளந்துவிடும் போலிருந்தது. என்னைச் சுற்றிலும் தலைக்கு மேலும்கூட, ஒரே நெருக்கம்—எங்கு பார்த்தாலும் முழங்கை, மார்பு, தலைகளாய்த்தா னிருந்தன. நான் எங்கிருந்து பேசினேன்? மனித உடம்புகளாலான ஒரு குகைக்குள்ளிருந்து—தேசச் குட்டின் புழுக்க நடுவிலிருந்து. பேசும்போது கையை நீட்டி விடுவேன், யார் மேலாவது படும். அவர் நெளிவும் அசைவும் 'பரவாயில்லை, பேச்சை நிறுத்தாதே, மேலே சொல்லு' என்பதுபோ லிருக்கும். பேசிப் பேசிக் களைத்துப் போனவருக்குக்கூட அந்த ஆவேசக் கூட்டத்துக்குள் வந்துவிட்டால் மின்சார சக்தி ஏறுவதுபோல் மிகு ஏறிவிடும். ஜனங்களுக்கெல்லாம் ஒரே ஆவல்—'என்ன நடக்கிறது, ஏன் நடக்கிறது, நாங்கள் எந்த வழியிலே போக?' என்று தெரிந்துகொள்ள ஆசை. ஒவ்வொரு சமயம் கூட்டத்திலிருந்தவர்களுடைய ஆவல் எல்லாம் ஒன்றாய்த் திரண்டு என் வாய்க்குள் பாய்ந்துவிட்டது போல எனக்குத் தோன்றும். அப்போது நான் சொல்லவேண்டும் என்று யோசித்து வைத்திருந்த வாதங்களும் வார்த்தைகளும் எங்கோ ஓடிப்போய், நான் எண்ணாத வார்த்தைகளும் வாதங்களும் என்னையறியாமலே என் வாயினின்று புறப்படும். அவை எனக்குள்ளே எங்கேதா னிருந்தனவோ? கூட்டத்தின் உணர்ச்சி எனக்குள் புகுந்து அவற்றைக் கிளப்பி யிருக்கவேண்டும். அந்த வார்த்தைகள்தான் அவர்கள் கேட்க விரும்பியது! அவற்றை நான் சொல்லும்போது நான் பேசுவதுபோலே எனக்குத் தோன்றவே தோன்றாது! வேறே யாரோ பேசுவதைக் கேட்டுப் புரிந்துகொள்வது போல இருக்கும்! அதோடு எனக்குப் பயமாகவும் இருக்கும். பேசுகிறவன் தூக்கத்திலே முகட்டின்மேலே நடக்கிறான், அவனைக் கலைத்தோமோ, விழுந்து சிதறிப்போவான் என்று பகுத்தறிவை அடக்கிக்கொள்வேன்."

இவ்வாறு பொது ஜனங்களுடைய உள்ளத்தை உணர்ந்து பேசி லெனினும் ட்ராட்ஸ்கியும் பிரசாரம் செய்தனர். தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கு எட்டு மணி நேர வேலை, குடியானவர்களுக்கு நிலங்கள் எல்லாம் சொந்தம், யுத்தத்தை நிறுத்திப் போர்வீரர்கள் சாகாமல் காப்பாற்றுவது என்ற திட்டங்களைப் போல்ஷிவிக் கட்சியார் மேற்கொண்டனர். ஆனால் தாற்காலிகமாக ஏற்படுத்தப்பட்ட மந்திரி சபையால் இத்திட்டங்களை ஏற்கக் கூடவில்லை. இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய நேச தேசங்கள் ருஷிய அரசாங்கம் தீவிரமாக யுத்தத்தில் ஈடுபடும்படி தூண்டின. நிலமும் பணமும் வைத்துக் கொண்டிருந்தவர்கள் தங்கள் சொத்துக்களைப் பொதுமக்களுக்குத் தானம் பண்ணச் சம்மதிக்கவுமில்லை. கொஞ்சம் கொஞ்சமாக மந்திரி சபைக்கும் ஸோவியத்துக்கும் விரோதம் வளர்ந்தது. மந்திரிசபைக்கு ஸோவியத்தினிடம் பயம்; ஸோவியத்துக்குப் பொது ஜனங்களிடமும் அவர்களைத் தூண்டும் போல்ஷிவிக்கர்களான லெனின் முதலியோரிடமும் பயம்.

ஸோவியத்தைச் சற்று அநுசரித்துச் செல்லக்கூடிய வகையில் மந்திரி சபை மாற்றி அமைக்கப்பட்டது. இந்த மந்திரி சபையில் கெரன்ஸ்கி என்ற வக்கீல் முக்கியஸ்தரானார். இவர் பேச்சுத் திறமையில் சிறந்தவர். இவருடைய சாமர்த்தியத்தினால் லெனின் முயற்சித்த பொதுவுடைமைப் புரட்சி சற்று தடைப்பட்டது. கொஞ்சம் கொஞ்சமாக கெரன்ஸ்கியின் செல்வாக்கு அதிகரித்தது. பணக்காரர்களும் நடுத்தர மக்களும் அறிவாளிகளும் இவருக்கு ஆதரவு கொடுக்க ஆரம்பித்தனர். முடி துறந்த ஜார்கூட, "ருஷியா அழிந்துவிடாமல் காப்பாற்றக்கூடியவர் கெரன்ஸ்கி ஒருவர்தான்" என்று தமது டயரியில் குறித்துக் கொண்டார்.

கெரன்ஸ்கி யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த ஆரம்பித்தார். பெட்ரோகிராட் ஜனங்களிடை திறமையாகப் பேசிப் பேசி மழுப்பினர். பழைய முறையில் கவர்ன்மெண்டு நடக்க ஆரம்பித்தது.

ஆனல் புரட்சிக்குக் காரணஸ்தரா யிருந்த பொதுமக்களிடம் அதிருப்தி அதிகமாயிற்று. குடியானவர்களும் துருப்புக்களும் யுத்தமிடத் தயாரா யில்லை. நாடெங்கும் ஒவ்வொரு பட்டணத்திலும் ஸோவியத்துக்கள் ஏற்பட்டன. அகில ருஷ்ய ஸோவியத்துக்களின் காங்கிரஸ்கள் அடிக்கடி கூட ஆரம்பித்தன. அவற்றிற்கெல்லாம் போல்ஷிவிக் கட்சியாரே பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஸோவியத் சரி என்று ஒழிய ஜனங்கள் சர்க்கார் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிய மறுக்கலானர்கள்!

இவ்வாறு இரட்டை ஆட்சி நடைபெறும்போது குடியானவர்கள் சுயேச்சையாக நடக்க ஆரம்பித்தார்கள். மார்ச் மாதம் பெட்ரோகிராடிலும் மாஸ்கோவிலும் நடந்த புரட்சியின்போது அவர்கள் சும்மாவிருந்து கவனித்தார்கள். ஆனல் அதன் பிறகு நிலச்சுவான்தார்கள் செய்த காரியம் அவர்களுக்கு ஆத்திரமூட்டியது. பெரிய பெரிய நிலச்சுவான்தார்கள் தங்கள் நிலங்களை அயலாருக்கும் பிணமிகளுக்கும் விற்க ஆரம்பித்தனர். விற்பனையே கூடாதென்று தடுக்கும்படி குடியானவர்கள் அரசாங்கத்துக்கு மனுச் செய்தார்கள். அரசாங்கம் இரு கட்சியையும் பகைத்துக் கொள்ளப் பயந்து சும்மாவிருந்தது. குடியானவர்கள் தைரியம் கொண்டு சுவான்தார்களிடமிருந்து நிலங்களைப் பிடுங்கிப் பகிர்ந்து கொண்டார்கள். போர் முனையிலிருந்து திரும்பிய குடியானவர்கள் இவ்வியக்கத்தில் தலைமை வகித்தார்கள். வெகு தூரத்திலிருந்த ஸைபீரியாவில்கூட இப்புரட்சி நடந்துவிட்டது.

அங்கு அநேகமாய் நிலம் யாவும் மடங்களுக்கும் சர்ச்சுகளுக்கும் சொந்தம்.

குடியானவர்களுக்கே நிலங்களை எல்லாம் அரசாங்கம் பகிர்ந்து கொடுத்துவிடவேண்டும் என்று லெனின் பெட்ரோகிராடில் சொல்லிக் கொண்டிருக்கும்போது, அவருடைய உதவியோ, போல்ஷிவிக் கட்சியாரின் உதவியோ இல்லாமல், தாமாகவே குடியானவர்கள் இவ்வாறு ருஷியாவெங்கும் நிலங்களைச் சுவாதீனப்படுத்திக் கொண்டுவிட்டார்கள்!

இதிலிருந்து, பொது மக்களுடைய உண்மையான விருப்பத்தை எவ்வளவு தூரம் லெனின் உணர்ந்திருந்தார் என்று தெரிகிறதல்லவா?

போர்வீரர்களுடைய உணர்ச்சியும் லெனின் கூறிய படியேதா னிருந்தது. அரசாங்கமும் கெரன்ஸ்கியும் எவ்வளவு தூண்டினாலும் துருப்புக்கள் சண்டைபோட மறுத்தன. பிரதம மந்திரி சிற்றரசர் ல்வாவ் (Lvov) கோபங்கொண்டு குதித்தார். லெனின் அவருக்குச் சரியான பதில் கொடுத்தார்: "கோடிக்கணக்கான மனிதர் யுத்தத்தில் காயப்பட்டும் செத்தும் போய்விட்டார்கள். மக்களுக்கு, முக்கியமாகப் பாட்டாளி மக்களுக்கு, யுத்தத்தினால் ஏற்பட்ட கஷ்டங்கள் முன்பின் கண்டதுண்டா, கேட்டதுண்டா? முதலாளிகள் அவமானகரமான முறையில் ஏராளமான லாபம் சம்பாதிக்கும்போது போர்வீரர்கள் கையும் காலும் இழந்து சித்ரவதை அநுபவிப்பதா? போர்முனையில் ஓய்வு ஏற்பட்டுவிட்டதே என்று இடித்துத் திட்டுகிறாரே, ஓய்வு ஏற்பட்டதிலே என்ன தப்பு? கொலைபாதகம் நின்று விடுவதிலே என்ன தவறு? போர்வீரர்களுக்கு மூச்சுவிடக் கொஞ்சம் அவகாசம் கிடைப்பதினாலே என்ன கெடுதல்?"

இப்பேர்ப்பட்ட வார்த்தைகளைப் போர்வீரர்களும் பொதுமக்களும் கேட்டால் அவர்கள் லெனினை ஆதரிக்கத் தானே செய்வார்கள்? ராணுவ வீரர்களுக்கும் கப்பற்படை வீரர்களுக்கும், தொழிலாளருக்கும், குடியானவருக்கும் லெனினே தலைவரானார். அவர்களுடைய மனோபீஷ்டங்களை அவர்தான் அறிந்து சொன்னார். அவர்கள் பிரச்னைகளை ஆராய்ந்து அலசிப் பார்த்து, அவற்றிற் கேற்பத் திட்டங்கள் போட்டு, அவர்களுடைய ஸ்தாபனங்களை வளர்த்துப் பலப் படுத்தியவர் அவரே.

மூன்று மாதங்கள், (மே, ஜூன், ஜூலை) லெனின் மூச்சுவிடாமல் உழைத்தார். இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பம் இதுவரை அவருக்குக் கிடைத்ததில்லை. கைதியாகவும், தேசப்பிரஷ்டராகவும், ஒளிந்து திரிபவராகவும்நாற்பத் தேழு வருஷங்கள் அவர் பாடுபட்டாயிற்று. இப்போது பொது மக்களிடையே பகிரங்கமாகப் பழகும் அனுபவம் கிட்டியது. பெரிய பெரிய கும்பலாய்க் கூடிய பொது ஜனங்கள் முன் பிரசங்கம் செய்தார். சிறு கூட்டமாய் வந்தவர்களைச் சந்தித்துப் பேசினார். தனித்தனியாயும் அழைத்து அந்தரங்கமாகச் சம்பாஷித்தார். எத்தனையோ விஷயங்கள் புதிதாய்த் தெரிந்து கொண்டார். எத்தனையோ விஷயங்கள் கற்றுக் கொடுத்தார். அவருடைய மூளை அபார வேலை செய்தது. ஒவ்வொரு சிறு நிகழ்ச்சியையும், தேசிய சமூக வாழ்வின் ஒவ்வொரு பகுதியையும் லெனின் கூர்ந்து கவனித்தார். மார்க்ஸின் கொள்கைகளை எல்லாம் கிரியாம்சையில், அனுபவத்துடன் ஒத்திட்டுப் பார்த்துப் பரீக்ஷித்தார். பிற்காலத் திட்டத்துக்கு வேண்டிய நுட்பங்களை எல்லாம் சேகரித்துக்கொண்டார்.

லெனினும் அவர் கட்சியும் வலுப்பது கண்டு மந்திரிகள் திகில் அடைந்தனர். பைத்தியக்காரன், அவனால் ஒன்

றும் சாதிக்க முடியாதென்று தங்களால் அலட்சியம் செய்யப் பட்டவன் அபாயகரமான பேர்வழியாகிறானே என்று அவர்கள் பயப்படலானார்கள். போர்முனையிலிருந்து போர்வீரர்கள் கலகம் செய்வதும் ஓடி வந்துவிடுவதும் அதிகமாயிற்று. அதனால் நேசதேசங்கள் ருஷியாவைப் பலமாகக் கண்டித்தன. எவ்வாறாவது யுத்தத்தை வெற்றிகரமாக நடத்திவிட்டால் உள்நாட்டுக் குழப்பங்கள்கூடத் தீர்ந்துவிடும் என்று சில அபேதவாதிகள் கூட எண்ணினார்கள். யுத்த மந்திரியான கெரன்ஸ்கி போர்முனைக்குச் சென்று போர்வீரர்களையெல்லாம் தூண்டினார்: "புரட்சிச் சைனியத்துக்கு வெற்றி!" என்ற கோஷங்களைக் கிளப்பி அரசாங்கத்தார் பொது ஜனங்களை உற்சாகப்படுத்தினார்கள். 'மூன்று மாதத்தில் அரசியல் நிர்ணய சபைக்குத் தேர்தல் நடத்தப் போகிறோம்' என்று ஆசை காட்டினார்கள். தேசத்தின் விளைபொருள்கள், தொழிற் சாமான்களின் உற்பத்தி, விநியோகங்களை ஒழுங்காய் அமைக்க ஒரு சபையைக்கூட ஏற்படுத்தினார்கள்.

இவ்வாறு கெரன்ஸ்கியும் நடுத்தர மக்களும் புரட்சியைத் தங்களுக்குச் சாதகமாக்கிக்கொண்டு செல்லுவதை எதிர்த்து ஜூன் 17உயன்று பெட்ரோகிராடில் பெரிய ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது. "யுத்தம் ஒழிக! மந்திரி சபை ஒழிக! டூமா ஒழிக!" என்ற கூச்சல்கள் கிளம்பின. ஆனால் 'அபேதவாதிகள் என்று சொல்லிக்கொண்டிருந்த மென்ஷிவிக்குகள்கூட, போல்ஷிவிக் கட்சிக்கு எதிராக, மந்திரி சபைக்கு ஆதரவளிக்க ஆரம்பித்தனர். லெனினையும் போல்ஷிவிக் கட்சியையும் ஒழிப்பதற்கு அவர்களெல்லாம் வழி தேடினார்கள்.

அடுத்த நாளே லெனின் ஜெர்மானிய ஒற்றன் என்றும், அவர் ஜெர்மனியிடமிருந்து லஞ்சம் வாங்கிக்கொண்டு யுத்தம் வேண்டாமென்று சொல்லுவதாகவும் வதந்தி கிளம்பியது! ஸ்விட்ஸர்லந்திலிருந்து ஸீல் வைத்த ஸ்பெஷல் ரயிலில் ஜெர் மானியர் அல்லவா லெனினை ருஷியாவுக்குள் கொண்டுவந் தார்கள்? லெனின் தேசத்துரோகி என்று பலர் பழிக்க ஆரம்பித்தார்கள். போல்ஷிவிக் கட்சிக்காரர் அவ்வளவு பேரும் ஜெர்மன் பணத்தால் கிளர்ச்சி செய்கிறவர்கள் என்றார் கள். அமெரிக்காவிலிருந்து வந்த ட்ராட்ஸ்கிக்கு ஜெர்மானியர் 10 லக்ஷம் டாலர் கொடுத்ததாகவும் கட்டிவிட்டார்கள். இப் பேர்ப்பட்ட வதந்திகளை உடனே கொல்லுவது யாருக்கும் சாத்தியமில்லை. லெனினும் ட்ராட்ஸ்கியும் எவ்வளவு மறுத்த போதிலும் எதிர்க் கட்சிக்காரர்கள் நம்பவில்லை.

கெரன்ஸ்கியும் நடுத்தர மக்களும் தூண்டி அனுப்பிய படைகள் ஜெயித்திருந்தால், ஒருவேளை ருஷியாவில் தேசீய வெறி அதிகரித்து சமூகப் புரட்சி ஏற்படாமலே போயிருக்க லாம். நல்ல வேளையாகப் போர்முனையில் ஜெர்மானியர் ருஷி யரை விரட்டி யடித்துவிட்டனர். உண்மையில் ருஷியப் போர்வீரர்களுக்குச் சண்டையிடவேண்டுமென்ற நோக்கமே இல்லை. முன்னேற ஆரம்பித்த ஒரு வாரத்துக்குள் எல்லா வற்றையும் தோற்றுவிட்டுத் திரும்பி ஓடி வந்துவிட்டார்கள். அவர்கள் யாவரும் போல்ஷிவிக் கட்சியை ஆதரிப்பவர்கள்!

ஜூலை மாத ஆரம்பத்தில் பொதுமக்களுடைய நெருக் கடி தாங்காமல் மந்திரி சபையிலிருந்த மற்ற அபேதவாதிகள் ராஜீநாமா செய்துவிட்டார்கள். கெரன்ஸ்கி தலைமையில் புது மந்திரி சபை ஏற்பட்டது. அன்றைய தினமே போர்வீரர் களும் பொது ஜனங்களும் சேர்ந்து, போல்ஷிவிக் தலைவர் களைக் கேளாமலே, ஆயுதங்களுடன் கலகம் செய்தார்கள்.

"யுத்தத்தை நிறுத்து! எல்லா அதிகாரமும் ஸோவியத்துக்கே!" என்று கோஷித்தார்கள். ஆனால் பாவம், ஸோவியத்திலிருந்த பிரதிநிதிகளில் பெரும்பாலோரே பொதுஜனங்களுக்கும் போல்ஷிவிக் கட்சிக்கும் எதிரிகள்!

கெரன்ஸ்கி தம்முடைய கைவரிசையைக் காட்ட ஆரம்பித்தார். சர்க்காரிடம் விசுவாசமாயிருந்த துருப்புக்களைக் கொண்டு கலகக்காரரைச் சுடச் செய்தார். இரண்டு நாட்கள் பெட்ரோகிராட் தெருக்களில் கடுமையான போர். ஜூலை 5வ யன்று கெரன்ஸ்கி இராணுவச் சட்டம் பிறப்பித்தார். புரட்சி அடங்கிவிட்டது. இதனால் தைரியங் கொண்ட அரசாங்கம் போல்ஷிவிக் பத்திரிகைகள் பிரசுரத்தைத் தடுத்தும், லெனினை ஒற்றனென்று கைது செய்யவும் உத்தரவிட்டது. லெனின் கைதியாகி எதிர்வாதம் செய்யத் தயாராயிருந்தார். ஆனால் பிறகு அவருடைய நண்பர்கள் வற்புறுத்தலின் பேரில் ஒளிந்திருக்க இசைந்தார். ஒளிந்திருந்தபடியே போல்ஷிவிக் கட்சிக்குத் தலைமை வகித்து நடத்தி வந்தார்.

இதன் நடுவே பணக்காரர் கட்சியார் சும்மா இருக்கவில்லை. 'புரட்சிக்காரர்களும் அபேதவாதிகளும் ருஷியாவைப் பாழ்பண்ணுவதைத் தடுத்துவிடுவோம்' என்று சொல்லிக்கொண்டு, அவர்கள் ருஷியப் படைகளின் சேனதிபதி கோர்னிலோவ் தலைமையில் காகேசியத் துருப்புக்களை அனுப்பினார்கள். கார்னிலோவ் பெட்ரோகிராடை நோக்கி வந்துகொண்டிருந்தார். ருஷியாவில் ராணுவ சர்வாதிகாரம் நிர்மாணிப்பது அவர் நோக்கம்.

இந்தப் புதிய அபாயத்தைத் தடுக்கவேண்டி, கெரன்ஸ்கி, "புரட்சியைக் காப்பாற்ற வாருங்கள்!" என்ற கோஷத்தைக் கிளப்பினார். இந்தச் சமயத்தில் பெட்ரோகிராட் மந்திரி சபை

யில் அவரேதான் பிரதம மந்திரி, யுத்த மந்திரி, கடற்படை மந்திரி, நியாய மந்திரி, உள்நாட்டு மந்திரி; சர்வாதிகாரியைப் போலே சகல இலாகாக்களையும் வைத்துக்கொண் டிருந்தார். அவருக்கு எல்லாரும் விரோதிகள்! மந்திரி சபையில் மற்ற மந்திரிகள் விரோதம், சேனாதிபதிகள் விரோதம், போல்ஷிவிக் தலைவர்கள் விரோதம். தொழிலாளரும், பொது ஜனங்களும், போர் வீரர்களும் விரோதம். போதாக்குறைக்கு கோர்னிலோவும் காஸேகியப் படைகளும் வேறே! இத்தனை விரோதத்துக்கும் பாதுகாப்பாக அவர் கையிலிருந்தது ஒரே ஆயுதம்தான். பேச்சு, பேச்சு, பேச்சு! "புரட்சியைக் காப்பாற்றுங்கள்!" என்ற கோஷம். நல்ல வேளையாக கோர்னிலோவின் படைகள் புரட்சிக்காரர்களுடன் சேர்ந்து கலந்து போய்விட்டன.

லெனின் தம்முடைய மறைவிடத்திலிருந்து போல்ஷிவிக் கட்சியையும் பொதுஜனங்களையும் மிக்க சாமர்த்தியமாக வழி நடத்தலானார். மற்றக் கட்சிகள் எல்லாம் பொது ஜனங்களை விட்டுப் பிரிந்து விட்டன. மென்ஷிவிக்குகள் கூட அரசியல் நிர்ணய சபை கூடும் வரை ஒன்றும் செய்வதற்கில்லை என்று விலகிக்கொண்டார்கள். போல்ஷிவிக் தலைவர்கள் மட்டுமே பொதுஜனங்களை விட்டு அகலாமலும் தங்கள் வேலைகளை நிறுத்தாமலும் இருந்தனர். மேலும், "அதிகாரம் எல்லாம் ஸோவியத்துக்கு" என்ற கோஷத்தைக் கிளப்பிய லெனின் கட்சியார் ஸோவியத்தில் இன்னும் பலம் பெறாமல் இருக்கலாமா? இந்த ஸோவியத்துக்களின் அநுகூலங்கள் எல்லாம் லெனினுக்கல்லவா நன்றாய்த் தெரியும்? கோர்னிலோவ் படையெடுப்புக்குப் பிறகு போல்ஷிவிக் பிரதிநிதிகளே ஸோவியத்தில் அதிகமானார்கள். "அதிகாரம் எல்லாம் ஸோவியத்துக்கே" என்பது, வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்ற வெறும் பேச்சாயில்லாமல், உண்

மையிலேயே அதிகாரப் பொறுப்பை ஏற்கச் சித்தமாயிருந்தவர்களின் கோரிக்கையாயிற்று. "ஸோவியத்துக்களை அரசியல் அதிகாரம் உள்ள ஸ்தாபனங்களாக மாற்றினதால்தான் மற்றக் கட்சிகளின் ஆதிக்கத்திலிருந்து லக்ஷக்கணக்கான தொழிலாளர்களைப் பிரிக்கவும், பிற்காலத்தில் சர்வாதிகாரம் ஸ்தாபிக்கவும் முடிந்தது," என்று ஸ்டாலின் கூறுகிருர்.

பொது ஜனங்களைக் கொண்டுபோவதற்கு லெனின் ஒரு தனி முறையைக் கையாண்டார். இப்போதும் இந்த முறையில்தான் ருஷியாவில் சர்வாதிகாரம் நடக்கிறது. இம்முறையின் சூட்சுமத்தையே மற்ற தேசங்களின் சர்வாதிகாரிகளும் பின்பற்றுகிருர்கள். இத்தந்திரத்தினுல் பொது ஜனங்களுக்குத் தாங்கள் ஒரு தலைவன் ஆட்டினபடி எல்லாம் ஆடுவதாகவே தெரியாது. தலைவன், கட்சி ஊழியர்களைக் கட்டுப்படுத்திக் கொள்வான். பிறகு அவர்கள் மூலமாகத்தான் பொதுஜனங்களுடன் சம்பந்தம் வைத்துக் கொள்வானே ஒழிய நேரடியாகப் பொது ஜனங்களின் தலைவனுக வரமாட்டான். "பொது ஜனங்களின் தலைமையும், கட்சியின் தலைமையும் ஒன்று என நினைத்து நாங்கள் தவறு செய்யவே இல்லை. இதுதான் எங்களுடைய விசேஷ குணம். அதனுலேதான் நாங்கள் எங்கள் கட்சியைக் கட்டுப்படுத்தி நடத்த முடிந்ததோடு பொதுமக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் எப்படி வழிகாட்டுவது என்றும் தெரிந்து கொண்டோம்" என்று ஸ்டாலின் எழுதுகிருர்.

லெனினுடைய அபார சாமர்த்தியத்தினுலும் தெளிந்த அறிவினுலும் போல்ஷிவிக் கட்சிக்கு நாடெங்கும் பலம் அதிகரித்தது. ஸோவியத்துக்களில் எல்லாம் அவர்கள் கட்சிக்கு மெஜாரிட்டி. மொத்தம் போல்ஷிவிக் அங்கத்தினர் தொகை எழுபதினுயிரமாக இருந்தது, இரண்டு மூன்று மாதங்களில்

இரண்டு லட்சமாகப் பெருகியது. முனிஸிபல் தேர்தல்க ளில் எல்லாம் அவர்களுக்கே பெருவாரியான வெற்றி. பால் டிக் கடற்படை முழுவதும் லெனின் கட்சியை ஆதரித்தது. 'யுத்தத்தை நடத்துவோம்' என்ற கெரன்ஸ்கி அரசாங்கத் துக்கு நாளுக்கு நாள் ஆதரவு குறைந்தது. அரசாங்கத்தின் பலம் குறையக் குறைய, லெனினுக்குப் பலம் அதிகரித்தது.

இந்தச் சமயத்தில் லெனின் மனோநிலை எப்படி இருந்த தென்று ட்ராட்ஸ்கி வர்ணிக்கிறார்:

"படிப்படியாகத் தராசில் தட்டு உயருவதும் எந்த நிமிஷத்தில் தராசின் முன் நேரே நிற்கப் போகிற தென்பதும் அவருடைய மனக் கண்ணில் ஸ்பஷ்டமாகத் தெரிந்தது. ஆனால் தமக்குத் தெரிவதெல் லாம் கட்சியின் மற்றத் தலைவர்களுக்குத் தெரியவில்லை என்பது அவ ருடைய அபிப்பிராயம். மத்தியக் கமிட்டியின் போக்கு ரொம்ப சாவதானமாகவும் காலந் தாழ்த்துவதுமாக இருக்கிறதென்று நினைத் தார். தாம் பகிரங்கமாக வெளியே வந்து வேலை செய்வதற்கும் காலம் வரவில்லை என்று எண்ணினார். ஏனென்றால் அவர் கைதியாகிவிட் டால் கட்சித் தலைவர்கள் இன்னும் காலந் தாழ்த்திவிடுவார்கள்; பிறகு இந்த அசாதாரணமான, புரட்சிக்கேற்ற தருணமானது நழுவிப் போய்விடும் என்று அவர் பயந்தார்......நாங்கள் உடனே சிரத்தை யோடு ரகசிய வேலையை ஆரம்பித்து, விரோதியைத் திடீரென்று தள்ளி, அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளவேண்டும் என்று வற் புறுத்தினார்......புரட்சியை வெற்றிகரமாகப் பொது ஜனங்கள் நடத்திவிடுவார்கள், நடத்த அவர்களுக்குச் சக்தி உண்டு என்று அவர் திடமாக நம்பினார். ஆனால் கட்சி ஊழியர்களைப் பற்றி அவருக்கு அந்த நம்பிக்கை இல்லை. இனித் தாமதிக்கக் கூடாது, ஒரு நிமிஷ மும் தாமதிக்கக் கூடாது என்று அவருக்கு மிகத் தெளிவாய்த் தெரிந்தது. கட்சி தயாராகும் வரை காலம் காத்துக்கொண்டிராது, புரட்சிக்கான சந்தர்ப்பத்தை நாயாக நீடித்து வைத்துக்கொண் டிருக்க முடியாது என்று அவர் அறிந்தார்."

லெனினுடைய வாதங்களுக்குப் பதில் சொல்ல மற்றத் தலைவர்களால் முடியவில்லை. அரை மனதோடு அவர்கள் இசைந்தார்கள். லெனின் தம்முடைய மகத்தானபுரட்சிக்குத் திட்டம் போட்டார். இன்னார் இன்னார் இன்ன வேலைகளை இந்த நேரத்தில் இவ்வாறு செய்யவேண்டும் என்று அவர் கடுமையான உத்தரவுகள் போட்டார். அற்ப விஷயத்தைக் கூட அவர் மறந்துவிடவில்லை. சிறு நுட்பங்களில்கூட அவருக்கு விசேஷ சிரத்தை. அவரைப் போல் திட்டம் வகுக்கப் பெரிய பெரிய சேனைத் தலைவர்களாலும் முடியாது. அவ்வளவு ஜாக்கிரதையாகவும் முன் யோசனையுடனும் அவர் ஏற்பாடுகள் செய்தார்.

லெனின் எதிர்பார்த்தபடி பெட்ரோகிராடில் நிலைமை வெகு மோசமாயிற்று. ஜனங்கள் உணவுப் பஞ்சத்தால் கஷ்டப்படலானார்கள். ஊரில் ரொட்டியே இல்லை. குழந்தைகளுக்குக்கூடப் பால் கிடைக்கவில்லை. போர்முனையிலும் அப்படியே. ஒவ்வொரு பட்டாளத்திலும் முக்கால்வாசிப் பேர்கள் ஓடிப் போய்விட்டார்கள். மீதிப் பேர்களும், 'ஒன்று, உணவும் உடையும் தந்தாலாயிற்று; இல்லாவிடில் சமாதானம் பண்ணிக்கொள்ளுங்கள்' என்று சர்க்காரை நெருக்கினர்கள். போல்ஷிவிக் பிரசாரகர்கள் ஒவ்வொரு ஊருக்கும் போனார்கள். தொழிலாளர்களின் ஸோவியத்தைக் கூட்டினர்கள். 'ஆயுதப் புரட்சிக்குத் தயாராகுங்கள்!' என்று பொது மக்களைத் தூண்டினார்கள். பெட்ரோகிராட் ஸோவியத் ஒரு ஆயுதப் புரட்சிக் கமிட்டியை நிறுவிற்று. அதன் தலைவர் ட்ராட்ஸ்கி. 'சிவப்பு'ப் படைகள் கவாத்துப் பழகின. பெட்ரோகிராட் ராணுவம் ஸோவியத்தினிடம்தான் தங்களுக்கு நம்பிக்கை என்று தீர்மானம் செய்தது.

ட்ராட்ஸ்கியின் தலைமையில் ஆயுதப் புரட்சிக் கமிட்டியின் அங்கத்தினர்கள் முக்கிய ஸ்தானங்களில் எல்லாம் புகுந்து தயாராயிருந்தார்கள்—ராணுவம், கடற்படை, தபால் ஆபீஸ், தந்தி ஆபீஸ், டெலிபோன் ஆபீஸ், ரயில்வே, பாங்கி முதலிய எல்லா இடங்களிலும். நகரத்திலுள்ள உணவுப் பொருள்கள், ஆயுதங்கள் எல்லாவற்றையும் கைப்பற்றவும் ஏற்பாடாயிற்று. ஒவ்வொரு ஏற்பாடும் லெனினுடைய மூளையிலிருந்தே உற்பத்தியானது. 1905-ல் நேர்ந்த தவறுகள் ஒன்றும் மீண்டும் நேராதபடி அவர் ஒவ்வொரு காரியத்தையும் ஆலோசித்து, ஒன்று விடாமல் குறிப்பிட்டு, 'பிளான்' போட்டுக் கொடுத்தார். நவம்பர் 7-ம் தேதி யன்று அகில ருஷிய ஸோவியத்துக்களின் காங்கிரஸ் நடப்பதா யிருந்தது. ஆயுதப் புரட்சி அன்றே நடக்கவேண்டும் என்றாராம் லெனின். "ஆறும் தேதி சரியன்று; அது ரொம்ப முன் கூட்டி. புரட்சிக்கு அகில ருஷிய ஆதாரம் தேவை. ஆறுந் தேதி எல்லாப் பிரதிநிதிகளும் வந்திருக்கமாட்டார்கள். எட்டாம் தேதி என்றால் ரொம்பத் தள்ளிப் போய்விடும். அதற்குள்ளே காங்கிரஸ் கூடியாகியிருக்கும்; அதிகப் பேர் கொண்ட கூட்டத்தினால் சிக்கிரமாகவும் நிஷ்கரிஷையாகவும் ஒரு காரியங்கூடச் செய்ய முடியாது. ஆகையால் நாம் காங்கிரஸ் கூடும் ஏழாந் தேதி யன்றுதான் காரியத்தை முடிக்க வேண்டும். காரியத்தை முடித்துக்கொண்ட பிறகு காங்கிரஸிடம் சென்று, 'இதோ இருக்கிறது அதிகாரம்! இப்பொழுது என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்?' என்று கேட்கலாம்." இவ்வாறு காரணங் காட்டி, புரட்சி நடக்கவேண்டிய நாளை நிச்சயித்தாராம் லெனின்.

புரட்சி நாள் வந்தது. காங்கிரஸ், பெட்ரோகிராட் தொழிலாளர் ஸோவியத் இருந்துவந்த ஸ்மால்னி பள்ளிக்

கூடத்தில் கூடியது. அதற்கு முன்பே, அக்டோபர் கடைசியில் லெனின் பெட்ரோகிராடுக்கு வந்துவிட்டார். பெரிய தாடியை வளர்த்துக்கொண்டு முகந் தெரியாமல் மறைந்து, போல்ஷிவிக் ஊழியர்களுக்கு உத்தரவு கொடுத்துக் கொண்டும், எல்லாவற்றையும் மேல் பார்த்துக்கொண்டும் இருந்தார். லெனினுடைய உத்தரவுகளை எல்லாம் நிறைவேற்றுவது ட்ராட்ஸ்கி; அவரே பெட்ரோகிராட் ஸோவியத்துக்கும் தலைவர்.

ஏதோ அபாயம் சூழுகிறது என்று கெரன்ஸ்கிக்குப் பயம் அதிகரித்தது. "நிலைமையைச் சமாளிக்கப் போதிய சக்தி அரசாங்கத்துக்கு இருக்கிறது" என்று அவர் பிரிட்டிஷ் ஸ்தானீகரிடம் சொல்லிக்கொண்ட போதிலும், உள்ளுக்குள்ளே நடுங்கினர். சர்க்காரின் காரியாலயத்தைச் சுற்றிப் பீரங்கிகளையும் துருப்புக்களையும் அவர் நிறுத்தியது அந்தப் பயத்தின் காரணத்தால். ஆனல், பாவம், அதே பீரங்கிகளையும் துருப்புக்களையுமே அரசாங்கத்தின்மீது திருப்பப் போகிறார்கள் என்று அவருக்குத் தெரியாது.

ஆரும் தேதி இரவு 'ஆயுதப் புரட்சிக் கமிட்டி' தூங்கவே இல்லை. லெனினுடைய 'பிளான்' பிரகாரம் அவரவர்கள் தத்தம் இடத்தில் அமர்ந்து தயாராயிருந்தார்கள். போல்ஷிவிக் பத்திரிகைகளின் காரியாலயங்களை மூடி 'ஸீல்' வைக்கும்படி கெரன்ஸ்கி அரசாங்கம் துருப்புக்களை அனுப்பியது. ஸோவியத் கட்சியைச் சேர்ந்த போர் வீரர்கள் போல்ஷிவிக் பத்திரிகாலயங்களைத் திறந்துவிட்டு, அரசாங்கத்தை ஆதரிக்கும் பத்திரிகாலயங்களை மூடினர்கள். அதற்கப்புறம் மளமள வென்று காரியங்கள் நடந்தன. சர்க்கார் ஸ்தாபனங்கள் ஒவ்வொன்றையும் போல்ஷிவிக்கர் பிடித்துக் கொண்டனர். ஏழாந் தேதி காலை ஏழு மணிக்குள் பெட்ரோ

கிராட் பூராவும் புரட்சிக்காரர் கைவசமாயிற்று. அன்று இரவில் சர்க்கார் காரியாலயமான பழைய ஜாரின் 'மாரிகால அரண்மனை' பிடிபட்டது. அதற்குள் ஒளிந்திருந்த பதினைந்து மந்திரிகளும் கைது செய்யப்பட்டார்கள். கெரன்ஸ்கி அகப்படவில்லை. அவர் போர்முனைக்குச் சென்று துருப்புக்களைக் கொண்டுவருவதற்காக அவசரமாகப் போயிருந்தார். இந்த நிகழ்ச்சிகள் நடந்துகொண்டிருக்கையிலேயே பெட்ரோகிராட் முழுவதும் புது அரசாங்கம் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டதென்று நோட்டீஸ்கள் ஒட்டப்பட்டன. துளி இரத்தம்கூடச் சிந்தாமலே புரட்சி நிறைவேறிற்று என்று சொல்லலாம். இவ்வளவு சுலபமாக அதிகாரம் தங்கள் கைக்குக் கிடைக்கும் என்று லெனினுடைய சகாக்கள் ஒருவராவது எண்ணவில்லை.

அன்றே காங்கிரஸ் கூட்டம் நடந்தது. ஆனால் இரவு இரண்டு மணிக்குத்தான் அந்தப் பிரதிநிதிகளுக்கெல்லாம் புரட்சி நடைபெற்று விட்டதென்று தெரியும். அவ்வாறு கேள்விப்படவும் மென்ஷிவிக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு அசாத்தியக் கோபம் வந்தது. கெரன்ஸ்கி அரசாங்கத்தில் அவர்களும் சேர்ந்திருந்தார்கள் அல்லவா? அவர்களுக்கு ட்ராட்ஸ்கி கூறிய பதில் மிக்க ரஸமானது:

"இப்போது நடந்திருப்பது ஒரு சிலருடைய சதியன்று. பொதுஜனப் புரட்சியாகும். பொதுஜனப் புரட்சிக்குக் காரணம் சரியா, தப்பா என்று சர்ச்சை செய்யவேண்டியதில்லை. தொழிலாளர்கள், போர்வீரர்களுடைய புரட்சிச் சக்தியை நாங்கள்தான் பலப்படுத்திக்கொண்டு வந்தோம். புரட்சிக்கு ஆதரவாகப் பொதுமக்களின் மனத்தைப் பகிரங்கமாகத் திருத்திக் கொண்டும் வந்தோம். எங்கள் புரட்சி ஜயித்து விட்டது! இப்போது, எங்கள் வெற்றியை இழந்துவிடும்படி சொல்லுகிறீர்கள். உங்களுடன் ஒப்பந்தத்துக்கு அழைக்கிறீர்கள்.

யாரோடு? உங்களோடா? உங்களைவிட இழிவான, ஒற்றுமையற்ற பேர்கள் உண்டா? நீங்கள் வெறும் 'இன்ஸால்வெண்டு'ப் பேர்வழிகள். உங்கள் ஜோலி எல்லாம் தீர்ந்தது. இனிமேல் உங்கள் சொந்த இடத்துக்குப் போகவேண்டியது தான். போங்கள் நீங்கள் எல்லாம்! சரித்திரத்தின் குப்பைத் தொட்டியில் போய் விழுங்கள் !!"

சரித்திரத்தின் குப்பைத் தொட்டியில் போய் விழுந்தார்கள், ஜாரும், கெரன்ஸ்கியும், அவர்களைச் சேர்ந்தவர்களும்.

6. பொதுவுடைமை அரசு

மறுநாள் மாலைக்குள் புரட்சி சர்க்கார் அமைந்தாகி விட்டது. அரசாங்கத் தலைவர் லெனின். ட்ராட்ஸ்கி வெளி நாட்டு மந்திரி. மற்ற ஒன்பது மந்திரிகளில் ஸ்டாலினும் ஒருவர். அரசாங்கத் திட்டத்தை லெனின் தயாராய் வைத்திருந்தார். முதல் வேலை மகாயுத்தத்திலிருந்து விலகி ஜெர்மனியுடன் சமாதானம் செய்துகொள்வது. இரண்டாவது குடியானவர்களுக்கு நிலம் அளிப்பது. மூன்றாவது உற்பத்திச் சாதனங்களைத் தொழிலாளர் கையில் ஒப்படைப்பது. முதன் முதலாக அரசாங்கத்தின் தலைவராக லெனின் வந்து நின்றபோது அவர் எப்படியிருந்தா ரென்று ஒரு அமெரிக்க நிருபர் சொல்லுகிறார்:

> "கட்டை, குட்டையான உருவம், பெரிய தலை, மயிரில்லாமல் வழுக்கை விழுந்த, தடித்த மண்டை; சின்னக் கண், குட்டை மூக்கு, விரிந்த, தாராளமான வாய், பிடிவாதம் காட்டும் முகவாய்க்கட்டை...கீழ்த்தரமான உடை, யாரோ உயரமான வருக்குத் தைத்த நிஜார்—மொத்தத்தில் பொது ஜனங்களின் மோகத்தைத் தூண்டும் தோற்றமே யில்லை. அறிவு ஒன்றினால் தான் பொதுமக்களின் தலைமைக்குத் தகுதி வாய்ந்தவர். இந்த அபூர்வத் தலைவரை ஒரு ரகத்திலும் சேர்க்க முடியாது. இவரிடம் ஹாஸ்யம் கிடையாது, பைத்தியக்காரக் குணங்கள், வழக்கங்கள், சேஷ்டைகள் கிடையாது. பிடித்தால் ஒரே பிடி, அசையவே மாட்டார். ஆழ்ந்த விஷயங்களைக் குழந்தைக்கும் புரியும்படி சொல்லும் ஆற்றல், பிரத்யட்சமான எந்த நிலைமையையும் அக்கக்காய் வெட்டி எடுத்துக் காட்டும் திறமை, யுக்தி சாதுரியம், ஈடே இல்லாத சாகஸ மூளை, இவரிடம்தான் பார்க்கலாம்."

இன்னும் ஒரு நாள் பொழுது போவதற்குள் லெனின் உலகப் பிரசித்தியாகி விட்டார்; உலக சரித்திரத்தின் போக்

தையும் மாற்ற ஆரம்பித்து விட்டார். சற்று நேரம் எரிந்து அணையும் புரட்சித் தலைவர்களில் இவரும் ஒருவரென முதலில் யாவரும் நினைத்தார்கள். அவருடைய சகாக்கள் கூடத் தங்கள் புரட்சி நீடித்து நிற்கும் என்று நம்பவில்லை. லெனினுக்கு மட்டும் அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது. தொழிலாளர் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படத்தான் வேண்டும், அது வந்தே தீரும் என்று மார்க்ஸ் எழுதியிருந்தார். அவ்வாறே கடவுளும் விதித்திருந்தார் என்றே தோன்றுகிறது. அந்த விதியை நிறைவேற்றத் தோன்றிய அவதார புருஷர் லெனின்.

கடவுள் அனுப்பிய கருவியா யிருந்தபோதிலும் லெனின் வெறும் ஜடக் கருவியா யிருக்கவில்லை. தம்முடைய கருமத்தின் நோக்கத்தையும், அதன் கஷ்டங்களையும் நன்றாய் அறிந்தவர் அவர். 'நடக்கிறதெல்லாம் நடக்கட்டும்' என்று அவர் சும்மா இருக்கவில்லை. "இந்தக் காரியங்கள் எல்லாம் நடந்தேற வேண்டும், இந்த முறையில் நடக்கவேண்டும்" என்று விதித்து வழிகாட்டியவரும் அவர்தான். அவர் செய்யவேண்டியிருந்த வேலைகளோ? நினைக்கவே கூசுகிறது.

உலகத்து நிலப் பரப்பில் ஆறில் ஒரு பங்கு கொண்ட மிகப் பெரிய தேசம், பதினைந்து கோடி மக்களுக்கு மேல் கொண்டது. ஆதரவளிக்கக்கூடிய மக்கள் அனைவரும் கல்வி இல்லாதவர்கள், சேர்ந்து கூட்டாய் உழைக்கும் பழக்கம் பெறாதவர்கள். இவர்களை ஒழுங்குக்குக் கொண்டுவர வேண்டும். கட்டுப்பாடாய் அமைக்க வேண்டும். ராஜாங்கம் நடத்தக் கற்பிக்க வேண்டும். யந்திரங்கள் கொண்டுவந்து உற்பத்தியை அதிகரிக்கச் செய்யவேண்டும். நிலங்களில் எல்லாம் நன்றாய்ப் பயிர் செய்து விளைவிக்கப் புது முறைகளைக் கற்றுத்தரவேண்டும். எல்லாருக்கும் ஆகாரம், உடை, குடியிருக்க வீடு,

கல்வி, தொழில், யாவும் கொடுக்க வேண்டும். லெனினுக்கு இருந்த ஆசை கொஞ்ச நஞ்சமில்லை. நம்பிக்கையும் இவ்வளவு அவ்வளவில்லை. நாளைக்கே எல்லாவற்றையும் சாதித்து, பூலோக சுவர்க்கமாக்கிவிடுவது போல உழைக்க ஆரம்பித்தார்.

சுலபத்தில் சாதிக்க முடியாத, மலை போன்ற வேலைகள். போதாக் குறைக்கு இடையூறுகள் வேறே. சமாதானம் பண்ணிக்கொள்ளப் போனால், ஜெர்மானியர், ஏதோ தாங்கள் ஜெயித்துவிட்டதுபோலே, 'அவ்வளவு நாடு கொடு, இவ்வளவு தேசம் கொடு' என்று நிபந்தனை போட்டார்கள். வெளி தேசங்களெல்லாம் சேர்ந்து 'இந்தப் பொதுவுடைமை அரக்கனை முளையிலேயே கிள்ளி எறியவேண்டும், இல்லாவிட்டால் நம்மையும் சாப்பிட்டு விடுவான்' என்று தத்தம் சேனைகளை அனுப்பி ருஷியாமீது படையெடுத்தனர். உள் நாட்டுக்குள்ளேயிருந்த முதலாளிக் கூட்டத்தார் கலகம், கொலை முதலிய எல்லாப் பாதகமும் செய்தார்கள். வெளி தேசங்களுடன் வியாபாரம் செய்ய முடியாமல் வழி யடைப்பு. பஞ்சமும் வந்தது. லெனின் கடவுள் அனுப்பிய கருவி என்பதில் சந்தேகமில்லை. ஆனால் கடவுள் தம் பக்தர்களைச் சோதிப்பதைப் போல் லெனினையும் அநியாயமாய்ச் சோதித்தார்.

எந்தச் சோதனைக்கும் லெனின் அஞ்சவில்லை. வெளி நாடுகளில் தம்மைப் பற்றி என்ன சொல்லிக்கொண்டாலும் கவலைப்படவில்லை. தம் கட்சியைச் சேர்ந்தவர்கள் குற்றம் கூறுவதற்கும் பயப்படவில்லை. ராஜாங்க முறை இவை தாம் என்று இதுவரை ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கைகளை எல்லாம் உடைத்தெறிந்தார். அபேதவாதத் தத்துவ போதகர்கள் கூறும் லட்சியங்களைக்கூடக் கைவிட்டார். காரியானுபவத்தில் தம்முடைய பெரிய நோக்கங்களுக்குச் சாதக

மானவற்றை நிறைவேற்றுவதில் அவர் ஜனநாயக விதிகள் அனைத்தையும் அலட்சியம் செய்தார். தேர்தல், பார்லிமெண்டு முறை, எதிர்க் கட்சிகளுக்குச் சுதந்திரம், கட்சிப் பிரதிகட்சி அரசாங்கம் இவற்றை யெல்லாம் தூவென்று தள்ளினார். தம் கட்சிக்குத்தான் சர்வாதிகாரமும் என்றார். தாமே சர்வாதிகாரியாக அரசாண்டார். எதிர்ப்பை எல்லாம் ஒழித்தார். இவ்வாறு ருஷியாவில் சர்வாதிகாரத்தை லெனின் ஸ்தாபித்துவிட்டதைத்தான் முக்கியமாக மற்ற ஜனநாயக நாடுகள் எல்லாம் குறைகூறின. நாலைந்து நூற்றாண்டுகளாய் உலகம் முழுவதும் வெகு பிரயாசைப்பட்டு எய்திய பொது ஜன சுதந்திரம் நசுக்கப்பட்டுவிட்டதே, மீண்டும் பழைய காலத்து நவாப்களைப் போலே சர்வாதிகாரிகள் தோன்றிவிட்டார்களே என்று படித்த அறிவாளிகள்கூட ருஷியாவைப் பற்றி எண்ணுவது இன்றும் சகஜமா யிருக்கிறது. லெனின் தம்முடைய முறைதான் மிக்க சிரேஷ்டமான முறை என்று தவறு செய்யவில்லை. தம்முடைய உயர்ந்த நோக்கங்களை மறந்துவிடவுமில்லை. அந்த நோக்கங்களை, உண்மையான அபேதவாத அரசாங்கத்தை, வாஸ்தவமாய் பேதம் சற்றுமே யில்லாத சமூகத்தை எய்துவதற்கு அநுசரணையாய், தாற்காலிக ஏற்பாடாகத்தான் சர்வாதிகாரத்தை ஸ்தாபித்தார்.

யாருடைய சர்வாதிகாரம்? லெனின் என்ற ஒரு தனி நபருடைய சர்வாதிகாரமா? அதுதான் இல்லை. லெனின் ஒரு சுயநலக்கார மனிதர், அவருக்குச் சொந்த ஆசைகள், விருப்பங்கள், வெறுப்புக்கள் உண்டு என்று அவருடைய கொடிய விரோதிகூடச் சொல்லத் துணியமாட்டான். ஏனெனில் லெனின், ஏழைகளுடைய ஆர்வமே உருக்கொண்டவர். உலகத்துப் பாட்டாளி மக்களின் ஆத்மா லெனின் என்று கூடச் சொல்லலாம். அவர்களுடைய தேவைகள், அவர்க

ருடைய கனவுகள், அவர்களுடைய அபீஷ்டங்கள்தாம் லெனினுக்கு. அவர்களுடைய நல்வாழ்வு, அவர்களுடைய திருப்தி, சௌக்கியம், முன்னேற்றம் இவைதான் அவருக்கு வேண்டியது. உலகத்தின் மொத்த ஜனங்களில் பாட்டாளி மக்கள், சொத்து சுதந்திரம் இல்லாமல் உழைத்துச் சாப் பிடும் ஏழைகள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? நூற்றில் தொண்ணூற்றைந்து பேர் பாட்டாளி மக்களல்லவா? இந்த மிகப் பெரிய பகுதியான பாட்டாளி மக்களின் சர்வாதிகாரம் தான் லெனின் ருஷியாவில் ஸ்தாபித்தது. பாட்டாளி மக்க ளல்லாத 5% ஜனங்களுக்கு இடைக்காலத்தில் சற்று குறை வான சுதந்திரம் இருந்துவிட்டால் என்ன குடி முழுகிப் போகிறது? இன்னும் சில வருஷங்களில்தான் அவர்களும் பாட்டாளி மக்களாய் மாறி, பேதம் ஒன்றும் இல்லாமல், ஜனங்கள் யாவரும் ஒரே வகுப்பாய் ஒரே சமூகமாய்ப் போய் விடுவார்களே!

லெனின் எவ்வாறு இந்தச் சர்வாதிகாரத்தை ருஷியா நாட்டில் ஸ்தாபித்தார்? பெட்ரோகிராடைப் பிடித்துக் கொண்ட உடனே ருஷியா பூராவும் பணிந்துவிட்டதா? சர்வ ஜனங்களும் ஸோவியத் அரசாங்கத்தை ஒப்புக்கொண்டார் களா? ஒருவிதச் சிக்கலும் இல்லாமல் அரசாங்கச் • சக்கரம் சுழன்று ஓடியதா? லெனினுடைய தலைமைக்கு உட்பட மற்ற தலைவர்கள் சம்மதித்தார்களா?

அதுதான் இல்லை. லெனினுக்கு நாலாபுறத்திலும் எதிர்ப்பு. எங்கு பார்த்தாலும் விரோதிகள். புரட்சிக்குச் சாதகமாயிருந்து கெரன்ஸ்கி அரசாங்கத்தைக் கவிழ்த்தது பாமர ஜனங்கள் என்றாலும், இந்தப் பாமர ஜனங்கள் எப் பேர்ப்பட்டவர்கள்? எட்டு மாத காலத்துக்குள் நான்கு அர சாங்கங்களைக் கவிழ்த்தவர்கள். கட்டுப்பாட்டையே வெறுக்கத்

தொடங்கி விட்டவர்கள். ஆகையால் காய்ந்த வெடி மருந்தைப் போலே மிகுந்த அபாயகரமானவர்கள். இவர்கள் விரோதிகள் என்பதற்கு மில்லை, துணையாயிருந்து ஆதரிப்பார்கள் என்று நம்பி யிருப்பதற்கு மில்லை. ராஜீய உணர்ச்சியும் கல்வி அறிவும் வாய்ந்த நடுத்தர மக்கள் லெனினுடைய கொள்கைகளையும், போல்ஷிவிஸ்ட் சர்வாதிகாரத்தையும் நஞ்சென வெறுப்பவர்கள். லெனின் முதலில் மற்ற அபேத வாதக் கட்சியினருடன் சேர்ந்தே அரசாங்கம் அமைக்கப் பார்த்தார். ஆனால் அவர்களுடைய சமரஸ மனப்பான்மையையும், கோழைத்தனத்தையும் அறிந்து அந்த யோசனையைக் கைவிட்டார்.

அரசாங்க உத்யோகஸ்தர்கள் எப்படி? அவர்கள் எல்லோரும் புதிய சர்க்காருடன் ஒத்துழைக்க மறுத்து விட்டார்கள். டெலிபோன் ஆபீஸ் பெண்கள்கூட வேலை பார்க்க மறுத்து வீட்டுக்குப் போய்விட்டார்கள். லெனின் கொஞ்சமாவது பயப்படவில்லை. டெலிபோன் ஆபீஸில் மாஜி போர்வீரர்களை அமர்த்தினர். உத்யோகஸ்தர்கள் வேலை பார்க்க மறுத்ததால் அவர்களுக்கு உணவு யாரும் கொடுக்கக்கூடாது என்று உத்தரவிட்டார். (அப்போது பெட்ரோகிராடில் உணவுப் பஞ்சம். கிடைக்கும் உணவுப் பொருள்களை அரசாங்கத்தார் பகிர்ந்து கொடுத்தனர்.) அரசாங்க பாங்கிகளிலிருந்த இரும்புப் பெட்டிகளைத் திறந்துவிட முடியாதென்று பாங்கி மானேஜர்கள் சொன்னர்கள். வெடிமருந்து கொண்டு அந்தப் பெட்டிகளை உடைத்துத் திறந்தார் லெனின். வெளிநாட்டு இலாகா காரியாலயத்தில் எல்லா பீரோக்களும் பூட்டி யிருந்தன. ட்ராட்ஸ்கி அவற்றைத் திறக்கும்படி உத்யோகஸ்தர்களிடம் கூறினர். அவர்கள் சாவிகள் கெட்டுப்போயின என்று பதில் சொன்னர்கள். நாலைந்து பேரை உடனே சிறைப்படுத்தி

அரட்டவும் அந்தச் சாவிகள் தாமாகவே துள்ளிக் குதித்தன. தபால் ஆபீஸும் தந்தி ஆபீஸும் வேலை செய்ய ஆளின்றிக் கிடந்தன. மென்ஷிவிக்குகளால் தூண்டப்பட்ட ரயில்வே தொழிலாளர்கள் ரயில்கள் ஓடாமல் வேலை நிறுத்தம் செய்தார்கள். லெனின் பாமர ஜனங்களுக்கு இவற்றை எடுத்துக் காட்டி அவர்களுடைய உதவியைக் கோரினர். பாட்டாளி மக்கள், நடுத்தர மக்களின் துவேஷத்தையும் தங்கள் அபாயத்தையும் உணர்ந்து லெனினுக்குச் சாதகமாய் எழுந்தார்கள். பெட்ரோகிராடுக்கு வெளியே இனிமேல்தான் லெனின் அரசாங்கத்துக்குச் செல்வாக்கு ஏற்படவேண்டும். ஆனால் லெனின் அரசாங்கம் அமைத்த இரண்டாவது நாளே, ஓடிச் சென்ற கெரன்ஸ்கி ஒரு படையுடன் பெட்ரோகிராடை நோக்கி வருவதாகத் தெரிந்தது. பெட்ரோகிராடைக் காப்பாற்றவிட்டால் ஸோவியத் அதிகாரம் முளையிலேயே நசுங்கி விடும். ஆனால் பாதுகாக்க சைனியங்கள் எங்கே? சைனியங்களுக்குத் தலைவர்கள் வேண்டாமா? தலைவர்கள் எல்லாம் ஒத்துழைக்க மறுத்துவிட்டார்கள். லெனின், ட்ராட்ஸ்கி, ஸ்டாலின் மூவரும் ராணுவத் தலைமைக் காரியாலயம் சென்றார்கள். புதிதாக "செம்" படை ஒன்று கூட்டப்பட்டது. கெரன்ஸ்கியின் படையைச் "செம்" படையினர் முறியடித்தார்கள். உயிர் தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று கெரன்ஸ்கி ஓடிவிட்டார்.

ஜெர்மானியருடன் சமாதானம் செய்துகொண்டு மகா யுத்தத்திலிருந்து விலகி விடுவோம் என்று லெனின் முதல் நாளே பொதுமக்களுக்குப் பிரகடனம் செய்திருந்தார் அல்லவா? ஆனால் சேனாதிபதி ஜெனரல் டுகோனின் புதிய சர்க்காரின் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிய மறுத்துவிட்டார். டுகோனின் ஆதிக்கத்தில் போர்முனையில் ஒரு கோடிக்கு

மேலான போர்வீரர் இருந்தனர். அந்தப் பெரிய ராணுவத்தை எவ்வாறு புதிய சர்க்கார் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படியச் செய்வது? லெனின் ரேடியோ நிலயத்துக்குச் சென்றார். புதிய சர்க்கார் ஜெனரல் டுகோனினைப் பதவியிலிருந்து அகற்றிவிட்டதாகவும், தோழர் க்ரிலென்கோவை (ஒரு சாமான்ய ஆபீஸர்) சேனாதிபதியாக நியமித்துவிட்டதாகவும் போர்வீரர்களுக்கு அறிவித்தார். "போர் வீரர்களே! யுத்தம் இன்னும் நீடிக்கவேண்டும் என்றால் டுகோனினை ஆதரியுங்கள்! புரட்சிக்கு எதிரான ஜெனரல்கள் சமாதானத்தைப் பிய்த்து எறியும்படி நீங்கள் விட்டிருக்கப் போகிறீர்களா? கோபத்தால் யாரும் அவர்களுக்குத் தீங்கு செய்யாதவாறு நீங்கள் அவர்களைக் காவலில் வைத்துப் பாதுகாக்க வேண்டும்....வீரர்களே! சமாதானம் உங்கள் கையில்தான் இருக்கிறது. உங்களுக்குச் சமாதானம் வேண்டுமானால் பொதுஜன மந்திரிகளைக் காப்பாற்றுங்கள்" என்றது அவர் அறிக்கை. போர் வீரர்கள் தங்களுக்குச் சமாதானமே வேண்டு மென்றார்கள். ஆனால் டுகோனினுக்கு சர்க்காரே தண்டனை விதிக்கட்டும் என்று அவர்கள் விட்டுவிடவில்லை. சில தினங்களுக்குப் பின் டுகோனின் சவம் காயங்களுடன் கண்டெடுக்கப்பட்டது. யுத்தம் நிறுத்தப்பட்டது. ஜெர்மனியுடன் சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்பட்டது.

ஜெர்மானியர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருக்கையில் உள்நாட்டில் வேறு தொந்தரவுகள் கிளம்பின. லெனின் கையிலிருந்து அதிகாரத்தைப் பிடுங்கிக்கொள்ளப் பல சூழ்ச்சிகள் நடந்தன. ஸோவியத் மந்திரி சபையைச் சேர்ந்த சிலர் கூட ராஜீநாமா செய்து மற்ற அபேதவாதிகளுடன் சேர்ந்து வேறு மந்திரி சபை அமைக்கப் பார்த்தார்கள். லெனின் மீண்டும் மீண்டும் பொது

மக்களின் ஆதரவு பெற்று, அந்தத் துரோகிகளை எல்லாம் வெளிப்படுத்தினர். துரோகம் செய்தவர்கள் எல்லாம் சில நாட்களுக்குள் கதறிக்கொண்டு மன்னிப்புக் கேட்கலானார்கள்.

பொதுத் தேர்தல் நடந்த கெரன்ஸ்கி ஏற்பாடு செய்திருந்தார் அல்லவா? 1918-ம் வருஷ முடிவில் தேர்தல் நடந்தது. 1919 ஜனவரியில், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் சபை கூடியது. அதில் 180 போல்ஷிவிக்குகளும், அவர்களுக்கு எதிராக 400 பேர்களும் இருந்தனர். ஜனநாயக முறைப் பிரகாரம் பார்த்தால் போல்ஷிவிக் கட்சி அதிகாரத்தை விட்டுப் போய் விடவேண்டும். லெனின் இச்சமயத்தில் ஜனநாயக சம்பிரதாயப்படி நடக்க ஒப்புக்கொள்ளவில்லை. பொது ஜனங்கள் தங்கள் விருப்பத்தை வோட்டுக்கள் மூலம் தெரிவித்தாலும், தங்களுடைய உண்மையான நலன்களை மறந்துவிட்டார்கள் என்றே லெனின் கருதினர். ஜனநாயக முறைப்படி அதிகாரத்தை விட்டுத் தாம் விலகிக்கொண்டால் பாட்டாளி மக்களின் சர்வாதிகாரத்தை ஸ்தாபிக்கவே முடியாது என்று கண்டார். ஜனங்களுடைய வோட்டுக்கள் அளிக்கும் அதிகாரத்தைவிட, தமக்கும் தம் கட்சிக்கும் தாங்கள் செய்துள்ள தியாகமும், செய்யப்போகும் சேவையுமே வாஸ்தவமான அதிகாரத்தை அளிப்பதாக அவர் நம்பினர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் ஒரு விஷயத்தை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்தியாவின் அரசியலை நிர்ணயிப்பதற்காக இரண்டாவது வட்ட மேஜை மகாநாடு லண்டனில் கூடியது. மகாத்மா காந்தியும் இன்னும் வகுப்புவாத, லிபரல், தொழில், முதலிய பல ரகத் தலைவர்களும் அந்த மகாநாட்டு மெம்பர்கள். அம்பேத்காரும் முஸ்லிம் லீகர்களும், “ஹரிஜனங்களுக்கோ, முஸ்லிம்களுக்கோ, நீங்கள் பிரதிநிதியல்ல” என்று மகாத்மா காந்தியை நோக்கிச் சொன்

ணர்கள். மகாத்மா காந்தி அப்பொழுது சற்றும் கூசாமல் பதில் கூறினர்: "இந்தியா தேசம் முழுவதுக்கும், பேசத் தெரியாத அதன் கோடானு கோடி மக்களுக்கும், ஹரிஜனங்களுக்கும், முஸ்லிம்களுக்கும், எல்லாருக்குமாய் நான் ஒருவனே பிரதிநிதி" என்று. பொதுமக்களிடம் வோட் எடுத்திருந்தால் மகாத்மா காந்திக்கே எல்லாரும் வோட் செய்வார்கள் என்பது நிச்சயமே இல்லை. ஆனால் அப்படிக் கூறிக் கொள்ள அவருக்கென்ன அதிகாரம்? அவரும், காங்கிரஸும் பொதுமக்களுக்காகச் செய்துள்ள சேவையும் தியாகமும் அந்த அதிகாரத்தைக் கொடுத்திருப்பதாக அவர் அபிப்பிராயப்பட்டார்.

இந்த முறையில் கவனித்தால் லெனின் தம் கட்சியின் சர்வாதிகாரத்தை விட்டுக் கொடுக்காமலிருந்தது சரியெனத் தோன்றும். ஆனால் லெனினுக்கு வேறொரு காரணமும் இருந்தது. பாட்டாளி மக்களின் சர்வாதிகாரம் சில காலம் நடந்து பேதமற்ற சமூகம் ஏற்பட்ட பிறகே உண்மையான ஜனநாயக ஆட்சி ஏற்படுவது சாத்தியம், அதற்குள் ஜனநாயகம் ஜனநாயகம் என்று அடித்துக்கொள்வது திரிசங்கு சுவர்க்கத்திற்கே கொண்டுபோய் விடும், பாட்டாளி மக்கள் கையில் உண்மையான அதிகாரம் வருவதற்கே வழி இராது என்று அவருடைய புத்திக்குத் தெளிவாய்த் தெரிந்தது. அதனால் தான் லெனின் இந்தச் |சபையை ஒழித்துவிடத் தீர்மானித்தார்.

பிரதிநிதிகளின் சபை கூடிய சமயத்தில், லெனின் ஸோவியத் மத்திய சபைக் கூட்டத்திலிருந்தார். ஸோவியத் சபையில், "அரசியல் நிர்ணய சபையைக் கலைத்துவிட வேண்டியது" என்ற தீர்மானம் நிறைவேறியது. அடுத்த நிமிஷமே லெனின் அந்தப் பிரதிநிதிகள் சபைக்கு ஒரு

படைத் தலைவனை அனுப்பி சபையினர் கலைந்து போகும்படி உத்தரவிட்டார். கூடியிருந்த பிரதிநிதிகளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. "என் ஆட்களுக்கு ரொம்பக் களைப்பா யிருக்கிறது. ஆகையால் நீங்கள் உடனே கலைந்து விட்டால் தேவலை" என்று கேட்டுக்கொண்டான் படைத் தலைவன். "பாவம், அவர்களுக்கு நாம் ஏன் தொந்தரவு கொடுக்கவேண்டும்?" என்று கலைந்து போய்விட்டார்கள் கூடியிருந்த பிரதிநிதிகள்!

இவ்வாறு அரசியல் நிர்ணய சபையைக் கலைத்து விட்டு, ஸோவியத் சபைகள் மூலம் பாட்டாளி மக்களின் பிரதிநிதிகள் அரசாங்கம் நடத்தும்படி செய்து விட்டார் லெனின். ஆனாலும் 1919 வரை சர்வாதிகாரத்தின் மற்ற சின்னங்கள் ருஷியாவுக்குள் வரவில்லை. 1918-ல் முதலாளித் துவப் பத்திரிகைகள்கூட நடந்துகொண்டிருந்தன. பிறர் குற்றம் கூறுவதையும், திட்டுவதையும்கூட போல்ஷிவிக் கட்சியார் சகித்துக்கொண்டிருந்தனர். பணக்காரர்கள் பலர் பெட்ரோகிராடிலும் மாஸ்கோவிலும் தங்கள் வழக்கம்போல இன்பமாக வாழ்ந்து வந்தனர். ஹோட்டல்களில் ஆட்டமும் பாட்டமும் குதூகலமாய் நடந்துகொண்டிருந்தன. சுய நலமே பிரதானமாய்க் கருதும் முதலாளித்துவ மனப்பான் மையுள்ள ஜனங்கள் பலர் ஸோவியத் அரசாங்கம் இன்னும் சில நாளுக்குள் விழுந்து விடும் என்று மனப்பால் குடித் துக்கொண்டு சுகமா யிருந்தனர். ஜெர்மானியர்கள் கூடிய சீக்கிரம் வந்து ருஷியத் தலைநகரைப் பிடித்துக் கொள் வார்கள் என்று அவர்களுக்கெல்லாம் சந்தோஷம். 'பிற நாட் டாருக் கடிமைப்பட்டாலும் பரவாயில்லை; சமூகப் புரட்சிக்கு உடன்படோம்' என்பது அவர்கள் சங்கல்பம். நம் தேசத்தில் கூட அவர்களைப் போலப் பல பேர்வழிகள் இருக்கிறார்கள்

அல்லவா? தங்கள் சொத்து சுதந்திரங்கள் பங்கப் படுவதா ஞல் சுயராஜ்யம் வேண்டவே வேண்டாம், வெள்ளைக்காரனே ஆளட்டும் என்று சொல்லுகிறவர்கள் எத்தனை பேர் இல்லை?

எவ்வளவு நஷ்டமானுலும் சரி,. ஜெர்மனியுடன் சமாதா னம் பண்ணிக்கொண்டு மகா யுத்தத்திலிருந்து விலகிவிடுவது என்று லெனின் தீவிரமாக நின்ருர். வேறென்ன செய்வது? ருஷியப் போர்வீரர்களுக்குச் சண்டை செய்யவே விருப்ப மில்லை. ஜெர்மானியர்களுக்கு அது தெரியும். ஆகவே அவர் கள் ருஷியாவின் மேற்கத்தியப் பிரதேசங்கள் பலவற்றைத் தங்களுக்குக் கொடுத்துவிட வேண்டு மென்ருர்கள். லெனி னுடைய சகாக்கள் அனைவருக்கும் அத்தகைய கோழைத் தனமான உடன்படிக்கை செய்துகொள்ளச் சம்மதமில்லை. லெனின் ஒரே பிடிவாதமாய் நின்ருர். இதன் சம்பந்தமாக ஒரு வேடிக்கைக் கதைகூடச் சொல்லுவார்கள். ப்ரெஸ்ட் லிடாவ்ஸ்க் என்னுமிடத்தில் ருஷியப் பிரதிநிதிகளும் ஜெர் மானிய ராணுவத் தலைவர்களும் சமாதானம் பேசிக் கொண் டிருந்தனர். ட்ராட்ஸ்கியும் ருஷியப் பிரதிநிதிகளில் ஒருவராய் அங்கு இருந்தார். ஒரு விசேஷத்தை முன்னிட்டு அவர் மற்ற உயர் குலத்தாரைப் போல 'விருந்து உடுப்பு' என்று மேல்நாட்டில் வழங்கும் நீளக் கறுப்புச் சட்டை, வெள்ளை ஷர்ட், நடுவில் முடி போட்ட டை முதலியவை தரித்துச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. தொழிலாளர் பிரதி நிதியான தாம் முதலாளி மக்களைப் போல அந்த உடுப்புக்களை அணியலாமா என்று ட்ராட்ஸ்கியின் மனம் கூசியது. உடனே அவர் லெனினுக்குத் தந்தி யடித்துத் தம் சங்கடத் தை அறிவித்தார். லெனின் மறு விஞடியே பதில் கொடுத் தார். "சமாதானம் கிடைப்பதற்கு உபயோகமா யிருக்கு

மானல், பாவாடை வேணுமானாலும் கட்டிக்கொண்டு போ!" என்று.

ஒருமட்டாக 1918 மார்ச் மாதம் சமாதான உடன் படிக்கை கையெழுத்தாயிற்று. ஆனால் லெனின் எதிர் பார்த்தபடி ருஷியப் பாட்டாளி மக்கள் பிறர் தொந்தரவு இல்லாமல் முன்னேற உலகத்து முதலாளி வகுப்பினர் விட்டு வைக்கவில்லை. மகா யுத்தத்தில் ஈடுபட்டிருந்த ஜெர்மனியும், பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா முதலிய தேசங்களும் தங்கள் விரோதத்தை மறந்து ருஷியாவை எதிர்ப்பதில் ஒருமுக மாய் வேலைசெய்ய ஆரம்பித்தன. ஒரு தேசம்கூட நேர்முக மாக ருஷியாவுடன் யுத்தம் செய்வோம் என்று சொல்லிக் கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக, முதலாளிகளின் ஏஜண்டு களான பல ருஷியப் படைத்தலைவர்களுக்குப் பணமும் படை யும் ஆயுதமும் கொடுத்து, ருஷியாவில் அரசாங்கத்துக்கு எதி ராகப் போரிடத் தூண்டினர். வல்லரசுகளின் கோபத்துக்கு ஜார் சக்கரவர்த்தியும் அவருடைய குடும்பமும் கொலை செய் யப்பட் டிறந்தது ஒரு முக்கிய காரணமாயிற்று.

1917 மார்ச் மாதம் நடந்த புரட்சிக்குப் பிறகு ஜார் பட்டம் துறந்து சென்றாரல்லவா? அவரையும் அவருடைய குடும்பத்தாரையும் பாதுகாப்பதன் நிமித்தம் கெரன்ஸ்கி அரசாங்கம் அவர்களை மேற்கு ஸைபீரியாவில் டொபோல்ஸ்க் என்னுமிடத்தில் காவலில் வைத்திருந்தது. கெரன்ஸ்கி அரசாங்கத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு லெனின் அரசாங்கம் அவர்களை யூரல் மலைப் பள்ளத்தாக்கிலுள்ள எகாட்டெரின் பர்க் என்னும் பட்டணத்தில் கைதுசெய்து வைத்திருந்தது. ஜார் சக்கரவர்த்தியை எப்படியாவது தப்பவைத்துப் பிறகு அவர் தலைமையில் ருஷியாவை மீண்டும் கைப்பற்றிக் கொள் வது என்று எத்தனையோ சதியாலோசனைகளும் முயற்சிக

ளும் நடந்தன. ஜெர்மானியர்கூட அதற்குப் பகீரதப் பிரயத்தனங்கள் செய்தனர். அவை பலிக்காது போனாலும் பொது ஜனங்கள் அவற்றால் மிகவும் பீதியடைந்தனர். ஜார் தப்பினால் தம் தலைக்கு ஆபத்து என்றுஅவர்கள் கருதினார்கள். அடிக்கடி நடக்கும் சதிகளால் அவர்கள் சீக்கிரம் பொறுமையிழக்கலானார்கள். கடைசியில் 1918 ஜூலை 16 இரவில் ஜார் குடும்பத்தார் அனைவரையும் சுட்டுக்கொன்றுவிட்டனர். ஜார், அவர் மனைவி, அவர் மகன், பெண்கள் நாலுபேர், அவர் குடும்பத்தைச் சேர்ந்த வேலைக்காரர் சிலர் இவர்கள் துப்பாக்கியால் சுடப்பட்டு எரிக்கப்பட்டனர். ஜூலை 13-ல் ஜார் சகோதரர் ஒருவர் கொல்லப்பட்டார். 17-ம் தேதி யன்று ஜாரின் இன்னும் இரு சகோதரர்களும் அவர்கள் குடும்பத்தாரும் கொல்லப்பட்டார்கள். இந்தக் கொடுமைகள் நிகழ்ந்ததற்குக் காரணம் அந்த ஸ்தலத்திலிருந்த ஸோவியத் அங்கத்தினர்களின் பீதிதான். ஜாரைக் கொன்றால் அகில தேசங்களின் வெறுப்புக்குப் பாத்திரமாவோம் என்பதாலும், ஜாரின் குடும்பத்தாரைக் கொல்வது குரூரமான, நியாயமற்ற செயல் என்பதாலும் லெனின் இச்செயல்களுக்கு உடன்பட மறுத்துவிட்டாரென்றும், மத்ய அரசாங்கத்தைக் கேளாமலே ஸ்தல ஸோவியத் இப்பாதகத்தைப் புரிந்ததென்றும் கூறப்படுகிறது. என்றாலும் சிலர் இப்பாதகங்களுக்கு லெனின் உடந்தையாக இருந்தார் என்றும் நம்புகிறார்கள்.

ஜார் குடும்பத்தாரின் கொலையால் கோபமூட்டப்பட்ட நேச தேச வல்லரசுகள் ஒரு பெரிய சேனையை ருஷியா மீது ஏவின. அது வருவதற்குள் லெனினைக் கொல்ல ஒரு முயற்சியும் நடந்தது. டோரா கப்லான் என்ற ஒரு ஸ்திரீ, ஸோவியத் ஊழியர் கூட்டம் ஒன்றிற்கு வந்திருந்த லெனின் மீது ரிவால்வரால் சுட்டாள். லெனின்

படுகாய மடைந்து விழுந்தார். ருஷியா முழுவதும் பரப்பரப் படைந்தது. ஏற்கெனவே 'வெள்ளை' ருஷியர்கள் என்று சொல்லப்படும் முதலாளித்துவ ஏஜண்டுகளான ராணுவத் தலைவர்கள் தேசத்தில் நாலாபுறத்திலு மிருந்தும் நேசதேச உதவியினால் படையெடுத்துக் கொண்டிருந்தார்கள். நேச தேசங்கள் நேர்முகமாய் அனுப்பிய சைனியமும் வரவே ருஷி யப் பொதுமக்கள் எல்லாவற்றிற்கும் துணிந்து எழுந்தார்கள்.

அவர்களிடம் அப்போது பயிற்சி பெற்ற சைனியங்கள் கூடக் கிடையாது. ஜெர்மானியருடன் யுத்தம் செய்து கொண்டிருந்த படைகளை ஏற்கெனவே கலைத்தாகிவிட் டது. நாலாபுறமும் தோன்றி எதிர்க்கும் படைகளை எவ்விதம் தடுப்பது? பொதுமக்களுக்கு ராணுவப் பயிற்சி இல்லையே! ஸோவியத் அரசாங்கமும் அதிகாரமும் சில நாட் களில் அழிந்துவிடும் என்று யாவருக்கும் தோன்றியது. ஆனால், உயிருக்கே ஆபத்து வரும்போது கோழைக்குக் கூடத் தைரியம் வருமல்லவா? பொது மக்கள் சாவுக்குத் துணிந்தார்கள். "போல்ஷிவிக் பயங்கரம்" புறப்பட்டது. "துரோகிகளை எல்லாம் கொல்லுங்கள்", "அந்நியப் படை களை அழியுங்கள்" என்று கிளம்பினார்கள். ட்ராட்ஸ்கியும் ஸ்டாலினும் தலைமை வகித்து, வெளியிலிருந்து எதிர்த்தவர் களையும், உள்ளேயிருந்து துரோகம் செய்தவர்களையும் ஒழித் தார்கள்.

ஆனால் இந்த வேலை சுலபத்தில் முடிந்துவிடவில்லை. 1918 நவம்பரில் ஜெர்மானிய யுத்தம் நின்றது. அதன் பிறகு நேசதேச வல்லரசுகள் எல்லாம் சுமார் இரண்டு வருஷத் துக்கு மேலாக ருஷியாவை எதிர்த்துப் போராடின. 'போல்ஷிவிஸம்', அதாவது பாட்டாளி மக்களின் புரட்சி, முதலாளித்துவத்தைத் தொலைக்கும் பிசாசு அல்லவா?

முதலாளிகள் அதைச் சும்மா விட்டு வைப்பார்களா? ருஷியாவின் அரசாங்கத்தை 'ஐரோப்பிய ஆபத்து' என்றும் 'உலக அபாயம்' என்றும் சர்வ முதலாளிகளும் அவர்களுடைய அரசாங்கங்களும் கருதினார்கள். அவர்களுக்கு இன்னொரு சாக்கும் கிடைத்தது. ஜார் அரசாங்கத்தின் கடன்களுக்குத் தாங்கள் பொறுப்பாளிகள் அல்ல என்று சொல்லிவிட்டார்கள் ருஷியப் பொதுவுடைமை அரசாங்கத்தார். இன்னும் என்ன காரணம் வேண்டும்? ருஷியாவுக்கு வேறு தேசப் பொருள் யாதும் கிடைக்காதவாறு நேச தேச அரசுகள் வழிமறித்து நின்றன. பிரிட்டிஷ், பிரெஞ்சு, அமெரிக்க, ஜப்பானிய, செக்கோஸ்லவேக்கியத் துருப்புக்கள் ஸைபீரியாவிலும், உக்ரெய்னிலும், வடக்கேயும் தெற்கேயும் கிழக்கேயும் எட்டுத் திசையிலும் தாக்கினார்கள். இரண்டரை வருஷம் ருஷியாவுக்கு மூச்சுவிடச் சாவகாசமில்லை. நாடெங்கும் ஒரே ரண களம்; சொல்ல முடியாத கொடுமைகள். அந்தக் கொடுமைகள் எல்லாம் போல்ஷிவிக் கட்சியார் மட்டும் இழைத்ததல்ல. அவர்களுக்கு எதிராகக் கிளம்பிய முதலாளித்துவப் படைகள் இழைத்தவைதான் அதிகம். ஒரே ஒரு சாட்சியை மட்டும் இங்கே கவனிப்போம்.

அட்மிரல் கோல்சாக் என்பவர் ஸைபீரியாவிலிருந்து ருஷிய அரசாங்கத்தை எதிர்த்தவர். அவர் தம்மை ருஷியாவின் அதிபதி என்று சொல்லிக் கொண்டார். நேசதேசங்களும் அவ்வாறே அவரைக் கௌரவித்தன. அவருடைய சகாவான ஒரு அமெரிக்க ஜெனரல், அவருக்குத் துணையாயிருந்த அமெரிக்கப் படைகளின் தலைவர், ஜெனரல் க்ரேவ்ஸ் சொல்லுவதைக் கேளுங்கள்:

" அதிபயங்கரமான கொலைகள் நடந்தது உண்மைதான். ஆனால் அவை போல்ஷிவிக் கட்சியாரின் செயல்கள் என்று

உலகம் நம்புகிறதே, அது தவறு. போல்ஷிவிக்கர் கொன்ற ஒவ்வொரு ஆளுக்கும், போல்ஷிவிக்-எதிர்ப்புக்காரர்கள் கிழக்கு ஸைபீரியாவில் நூறு ஆட்களைக் கொன்றூர்கள் என்று நான் சொல்லுவதில் சந்தேகத்துக்கு இடமே கிடையாது."

இக்கொடுமைகள் எல்லாம் ஒழிய இரண்டரை வருஷம் பிடித்தது. அவ்வளவு காலமும் ட்ராட்ஸ்கியும் ஸ்டாலினும் லெனினும் இடைவிடாமல் உழைத்தார்கள். படை யெடுத்த வர்களை அடித்துத் துரத்திய பெருமை முக்கியமாய் ட்ராட்ஸ்கியைச் சேர்ந்தது. "செம்படைகள்" என்ற ஆச்சரியகரமான சேனைகளை நிறுவியது அவருடைய அபார சாமர்த்தியம். ஒவ்வொரு யுத்தமும் ட்ராட்ஸ்கியின் ஊக்கத்தினுலேயே ஜெயமாயிற்று. ஓர் அபாயத்துக்கும் பயப்படாமல் ட்ராட்ஸ்கி சதா தம்முடைய ஸ்பெஷல் ரயில் வண்டியில் ஓடிக்கொண்டே ஒவ்வொரு போர் முனையாகச் சென்று பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்தார். அந்த ஸ்பெஷல் ரயில்தான் அவருடைய காரியாலயம். அதில், அவருடைய காரியஸ்தர்கள், ஒரு தந்தி ஆபீஸ், ரேடியோ நிலையம், மோட்டார்கள், புத்தகாலயம், அச்சு யந்திரம், மின்சார சக்தி நிலையம்,சர்வமும் அடக்கம். அந்த ரயில் சென்றவிடமெல்லாம் வெற்றி!

மற்ற தேசங்களுக்கெல்லாம் 1914—1918-வரைதான் யுத்தம். ருஷியாவுக்கு மட்டும் 1914-லிருந்து 1921-வரை சுமார் ஆறரை வருஷம் சேர்ந்தாற்போல யுத்தம். எவ்வாறோ சகித்துக்கொண்டு,வயிற்றை இறுகக் கட்டிக்கொண்டு,ருஷியப் பொது மக்கள் தொடர்ந்து யுத்தத்தை நடத்திக் கடைசியில் விடுதலை யடைந்தார்கள். ஆனால் லெனினுடைய சங்கடங்கள் அதோடு நின்றுவிடவில்லை. நாட்டில் மழை யில்லாததால் பெரிய பஞ்சம் ஏற்பட்டது. சுமார் ஐம்பது லக்ஷம் ஜனங்கள்

பஞ்சத்தால் இறந்தார்கள். அதோடு குடியானவர்களின் எதிர்ப்பும் புறப்பட்டது.

உள்நாட்டு யுத்த காலத்தில் எல்லாம், குடியானவர்கள் பயிரிட்டு அறுத்த தானியங்களை அவர்களுடைய சொந்த உபயோகத்துக்கு மட்டும் கொஞ்சம் கொடுத்துவிட்டு, மீதியுள்ளதை எல்லாம் சர்க்கார் கைப்பற்றி போர்வீரர்களுக்கும் நகரங்களில் வேலை செய்யும் தொழிலாளருக்கும் உணவு அளித்து வந்தார்கள். யுத்தம் முடிந்த பிறகு இந்த முறை நீடிப்பது ருஷியக் குடியானவர்களுக்குப் பிடிக்க வில்லை. அவர்களுக்குப் பொதுவுடைமைத் தத்துவங்களில் அவ்வளவு நம்பிக்கையும் ஞானமும் இல்லை. புரட்சிக் காலத்தில் "நிலங்கள் எல்லாம் உங்களுடையதே" என்று லெனின் கூறியது அவர்களுக்குப் புரிந்தது, பிடித்திருந்தது. பொதுவுடைமை அரசாங்கத்தில் தமக்குத் தேவையானதைத் தவிர மீதியைப் பொதுமக்களுக்காக அரசாங்கத்துக்குக் கொடுத்து விடுவது அவர்களுக்கு அநியாயமாகத் தோன்றியது. சொந்த லாபம் இல்லாததால் பயிரிடக்கூடிய நிலங்களைத் தரிசாகவும் அவர்கள் போட்டுவிட்டார்கள். பஞ்சத்தின் கொடுமை பத்து மடங்கு அதிகமாயிற்று. வெளிநாட்டார் யாரும் உதவி செய்ய வரவில்லை. லெனினுக்கு வேறு வழியில்லை. தம்முடைய தத்துவங்களையெல்லாம் ஒரு புறம் கட்டி வைத்தார். அனுபவ சாத்தியத்தில் என்ன செய்யவேண்டுமென்று உணர்ந்தார். குடியானவர்கள் சுபாவம் முதலாளித்துவ சுபாவமாயிருந்தது. மேலும், நகரத்துத் தொழிலாளர்களின் தொழில்கள் முன்னேற யந்திரங்களும், அவற்றை வாங்க முதலும், ஓட்டி நடத்த நிபுணர்களும் தேவையாயிருந்தன. இவை அயல் நாட்டிலிருந்துதான் வந்தாக வேண்டும். தொழில்களைச் சீர்திருத்தி, புதிய முறைகளில் யந்திரங்

களின் உதவியாலும் விஞ்ஞான சாஸ்திர உதவியாலும் உணவு முதல் எல்லாப் பொருள்களையும் அதிகப் படுத்திக் கொண்டுதான் பொதுவுடைமைத் தத்துவப் பிரகாரம் அரசாங்கம் நடத்தவேண்டும். அதற்கு முன் தத்துவப்பிரகாரம் நடக்க முயற்சி செய்து பெரும்பாலோருடைய அதிருப்தியையும் விரோதத்தையும் வளர்ப்பது அபாயகரமானது என்று அவர் கண்டார். குடியானவர்கள் கலகங்களும், கடைசியில் அவர்களுக்குச் சாதகமாக க்ரோன்ஸ்டாட் கப்பல் படையினர் செய்த கலகமும் லெனின் இதுவரை கடைப்பிடித்த வழியை மாற்றிக் கொள்ளும்படி நிர்ப்பந்தம் செய்தன.

7. புதிய பொருளாதாரத் திட்டம்

1918-ம் வருஷத்தின் பிற்பகுதியிலிருந்து லெனின் தம்முடைய புதுப்பொருளாதாரத் திட்டத்தை ஆரம்பித்தார். இத்திட்டத்தின் கொள்கை பொதுவுடைமைத் தத்துவத்திற்கும் முதலாளித்து வமனப்பானமைக்கும் தாற்காலிக சமரஸம் ஏற்படுத்துவது. இத்திட்டத்தின் பிரகாரம் உள்நாட்டில் தனி மனிதர் வியாபாரம் செய்யவும், குடியானவர்கள் தங்கள் நிலங்கள் மீது வரி மட்டும் செலுத்திவிட்டு மீதத்தை விற்றுக் கொள்ள அல்லது சேமித்துக் கொள்ளவும், அனுமதி யளிக்கப்பட்டது. அபேதவாத வழிகளிலும், பொதுவுடைமைத் தத்துவங்களிலும் பழக்கம் பெறாத கிராமத்து மக்களை அவர்கள் போகிற வழியிலேயே கொஞ்ச காலம் விட்டுப் பிறகு திருப்புவதற்காகவே லெனின் தாற்காலிகமாக இந்தப் பிற்போக்கு முறையைப் பின்பற்றினர். வெறும் கொள்கைகளை மட்டும் விடாப் பிடியாய்ப் பிடித்துக்கொண்டிருக்கும் சில லட்சியவாதிகளைப் போல லெனின் இருந்திருந்தாரானால் அவரால் ஒரு காரியமும் அனுபவத்தில் சாதித்திருக்க முடியாது. தாம் ஒரு ஏட்டுச் சுரைக்காய் வேதாந்தி யன்று என்பதை லெனின் பலமுறை நிரூபித்தது போல இப்போதும் நிரூபித்தார். பொதுவுடைமைத் தத்துவத்தையும் அபேதவாத லட்சியத்தையும் அவர் கைவிட்டு விடவில்லை. அவற்றைச் சற்று நெகிழ்த்திவிட்டு மக்களுக்குச் சிறிது காலம் மூச்சுவிட அவகாசம் கொடுத்தார். கொடிய யுத்தத்தினாலும் பஞ்சத்தினாலும் ஜனங்கள் உணவும், உடையும், மற்ற சௌகரியங்களும் இல்லாமல் தவித்தார்கள். பொதுவுடைமைக் கட்டடம் கட்டுவதற்குள் வெளியிலிருந்து புலி சிங்கம் போல விரோதிகள் பயமுறுத்திக் கொல்ல வந்தார்கள். பொருள் உற்பத்தியும் வியாபாரமும் சரிவர ஏற்படாகவில்லை. வயிற்

ருக்குச் சோறு இருந்தால் அல்லவா வேதாந்தமும் தத்துவமும் பேச முடியும்? முதலில் ஜீவாதாரமான பொருள் உற்பத்தியைச் சீர்திருத்திக்கொண்டு பிறகு மற்றதைச் செய்யலாம் என்றுதான் லெனின் கொஞ்சம் பின்வாங்கினர். யுத்தத்தில் எதிரி மேல் விழுந்து தாக்கியும் ஜயிக்கலாம். எதிரியை முற்றுகை போட்டும் முறியடிக்கலாம். லெனின் தம்முடைய புதுப் பொருளாதாரத் திட்டத்தை முற்றுகை முறை என்று விளக்கிக் காட்டினர். "உள்நாட்டிலிருந்த முதலாளித்துவ மனப்பான்மையை இதுவரை தாக்கி உடைத்து வந்தோம், இனி முற்றுகை போட்டு முறிப்படிப்போம்" என்றார். அவ்வாறே இந்தப் புதிய திட்டத்தின் மூலம் உள்நாட்டு வியாபாரம், உற்பத்தியில் சற்று நெகிழ்ச்சி ஏற்பட்டதே ஒழிய முக்கியமான கனத்த கைத்தொழில்களை (Heavy industries) அதாவது யந்திரம், இரும்பு, ரயில், மின்சாரம் முதலிய உற்பத்தித் தொழில்களையும் வெளிநாட்டு வியாபாரம் முழுவதையும் அரசாங்கமே வைத்துக் கொண்டிருந்தது. வெளிநாடுகளுடன் வியாபாரம் செய்ய யாருக்கும் அனுமதி யளிக்கவில்லை. இதோடு நில்லாமல், நகரங்களிலும் கிராமங்களிலும் நாட்டின் மூலை முடுக்குகளில் கூட மின்சார சக்தி எல்லாத் தேவைகளுக்கும் கிடைக்கும் படியாக லெனின் ஏற்பாடு செய்தார். ஜார் காலத்திலெல்லாம் மிகவும் பிற்போக்காயிருந்த ருஷிய நாட்டில் இப்போது யந்திர சக்தி எங்கும் பரவலாயிற்று. ரயில்களும் மோட்டார்களும் ரஸ்தாக்களும் பெருகின. ஆலைகள் ஆங்காங்கு எழுந்தன. வெளிநாடுகள் முதலில் ருஷியாவுடன் வியாபாரம் செய்யச் சம்மதிக்கவில்லை. ஆனல் எவ்வளவு நாள் உலகப் பரப்பின் ஆறில் ஒரு பங்கைப் பகிஷ்கரிக்க முடியும்? கொஞ்சம் கொஞ்சமாய் அவை ருஷியாவுடன் வியாபாரம் செய்யத்

துணிந்தன. யந்திரங்களுக்கும் யந்திர நிபுணர்களுக்கும் ருஷியா எவ்வளவு வேண்டுமானாலும் விலை கொடுத்து வாங்கத் தயாராயிருந்தது. லாபமே பெரிதாய் நினைக்கும் ஐரோப்பிய அமெரிக்க நாடுகள் தங்கள் வைராக்கியத்தை மறந்து ருஷியாவுடன் வியாபார ஒப்பந்தங்கள் செய்து கொண்டன. புதுப் பொருளாதாரத் திட்டம் ஆரம்பித்த இரண்டு மூன்று வருஷங்களில் ருஷியாவின் நிலைமை மேம்பாடு அடைந்து விட்டது.

புதுப் பொருளாதாரத் திட்டத்தின் மூலம் அபேத வாதக் கொள்கைகள் நெகிழ்த்தப்பட்டு, முதலாளித்துவ முறைகளான சுயேச்சை வியாபாரம், தனிப்பட்டவர் உற்பத்தி செய்தல், வீடு முதலிய உடைமைகள் சொந்தமாக வைத்துக்கொள்ளுதல் முதலியவற்றிற்கு இடம் கொடுக்கப்பட்டதால் பல அறிவாளிகள் கூடப் பொதுவுடைமை அனுபவ சாத்தியமே இல்லை என்று வாதம் செய்கிறார்கள். அவர்கள் ருஷியாவில் அக்காலத்திலிருந்த நிலைமையையும், பிற்காலத்தில் இரண்டு ஐந்து வருஷத் திட்டங்கள் போடப்பட்டு பொதுவுடைமைத் தத்துவங்கள் பலத்த அஸ்திவாரத்தின் மீது கட்டப்பட்டதையும் சரிவர உணருவார்களாயின் அவ்வாறு சொல்ல மாட்டார்கள். லெனினுடைய புதுப் பொருளாதாரத் திட்டத்தால் ருஷியாவில் பொதுவுடைமைத் தத்துவத்திலிருந்து சற்றுப் பின்வாங்கியது உண்மையானாலும், அந்த உபாயத்தினாலேயே அதற்குப் பிறகு அவர்கள் பொதுவுடைமை வழியில் வேகமாக முன்னேறுவது சாத்தியமாயிற்று. இன்றைத் தேதியில்கூட அங்கு முதலாளித்துவ அம்சங்களின் நிழல்கள், கறைகள் தென்படலாம். ஆனால் இன்னும் கொஞ்ச நாளில் அந்த மாசுகள்கூட இல்லாமல், பூரணமான, புனிதமான பொதுவுடைமை சமூகம் ருஷியாவில்

நிச்சயமாகத் துலங்கும் என்பதில் சந்தேகமே இல்லை. மழை காலங்களில் சிற்சில சமயம் மோட்டார் என்ஜினை "ஸ்டார்ட்" செய்வது கொஞ்சம் சிரமமா யிருக்கும். அதற்காக ஆட்கள் மோட்டாரைக் கொஞ்ச தூரம் தள்ளிக்கொண்டே போவார்கள். அந்தச் சமயத்தில் யாராவது போய், "பார்த்தாயா, எனக்கு முந்தியே தெரியுமே, இந்த வெள்ளைக்காரன் சூட்சுமங்கள் ஒன்றும் ஓடாதென்று! யந்திரங்களால் ஏதாவது பயனுண்டா?" என்று நிஜமாகவே பரிகசித்தால், அது எவ்வளவு அறிவைக் காட்டும்? அது போலத்தான் லெனினுடைய புதுப் பொருளாதாரத் திட்டத்தைக் கொண்டு பொதுவுடைமையே அனுபவ சாத்தியமில்லை என்று சொல்லும் வாதமும்.

லெனின் மற்ற முதலாளித்துவ நாடுகளுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ள எவ்வாறு சம்மதித்தார்? அப்படிச் சம்பந்தம் வைத்துக்கொண்டால் அது பொதுவுடைமைக் கொள்கைக்கு எவ்வாறு ஏற்கும்? உலகம் முழுவதும் உள்ள பாட்டாளி மக்கள் விடுதலையடைந்து ஆட்சி புரிவதை விரும்புவது அல்லவா பொதுவுடைமைக் கட்சி? இந்தக் கேள்விக்கும் பழைய பதிலைத்தான் நாம் சொல்ல முடியும்: அதாவது லெனின் காரியவாதி, வெறும் வாய்-வேதாந்தக்காரர் அல்லர் என்று. ருஷியப் புரட்சி நிகழ்ந்த பிறகு சீக்கிரத்தில் உலகப் புரட்சியே ஏற்படலாம் என்று லெனின் கொஞ்ச காலம் எதிர்பார்த்தார். ஆனல் அவர் எதிர்பார்த்தபடி புரட்சிகள் ஒன்றும் நடக்கவில்லை. என்றுவது ஒரு நாள் ஒவ்வொரு தேசத்திலும் பொதுவுடைமைப் புரட்சி நடக்கும் என்பது அவருடைய துணிபு. அதற்கிடையில் ருஷிய மக்கள் தங்கள் பொருளாதார நிலைமையையும் பாட்டாளி மக்கள் அதிகாரத்தையும் சீர்திருத்திக் கொள்ளாமல் இருக்க வேண்டுமா?

ருஷிய நாட்டில் பொதுவுடைமைத் தத்துவம் வளர வேண்டுமாயின் பொருளாதாரமும் யந்திரங்கள் மூலம் உற்பத்தியும் வளர்ந்தாக வேண்டும். பொருள் உற்பத்தியை விருத்தி செய்ய மற்ற முன்னேற்ற நாடுகளுடன் வியாபார ஒப்பந்தம் முதலிய சம்பந்தம் வைத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

முதலாளித்துவ வல்லரசுகளுடன் வியாபார ஒப்பந்தங்களைத் தவிர வேறு எவ்வித ஒப்பந்தமும் முதலில் ருஷியா செய்துகொள்ளவில்லை. லெனின் ஏற்கெனவே புரட்சி ஆரம்ப காலத்தில் ஜாரினுடைய ரகசிய ஒப்பந்தங்களைப் பகிரங்கப் படுத்தியதுடன், ருஷியா தோற்ற தேசங்களிடமிருந்து நாடு கைப்பற்றப் போவதில்லை என்றும் கூறிவிட்டார். அதோடு முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தால் வருந்தும் இந்தியா, சீனு, பாரஸீகம், துருக்கி முதலிய நாடுகளுடன் மிகுந்த சிநேக பாவத்தையும் காண்பிக்க ஆரம்பித்தார். முதலாளித்துவ நாடுகள் லெனினிடம் அதிகப் பயம் கொள்ள ஆரம்பித்தன.

முதலாளித்துவ நாடுகள் லெனினைக் கண்டு பயப்பட இன்னொரு காரணமும் இருந்தது. 1919-ம் வருஷத்தில் மாஸ்கோ நகரில் லெனின் முதலிய பொதுவுடைமை வாதிகளின் ஆதரவில் 3-வது சர்வதேசப் பொதுவுடைமை மகாநாடு (Third International Communist Party) நடைபெற்றது. இந்த மகாநாட்டிற்கு பல தேசப் பொதுவுடைமைக்கட்சிகளும் பிரதிநிதிகள் அனுப்பியிருந்தன. இந்த மகாநாட்டின் கொள்கை புரட்சி மூலம் பொதுவுடைமை எய்துதல், முதலாளித்துவத்தையும் ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்து ஒழித்தல். இதற்காக சர்வ தேசங்களிலும் இந்தப் பெரிய சபை பிரசாரம் நடத்திவருகிறது. இந்தியாவில் இந்தக்

கட்சி சட்ட விரோதமானது. இன்னும் சில தேசங்களிலும் அவ்வாறே. இத்தாலி, ஜெர்மனி முதலிய பாஸிஸ்ட் நாடுகள் பொதுவுடைமையை எதிர்க்கவே கங்கணம் கட்டிக் கொண்டு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கின்றன. அமெரிக்காவிலும் கூடப் பொதுவுடைமைக் கட்சியை ஒழிக்கத்தான் பார்க்கிறார்கள். இங்கிலாந்திலும் பிரான்ஸிலும் இக்கட்சி சட்ட விரோதமில்லை என்றாலும், இதற்கு ஆதரவு அதிகமில்லை. சீனா, இந்தியா முதலிய தாழ்த்தப்பட்ட நாடுகளில் இக்கட்சியின் கொள்கைக்கு நல்ல ஆதரவு கிடைக்கும். இதன் பிரசாரங்கள் எல்லாம் முதலாளித்துவ அரசாங்கங்களுக்கு விஷமா யிருக்கின்றன.



மாஸ்கோ நகரின் செஞ்சதுக்கத்திலுள்ள லெனின் சமாதியின் முன்
பட்டாளங்கள் அணிவகுத்து நிற்றல்.

8. முடிவு

முதலாளித்துவ நாடுகள் எல்லாம் தங்களுக்கு யமனாகக் கருதிய லெனினுக்கும் யமன் வந்துதான் சேர்ந்தான். இருபது வயதிலிருந்து முப்பத்திரண்டு வருஷ காலம் இடைவிடாது அவர் உழைத்தாயிற்று. அதுவும் 1917-ம் வருஷத்திய புரட்சியிலிருந்து, இராப் பகலாய் ஓடும் யந்திரம் போலே லெனின் உழைத்தார். சிறிது நிற்போம், ஓய்வு எடுத்துக் கொள்வோம் என்று அவருக்குத் தோன்றவே யில்லை. என்ன இருந்தாலும் மனுஷ சரீரம்தானே! திடீரென்று 1922 மே மாதத்தில் லெனினுக்கு நோவு வந்தது. கால், கைகள் செயலற்றுப் போய்விட்டன. பிறகு அவர் சொஸ்தமடைய இரண்டு மாதமாயிற்று. ஆனால் பழைய சக்தி திரும்பவில்லை. சில மாதங்களுக்குப் பின் 1923-ல் மறுபடியும் அதே வியாதி. பிரக்கியாதி பெற்ற வைத்தியர்கள் தங்களால் ஆனதை எல்லாம் செய்தும் பிரயோசனமில்லை. கடைசியில் 1924-ம் வருஷம் ஜனவரி 21-ல் லெனின் உயிர் நீத்தார்.

லெனினுடைய சடலத்தை அழுக விடாமல் சில ரஸாயன சத்துக்களால் பாடம் பண்ணி ஒரு கண்ணாடிப் பெட்டியில் வைத்து மாஸ்கோ நகரின் "செஞ் சதுக்கம்" என்னும் பொதுவிடத்தில் பெரிய கல்லறை கட்டி அடக்கம் செய்திருக்கிறார்கள். லெனின் இறந்ததைக் கேள்வியுற்ற பொதுமக்கள் ருஷியாவின் மூலை முடுக்குகளி லிருந்தெல்லாம் அவருடைய சவத்தைப் பார்க்க வந்து சேர்ந்தார்கள். தங்களுடைய விடுதலைக்குக் காரண கர்த்தரான மகானின் சவத்தையாவது பார்க்காம லிருக்கக் கூடாது என்று வெகு தூரத்திலிருந்த சைபீரியாவிலிருந்துகூட குடியானவர்களும் பெண்களும் குழந்தைகளும் மாஸ்கோவுக்கு வந்தனர். இன்னும்கூட ஒவ்

வொரு நாள் மாலையும் அந்தக் கல்லறையைச் சுற்றிப் பொது ஜனங்கள் வரிசை வரிசையாய் வந்து போவதைப் பார்க்கலாம்.

சாமானியக் குடியானவர்கள் லெனின் நிஜமாகவே செத்துப் போய்விட்டார் என்று நம்பவே யில்லை. அவர் சாவார் என்ற நம்பிக்கையும் கிடையாது. தங்களுக்கு விடுதலையும் புது உயிரும் அளித்த மகான், தாங்கள் அவற்றை என்றென்றும் அனுபவிக்குமாறு பாதுகாக்க வேண்டி சாகாமலே இருப்பார் என்பது அவர்கள் நம்பிக்கை. ஏதோ டாக்டர்களுடன் ஏற்பாடு செய்துகொண்டு செத்தவர் போலக் கிடக்கிறார் என்றார்கள் அவர்கள். இதை யொட்டி இன்னொரு கதைகூடப் புறப்பட்டது. லெனின் ஓரிரவு தம்முடைய கண்ணாடிப் பெட்டியிலிருந்து கிளம்பி, ருஷிய அரசாங்கக் காரியாலயம், ஓர் ஆலை, ஒரு கிராமம் இம்மூன்றுக்கும் சென்று பார்த்ததாயும், அவை சரிவர நடந்துகொண்டிருப்பதைப் பார்த்த பிறகு சந்தோஷமும் திருப்தியும் கொண்டு மறுபடியும் நீண்ட ஓய்வு எடுத்துக் கொள்ளுவதற்காகக் கண்ணாடிப் பெட்டிக்குள் போய்விட்டார் என்றும், என்றைக்காவது ஒரு நாள் அவர் இன்னொரு முறை விழித்தெழுவார் என்றும் மூட நம்பிக்கையுள்ளவர்கள் சொல்லிக்கொண்டார்கள். இக்கதை, அறியாதவர்கள் கதையா யிருந்த போதிலும், லெனினுக்குப் பாமர மக்கள்பால் உள்ள சிரத்தை, பாமர மக்களுக்கு அவரிடமிருந்த நம்பிக்கை இரண்டையும் நன்றாக எடுத்துக் காட்டுகிற தல்லவா?

* * *

பெரியோர்களின் மகத்துவத்தை அளவிட்டுக் கூறுவது சுலபமன்று. அதிலும், லெனினைப் போன்ற உலக சிரேஷ்டர்களின் மதிப்பை நிறுத்துக் கணக்கிட்டுத் திட்டமாகக் கூறுவது அசாத்தியம். மலையை நிறுக்கத் தராசு ஏது?

லெனின் ஒரு அசாதாரணமான வீரர் என்பதை யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். இதுவரை உலகத்தில் தோன்றி யுள்ள புரட்சித் தலைவர்கள் யாவரிலுமே மேம்பட்டவர் என்றுகூட ஒப்புக்கொள்வார்கள். கணக்கற்ற மக்களைத் தூண்டி, தலைமை வகித்து நடத்தி, பெரிய, மகத்தான லட்சியங்களை அனுபவ சாத்தியமாகச் செய்த மேதாவி என்பதைக்கூட மறுக்க மாட்டார்கள். உலக சரித்திரத்தில் அவருக்கு ஒரு முக்கிய ஸ்தானம் கொடுக்கவும் தயங்க மாட்டார்கள். ஆனால், லெனின் ஓர் அவதார புருஷர் என்றோ, புது யுகத்தின் தீர்க்கதரிசி என்றோ ஒப்புக்கொள்ளுவதற்குச் சுதந்திர தாகமும், சமத்துவ ஆர்வமும் கொண்ட நம்முடைய தேசத்தில்கூடச் சிலர்தான் உள்ளனர். இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. அறியாமையும், ஆராய்ந்து பாராமல் நம்பும் குருட்டுத்தனமும் நம் நாட்டில்தானே அதிகம்! சரித்திர ஞானமும், கல்வியும், தத்துவ ஆராய்ச்சியும், அரசியல் மேதையும் இங்கேயா மலிந்து கிடக்கின்றன?

தற்போது நாம் ஞானசூனியராய், நமக்கு உண்மையில் நன்மை தருவது எது என்றுகூட அறியும் சக்தி இல்லாமல், இகழத்தக்க நிலையில் இருந்த போதிலும், அதிர்ஷ்டவசமாய் நம் கண்களும் இப்போது சற்றுத் திறக்க ஆரம்பித்திருக்கின்றன. சுயநல முதலாளித்துவப் பிரசாரங்களின் பயனாய் மானுஷிக லட்சியங்கள் எல்லாவற்றிலும் சிரேஷ்டமான, புனிதமான அபேதவாத லட்சியங்களை நாம் இன்று திரஸ்கரித்த போதிலும், மகாத்மா காந்தியையும், அவருடைய போதனைகளையுமாவது நாம் உயர்ந்தவை என்று கௌரவப்படுத்துகிறோம். மகாத்மா காந்தியை நாம் எவ்வளவு பூஜிக்கிறோமோ அவ்வளவு ஆர்வத்துடன், அவ்வளவு பக்தியுடன், அன்புடன், நம்மைப் போல் கோடிக்கணக்

காயுள்ள ருஷியர்கள் லெனினைப் பூஜிக்கிறார்கள். அது மட்டுமா? உலகத்தில் எல்லாம் உள்ள பாட்டாளி மக்கள் பூஜிக்கிறார்கள். உலகத்தில் உள்ள மேதாவிகள் எல்லாரும் போற்றுகிறார்கள். ஆங்கில ஆசிரியர் பெர்னார்ட் ஷா சொல்வதைக் கேளுங்கள் :

"லெனின் மனிதப் பிறவிதான். ஆனால் அவர் தம் உடனொத்த மனிதர்கள் யாவரிலும் மேல் போனவர்—ருஷியாவில் மட்டுமில்லை, அகில உலகத்திலுமேதான்......

"லெனின் இப்பொழுது உயிருடன் இல்லாததால் அவரைப் பழைய சரித்திரத்துடன் சேர்க்க வேண்டியதுதான் என்று நீங்கள் எண்ணிவிடக் கூடாது. அபேதவாதத்தைப் புகுத்த அவர் செய்த முயற்சி தோல்வியுற்றதோ, நம்முடைய தற்கால நாகரிகம் முற்றுமே அழிந்துவிடும். இதிலிருந்தாவது அவர் எப்பேர்ப்பட்டவர் என்று அறிந்து கொள்ளுங்கள்.

"நம்முடைய நாகரிகத்துக்கு முன்னால் பற்பல நாகரிகங்கள் இருந்தன வென்று சரித்திரவாயிலாய் நமக்குத் தெரியும். தற்போதைய மேல் நாட்டு முதலாளித்துவ நாகரிகம் ஏற்கெனவே எட்டிவிட்ட உயரம் வரையில் அவையும் ஓங்கி வளர்ந்து, அதன் பிறகு தாழ்ந்து அழிந்தன வென்றும் அறிவோம்.

"அவ்வப்போது, பற்பல சந்தர்ப்பங்களில், மனித இனத்தின் ரத்தினங்கள், வளர்ச்சியைத் தடுக்கும் இடையூறுகளைத் தாண்டிச் செல்ல முயன்றிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் யாரும் அதில் வெற்றி பெறவில்லை. லெனின் மட்டும், ஒரு புதிய முறையை உபயோகித்து இந்த இடையூற்றைக் கடந்து விட்டார்.

"லெனினுடைய முறைகளை இதரர்களும் கண்டுபிடித்தால் நமக்கு ஒரு புது யுகம் பிறக்கும். அழிவு வந்து விடும், வந்து விடும் என்று நாம் என்றென்றும் அஞ்சிக்கொண்டே

இருக்க வேண்டியதில்லை. நாம் மனத்தாலும் கற்பனை செய்து கொள்ள முடியாத புதிய யுகம் ஆரம்பித்தே தீரும். நம்முடைய வருங்காலத்தை லெனினிடம் ஒப்படைப்போமானால் நாம் எல்லாரும் சந்தோஷமா யிருக்கலாம்; அப்படிக்கின்றி, உலகம் பழைய பாதையிலே போய்க் கொண்டிருந்ததோ நான் நெஞ்சில் துக்கத்துடன்தான் சாவேன்."

மகாத்மா காந்தியின் பெருமையை அறியாத் இந்தியன் எவனாவது நம் தேசத்தில் இருக்கிறானா? லெனினைப் பற்றி ஒவ்வொரு சாமானிய ருஷியனும் என்ன நினைக்கிறான், தெரியுமா? "சமூகத்தில் மாறுதல்கள் உண்டாக்கிய சகாப்தங்களில் எல்லாம் சிறந்த சகாப்தத்தின் அவதாரம் லெனின். புதிய,பொதுவுடைமை-சமாஜத்தைச் சிருஷ்டிக்கப் பாட்டாளி மக்களின் பெரும் பேறாக விதிக்கப்பட்டவன் லெனின்...... ஈவிரக்க மற்ற வர்க்கப் போராட்டத்தின் இன்றியமையாத ஆயுதம் லெனின். பொதுவுடைமையின் வருங் காலத்துத் தேஜஸ் லெனின். மனித சமூகத்தின் உயர்ந்த கலைக்கும் உயர்ந்த சிருஷ்டிக்கும் ஒளி விளக்கு அவனே........நமது சகாப்தம் லெனின்தான்; எல்லையற்ற, வருங்கால சகாப்தமும் அவனே. லெனினே சர்வமும்; அவன் அனந்தம்."

மகாத்மா காந்தியைக்கூட நாம் இவ்வாறு புகழ மாட்டோம். 'காந்தி ஒரு மனிதர்தானே!' என்று ஞாபகப் படுத்துகிறவர்கள் அநேகர் இங்கு இருக்கிறார்கள். அவர்கள் மானுஷிகத்தின் பெருமையை அறியக்கூடாதவர்கள். மனிதனைச் சிறுமைப் படுத்துகிறவர்கள். எந்த மகத்துவத்தையும் ஒப்புக்கொள்ளக் கூசுகிறவர்கள். அவர்களைப்பற்றி இங்கு கவலை யில்லை. நமக்குத் தெரிந்த அளவில், இன்றைய இந்தியாவில் மகாத்மா காந்தியும் இன்னும் பல வீர புருஷர்களும் இருக்கின்றனர். அவர்களுடன் லெனினை ஒப்பிட்டுப் பார்த்து

அவருடைய பெருமையை ஒருவாறு உணர்ந்து கொள்வோம். மலையை மலையுடன் ஒப்பிடாமல் ஆழாக்குடன் ஒப்பிடக் கூடுமா?

லெனினும் காந்தியும் மிகப் பெரிய அடிமை நாடுகளை விடுவிக்கப் பிறந்த வீரர்கள். அவர்கள் சாமானிய மக்கள் கடைத்தேறுவதற்காக உழைத்தவர்கள். சாமானிய வாழ்க்கையே வாழ்ந்தவர்கள். ஊமையாய்ப் பேசச் சக்தியற்றிருந்த கோடிக் கணக்கான மக்களின் பிரதிநிதிகள். இத்தியாகிகள் தாம் தங்களுக்குக் கதி என்று சாமானிய மக்கள் அனைவரும் —அறிவினால் அல்ல—உணர்வினால் அறிந்திருந்தார்கள். அவர்களிடம் அளவிறந்த நம்பிக்கை வைத்தார்கள். அவர்கள் வாய் அசைந்தால் லட்சக்கணக்காய் உயிரையும் விடச் சித்தமாயிருந்தார்கள். இந்த நம்பிக்கைக்கு லெனினும் காந்தியும் பாத்திரமானவர்களே.

அவர்கள் ஆடம்பர வாழ்க்கை நடத்தவில்லை. பொது மக்களிடம் தங்களுக்கிருந்த செல்வாக்கைக் கிஞ்சித்தாவது தங்கள் சொந்த நலனுக்கு உபயோகப்படுத்த ஆசைப்படவில்லை. முழத் துணியை உடுத்திக்கொண்டு எளிய குடிசையில் வாழும் மகாத்மாவைப் போல லெனினும் சாமானிய உடை உடுத்தி எளிய வாழ்க்கையே நடத்தினார். பாமர மக்களின் கஷ்ட நிஷ்டூரங்களைத் தாங்களும் அனுபவிக்க, இவ்விரண்டு வீரர்களும் தயங்கவில்லை. ஏழைகளைப் போல ஜீவிப்பதையே இருவரும் விரதமாக ஏற்றார்கள். மக்கள் அனைவரும் வாழ்வதையே தங்கள் சுகிர்தமாகக் கொண்டார்கள்.

ஜாதி அபிமானமோ, கட்சி அபிமானமோ போன்ற குறுகிய நோக்கங்கள் மகாத்மாவுக்குக் கிடையாது. ஒரு வகுப்பின் நலனுக்கு மட்டும் அவர் பாடுபடவில்லை. சொல்லப்

போனால், மகாத்மாவிடம் சுதேச அபிமானத்தை மாத்திரம் கூடக் காண முடியாது. ஏனெனில் பிற தேசத்தாரிடம் அவருக்குச் சிறிதுகூடத் துவேஷம் இல்லை. நம்மை அடிமைப் படுத்தியுள்ள ஆங்கிலேயர்களிடம்கூட அவருக்குக் கோபம் கிடையாது. இங்கிலாந்தில் உள்ள பாட்டாளி மக்களும் இதை உணர்வார்கள். வட்டமேஜை மகாநாட்டின்போது லண்டனில் காந்திஜி தங்கியிருந்த 'ஈஸ்ட் எண்'டில் வாழும் ஒவ்வொரு சாமானிய ஆங்கிலேயனும் அவரைத் தன் துணைவனாகக் கருதி நேசித்தான்.

லெனினும் அப்படித்தான். சமஸ்த ஜனங்களுக்காகவுமே அவர் உழைத்தார். இல்லாதவன், ஏழை, எளியவன் எங்கிருந்தாலும், எந்தத் தேசத்தானாலும், எந்த மதஸ்தனாயிருந்தாலும் அவருக்கு ஒன்றுதான். ஜாதி, மதம், வகுப்பு, தேசம் முதலிய பாகுபாடுகளை அவர் கவனிக்கவில்லை. அடிமைப்பட்டவன், அடக்கப்பட்டவன், துயரப்பட்டவன், ஒதுக்கப்பட்டு விரட்டப்பட்டவன் இவர்களுக்கே தமது உயிரை அர்ப்பணம் செய்தார். பொய்மையையும் சுயநலத்தையும் மகாத்மா வெறுப்பது போலே, சுயநலமும், தீமையும், ஹிம்ஸையும் நிறைந்த முதலாளித்துவத்தை மட்டுமே லெனின் வெறுத்தார்.

இருவருமே மேல்நாட்டு நாகரிகத்தின் போக்கைக் கண்டித்து அதை மாற்றுவதில் சிரத்தை கொண்டார்கள். மேல்நாட்டு நாகரிகத்தின் விபரீதப் போக்கினால் சாமானிய மனிதனின் கௌரவம் தாழ்ந்து அவன் நசுக்கப்படுகிறான் என்பதை இருவரும் உணர்ந்து அந்த நாகரிகத்தை அடியோடு மாற்றத் தலைப்பட்டார்கள்.

சுயநலமும் பணத் திமிரும் பிடித்த ஏகாதிபத்திய உணர்ச்சிதான், யந்திரசாதன உதவி பெற்ற முதலாளித்துவப்

பான்மை கொண்ட மேல்நாட்டு நாகரிகத்தின் உச்ச ஸ்தானம் என்பதைத் தெளிவாய்த் தெரிந்து அதை எதிர்த்தார்கள். ஏகாதிபத்தியத் திமிரை ஒழிப்பதற்கும் பாமர மக்களின் விடுதலையை நாட்டுவதற்கும் அரசியல் சுதந்திரம் கிடைத்தால் மட்டும் போதாது; சமூக சுதந்திரமும் பொருளாதார சுதந்திரமும் கிட்டவேண்டும் என்று துணிந்தார்கள். இப்போதுள்ள அரசியல் சமூகப் பொருளாதார நிலைமையை அடியோடு மாற்ற வேண்டும் என்று பாடுபட்டார்கள்.

ஆனால் மகாத்மா காந்தியின் மார்க்கம் வேறு, லெனினுடைய வழி வேறு. அவர்களை வளர்த்த நாகரிகங்கள் வேறுபட்டவை. அவர்களுடைய சுபாவங்களும் வேறுபட்டவை. எல்லா மதங்களுக்கும் பிறப்பிடமாய், பாரமார்த்திக, ஆத்மீகக் கலைகளுக்குத் தாயாய், பொறுமைக்கும் சகிப்புத் தன்மைக்கும் ஈடற்றவளான பாரதத் தாயின் புதல்வர் காந்தி மகான். வேத வேதாந்தங்களை இயற்றி மகா தபஸ்விகளாய் வாழ்ந்த முனிவர்கள் பரம்பரையில் வந்தவர் காந்தி. கீதா ரகஸ்யத்தை உணர்ந்து பிரம்மஞானம் பெற்ற சாந்த ரிஷி, காந்தி. ஆனால் லெனினோ உலகை எல்லாம் ஜெயித்த மேல்நாட்டு செளரியத்தின் வீரப் புதல்வர். காலத்தையும், தூரத்தையும், காற்றையும், கடலையும், வானையும் வென்ற விஞ்ஞான வளர்ச்சியின் வழித்தோன்றல். இந்த மண்ணுலகிலேயே சுவர்க்கத்தை ஸ்தாபிக்கத் துணிந்த கர்மவீரர். காந்தி பாரமார்த்திகத்தையும் லெளகிகத்தையும் இணைக்கும் தபஸ்வி. லெனின் லட்சியத்தையும் லோகாயதத்தையும் இணைக்கும் போர்வீரர். அவர் பிரம்ம ரிஷி; இவர் க்ஷத்திரிய ரத்தினம். அவர் ஆத்மீக சக்தியாலும் அன்பினாலும் புரட்சி செய்கிறார். இவர் புத்தியாலும் நிர்மாணத் திறமையாலும் புரட்சியை நிறைவேற்றிவிட்டார். காந்திஜியின் சக்தி

மனித புத்திக்குப் புறம்பானது. லெனினுடைய சக்தி மனித புத்தியால் வியக்கத்தக்கது. காந்திஜியின் மார்க்கம் கால தேச வர்த்தமானங்களின் கட்டுக் கடங்காதது. லெனினுடைய முறை கால தேச வர்த்தமானங்களைப் பொறுத்துள்ளது.

லட்சிய பூர்வமாக மட்டும் கவனித்து லெனினைவிட காந்தி உயர்ந்தவர் என்று சொல்லிவிடுவது எளிது. அனுபவத்தைக்கொண்டு ஒத்திட்டுப் பார்க்கையில் லெனின் சாதித்தது மிகப் பெரிது என்று நிச்சயமாகக் கூறலாம். ஆனால் ஒன்று; காந்திஜி, நம் அதிர்ஷ்டவசமாக, இன்று உயிருடனிருக்கிறார். நாளை அவர் சாதிக்கப்போவது எவ்வளவு மகத்தானதோ, நமக்குத் தெரியாது.

காந்திஜியின் அஹிம்ஸா தத்துவம் மிக உன்னதமானது என்பதில் சந்தேகமில்லை. அதற்காக, லெனின் ஹிம்சையையே விரதமாகக் கொண்டவர் என்று தப்பாய் எண்ணி விடக் கூடாது. ஹிம்சை லெனினுடைய லட்சியமில்லை. அதையும் தம் லட்சிய சாதனைக்கு ஒரு கருவியாக, ஒரு ஆயுதமாகக் கொள்ள அவர் தயங்கவில்லை; அவ்வளவுதான். அஹிம்சை மூலம் ஒரு பெரிய புரட்சியைச் சாதிப்பதற்கு நீண்ட காலம் தேவை. வெகு சீக்கிரத்தில், தாமசமில்லாமல், ஒரு புரட்சியைக் கொண்டு வருவதற்கு, இதுவரை நிகழ்ந்த சரித்திரத்தில் ஹிம்சை முறையையும் ஆயுத பலத்தையுந் தவிர வேறு சாதனங்கள் இருந்ததாகத் தெரியவில்லை. ராமபிரானும் கிருஷ்ணபகவானும்கூட தர்மத்தை ஸ்தாபிப்பதற்காக அரக்கர்களையும் கொடியோர்களையும் சம்ஹாரம் செய்துதான் அழிக்கவேண்டியிருந்தது. லெனின் அம்முறையைத்தான் கைப்பற்றினார்; ரண வைத்தியன் சிரங்கை அறுப்பது போல அறுத்து, சமூகத்தின் உயிரைக்

காப்பாற்றினர். பயிரை அழிக்க வரும் முரட்டு மிருகங்களைக் குடியானவன் வேல் எறிந்து கொல்வதுபோல், பொது வுடைமை ஸ்தாபனத்தை எதிர்த்த எதிரிகளை அழித்து அதைக் காத்தார்.

மகாத்மாவுக்கும் லெனினுக்கும் இன்னொரு பெரிய வித்யாசம் உண்டு. ஆனால் அது முன் காட்டியது போல அடிப்படையானதல்ல. அது அவர்களுடைய தேசியப் பொருளாதாரக் கைத்தொழில் சம்பந்தமானது. காந்திஜீ யந்திர சாதனங்கள் இந்தியாவுக்கு ஏற்றதல்லவென்று கருதுகிறார். யந்திரங்களை ஆகாது என்று சொல்லும் பித்தர் என்று காந்திஜீயைக் கூற முடியாது என்றாலும், அவர் நம் தேசத்துக்குக் குடிசைத் தொழில்களை போதும் என்று சொல்லத்தான் சொல்லுகிறார். லெனினோ, விஞ்ஞான சாஸ்திரீய விளைவுகளிலும், யந்திர சாதனங்களிலும் அளவிறந்த நம்பிக்கை வைத்திருந்தார். வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவு முதலிய பொருள்களை யந்திர சாதனங்களால் ஏராளமாய் உற்பத்தி செய்து, சமஸ்த ஜனங்களையும் குறைவில்லாமல் வாழ வைக்க வேண்டுமென்று ஆசைப்பட்டார். அதற்கான பிரயத்தனங்கள் யாவும் செய்தார். ஒரு புறம், அரசாங்கத்தையும் ஜன சமூகத்தையும் எதிர்த்துப் போரிட்ட பிற தேச சைனியங்களுடன் யுத்தம் செய்துகொண்டே, இன்னொரு புறம் நாடு முழுவதிலும் மின்சார சக்தியைப் பரப்பிக் கொண்டிருந்தார்.

1921-ம் வருஷத்தில் லெனினுடைய போல்ஷிவிக் அரசாங்கத்தின் உயிருக்கே ஆபத்து நெருங்கிக் கொண்டிருந்தது. தலை நகரமான மாஸ்கோவை எதிர்ப் படைகள் அணுகிவிட்டன. அந்தச் சமயத்திலும் லெனின் தம்முடைய ஆக்க வேலைகளை நிறுத்தவில்லை. "கோர்க்கை, ஜியாநோவா பிரதேசங்களில் உள்ள குடியானவர்களுக்கு தட்சணமே மின்சார விளக்குகள்

சப்ளை செய்தாகவேண்டும்" என்று ஓர் அவசரச் சட்டம் பிறப்பித்தார். சதாவதானம் செய்யவும் சக்தி கொண்டிருந்த அவருடைய மகத்தான மூளையால் ஆக்க வேலையையும் அழிப்பு வேலையையும் ஒருங்கே கவனிக்க முடியாதா என்ன?

லெனின் பிறப்பு சாமானியம்தான். வளர்ப்பும் சாமானியம்தான். வாழ்க்கையும் எளிய வாழ்க்கைதான். 1917-ல் புரட்சி தொடங்கும் வரையில் அவருடைய பெருமையை சிற்சில நண்பர்களைத் தவிர மற்றவர்கள் அறியக் கூடவில்லை. தன்னலமற்ற, உண்மையான ஊழியர் என்று மட்டும் பலர் அறிவார்கள். ஆனால் அவருடைய எஞ்சா னுடம்பில் மகா சக்தியே வாசஞ் செய்கிறாள் என்று யாரும் தெரிந்து கொள்ளவில்லை. அந்த சக்தி பயங்கரமாய் வெடித்தெழுந்து அண்ட சராசரங்களை எல்லாம் ஆட்டிவைக்கும் என்று யாரும் கனவுகூடக் கண்டிருக்க முடியாது. ஆனால் 1917-ல் அவருடைய ஆவேசம், அவருடைய வீரியம், ஹனுமானின் விசுவரூபம் போலக் கிளம்பியது. இதுவரை பாட்டாளி மக்கள் அடக்கிவைத்திருந்த ஆங்காரமும், ரோஷமும், கோபமும் உக்வேகத்துடன் லெனினுகப் புறப்பட்டது!

சுருங்கச் சொன்னல், லெனின் ஒரு சம்ஹார ஸ்வரூபம். பொதுவுடைமையையும் புரட்சியையும் எதிர்த்தவர்களுக்கு அவர் லவலேசமும் ஈவிரக்கம் காட்டவில்லை. அவருடைய இளகிய மனது, அந்த ஒரு விஷயத்தில் மட்டும், இரும்பையும் வைரத்தையும் காட்டிலும் கடினமாயிருந்தது. அவருடைய வெறும் பிடிவாதக் குணம் என்று மற்றவர்கள் கருதியது இப்போது மூர்த்தன்யமாய், தடுக்க முடியாதபடி செல்லும் மலை போன்ற தேரின் வேகமாயிற்று. அந்தத் தேரின் சக்கரங்களில் அகப்பட்டு நசுங்கிப் போனவர்களைப்பற்றி அவர் சிறி

தும் கவலைப்படவில்லை. பொதுவுடைமையைக் காப்பாற்றுவ தன் நிமித்தம் எத்தனை பேரை அழிக்கவேண்டியிருந்தாலும், எவ்வளவு இரத்தம் சிந்தவேண்டியிருந்தாலும் அவர் பயப் படவில்லை. கொள்கையிலும் மார்க்கத்திலும் சற்று வேறு பட்டவர்களையும் அவர் தம் லட்சியத்துக்கு விரோதிகளா கவே கருதினர். அவர்களைச் சிநேக முறையில் ராஜி செய்து கொள்ள அவர் விரும்பவில்லை. "அரசியல் எதிரிகளுடன் ராஜி செய்துகொள்ள ஒரு விதி எனக்குத் தெரியும்—அதா வது அவர்களை நொறுக்கித் தள்ளுவது!" இதை அவர் கோபா வேசத்துடன் சொல்லவில்லை. மனத்தில் தைக்கும் வண்ணம் மிகுந்த நிதானத்துடன் கூறினர்.

புரட்சிக் காலத்தில், லெனின் இல்லாத ஒரு சமயத்தில், சைனியம் சம்பந்தமாக மரண தண்டனையே விதிப்பதில்லை என்று சர்க்கார் தீர்மானித்தார்கள். அதைக் கேள்வியுற்ற லெனின், "சுத்தப் பைத்தியக்காரத்தனம்! முழுப் பைத் தியக்காரத்தனம்! மரண தண்டனை விதிக்காமல் எப்படி ஐயா புரட்சியை நிறைவேற்றுவது?...சுத்தத் தவறு! மன் னிக்க முடியாத இளக்காரம்! கையாலாகாதவன் காணும் கனவு!" என்றெல்லாம் கோபித்தார். பிறகு அந்தத் தீர்மா னம் சத்தமில்லாமல் கைவிடப்பட்டது.

பாட்டாளி மக்களின் சுதந்திரத்தையும் ஆட்சியையும் ஸ்தாபிப்பதில், அதற்குத் தடையாக எது தோன்றினும் லெனின் அதை அறுத்தே தீர்த்தார். பொதுவுடைமையை மதம் எதிர்க்கிறதா? "கடவுளைத் தூக்கி எறி! பொதுவுடை மைச் சமூகத்தின் முதல் விரோதி கடவுள்!" என்றார். இளஞ் சிறுவர்களைக் குருட்டு நம்பிக்கைகளும் பொய்க் கதை களும் கெடுத்துவிடாமல் உண்மையான விஞ்ஞான ரீதிப்படி

பயிற்றுவிக்கவேண்டு மென்பதற்காக மத போதனையையே அரசாங்கத்தின் கல்வித் திட்டத்திலிருந்து அகற்றிவிட்டார்.

உலக சரித்திரத்திலும் சரி, தனி மனிதர்கள் வாழ்க்கையிலும் சரி, காமமும் குரோதமும்தான் எல்லாக் காரியங்களுக்கும் ஆஸ்பதமா யிருக்கின்றன வென்பது நிச்சயம். மனிதச் செயல்கள் ஒவ்வொன்றுக்கும் மனிதன் இச்சையோ துவேஷமோதான் ஆதி காரணம். ஆசைக்கும் வெறுப்புக்கும் உள்ளது போன்ற சக்தி வேறொன்றுக்கு மில்லை. உலகில் நடக்கும் எப்பேர்ப்பட்ட நிகழ்ச்சிக்கும் அன்போ, துவேஷமோதான் தூண்டுகோல்.

ஆக்க வேலைகளை அன்பும், அழித்தல் வேலைகளை வெறுப்பும் தூண்டுகின்றன. பெரிய வீரர்களிடம் இவ்விரு குணங்களும் அதிகமாகவேதான் காணப்படும். துவேஷமே இல்லாமல் அன்பே உருவெடுத்த வீரர்கள் மகாத்மாக்கள். அப்பேர்ப்பட்டவர்களான புத்தரையும், இயேசுவையும், காந்தியையும் யுகத்திற்கு ஒருவராய்த்தான் காணலாம். நன்மை தருவனவற்றில் ஆசையும், தீமைமீது வெறுப்பும் கொண்டவர் லெனின். சம்ஹார வேலையில் அவர் ஈடுபட்டிருந்த போது அவருடைய துவேஷத்தையும் கோபத்தையும் கண்டவர்கள், லெனின் கோபாவேசத்தின் ஸ்வரூபமே என்றார்கள். "அவரிடத்தில் ஓர் ஆழ்ந்த, அணைக்க முடியாத கோபத் தீயைக் காணலாம். பரசிரம ஜீவிகளின் மூக்கை உடைக்கக் கிளம்பிய முஷ்டி போல் அது எழும்பிப் பாயும். உள்ளேயே எரிந்து கொண்டிருந்த இந்தக் கோபாக்கினியால் அவருடைய முகத் தோற்றம் கூட காலக்கிரமத்தில் மாறிவிட்டது" என்று சொல்லுகிறார் ஜினோவீவ். ஆனால் இந்தக் கோபமும் துவேஷமும், முதலாளித்துவத்தால் உலகில் நடக்கும் சகிக்க முடியாத அநியாயங்

களாலும், ஏழைகளின் கஷ்டங்களாலும் தோன்றினவையே தவிர, திருவாளர் ஈ. வெ. ராமசாமி நாய்க்கரின் கோபத்தை யும் துவேஷத்தையும் போல உடம்புடன் ஒட்டிப் பிறந்தவை யல்ல

லெனினுடன் பழகினவர்கள் எல்லாரும் அவரு டைய அன்பு நிறைந்த இருதயத்தைப் பற்றியும், சிநேகத் தன்மையைப் பற்றியும், இதமான சம்பாஷணையைப் பற்றி யும் சாட்சியம் கூறுகிறார்கள். அவருடைய அன்பைக் காட் டும் கதைகள் பல இன்றும் ருஷியாவில் வழங்கி வருகின்றன. அவருடைய கபடமற்ற சிரிப்பைக் கேட்ட ஒரு கிழச் செம் படவன், "ஆ! இந்த மாதிரி வாய்விட்டுச் சிரிக்கிற மனுஷ னிடம்தான் கள்ளத்தனமே இராது!" என்றான். குடியான வர்களும் சாமானிய மக்களும் லெனினுடன் நெருங்கிப் பழகு வதற்குப் பயப்படவே இல்லை. அவரைப் பார்த்தவுடனேயே அவர்களுக்கு, 'இவர் நம்முடைய மனுஷர்' என்ற நம்பிக்கை பிறக்கும். ஒரு தரம் அவர் பேச்சைக் கேட்டார்களோ, தட்சணமே அவர்தான் தம்மைக் கடையேற்ற வந்த அவதார புருஷர், அவரைப் பின்பற்றினால் தம் கஷ்டங்கள் எல்லாம் தீர்ந்துவிடும் என்ற உறுதி பெற்றுவிடுவார்கள். லெனினுக்கு இருந்த இந்த வசீகர சக்திக்கு ஈடாய் வேறு யாரிடமும் காண முடியாது.

அவருடைய பேச்சு சாமானிய ஜனங்களை வசீகரித்து ஆட்கொண்டதற்குக் காரணம் அவருடைய தன்னலமற்ற கருத்தும், ஆர்ப்பாட்டமற்ற எளிய பாஷையும்தான். ட்ராட்ஸ் கியைப் போல, கேட்போரின் இதயத்தைத் துடிக்கச் செய்து அவர்களுடைய கற்பனை சக்தியைத் தூண்டும் சந்தி ரங்களை இவரிடம் பார்க்க முடியாது. சுற்றிச் சுற்றி வளைத்

துக் கட்டிப் பேசமாட்டார். விஷயத்தை மிகச் சுலப மாய் யாரும் புரிந்துகொள்ளலாம். ஆனால் கேட்டவர் உடனேயே மன உறுதியும் வீரமும் பெற்றுக் காரியத்தை நடைமுறையில் சாதிக்கத் துணிந்துவிடுவார்கள். ராஜாஜி யைப்போல லெனினும் எளிய,சாமானியமான உவமைகளால் தம் கருத்துக்களை வெளியிடுவார். சுருக்கமாகத்தான் பேசு வார். எந்தப் பேச்சிலும் ஒரே கருத்துத்தான். புரட்சியை நிறைவேற்றிப் பொதுவுடைமையை ஸ்தாபிக்கவேண்டும் என் பதுதான் அது. மேடைப் பிரசங்கங்களில் மட்டுமன்றி, தனி யாய்ப் பரஸ்பரம் சம்பாஷிப்பதில்கூடச் சாமானிய மக்களைக் கிரியாம்சைக்குத் தூண்டும் சக்தி லெனினுக்கு இருந்தது. லாண்டன் ஆல்டனேவ் என்பவர் கூறும் ஒரு சம்பவத்தில் இதற்கு ஒரு நல்ல திருஷ்டாந்தம் உள்ளது. ஒரு சமயம் லெனினைக் காண்பதற்கு சாமானியத் தொழிலாளி ஒருவன் வந்திருந்தான். அவன் யாரோ, எவனோ, பெயரும் ஊரும் தெரியாது. லெனினுடன் சில நிமிஷங்கள் பேசிக்கொண் டிருந்துவிட்டுத் திரும்பினான். போகும் போது அவன் முகத்தில் ஒரு புதிய ஒளியும் ஊக்கமும் பிரகாசித் தது. லெனின் என்ன சொன்னார் என்று அவனைக் கேட்டதற்கு, அவன் இவ்வாறு பதில் சொன்னானும்: "என்ன சொன்னார்? 'எல்லாம் உனக்குத்தான் சொந்தம்! உலகம் பூரா உன்னுடையதுதான். எல்லாவற்றையும் நீயே எடுத்துக்கொள்! பூமி முழுவதும் பாட்டாளி மக்களுடையது தான். நீங்கள்தான் நியாயமான சொந்தக்காரர்.' அவ்வளவு தான்!"

இவ்வாறு தங்களை உய்விக்க வந்த லெனின் வாஸ்தவத் தில் இறந்தே போனாரென்று சாமானிய ருஷிய மக்கள் நம்ப முடியவில்லை. ...கிய ஒரு இயக்கத்தையும் வாழ்க்கையையும்

பிறப்பித்துக் காத்து நடத்திக்கொண்டிருந்த அவதார புருஷருக்கு மரணமே சம்பவிக்காது என்று, பாவம், அவர்கள் கருதினார்கள். அவர் இறந்துதான் போனார் என்று அறிவிக்கப்பட்டபோதும், அவர்கள் அது பொய்யா யிருக்கலாம், லெனின் மறுபடி நம்மிடை தோன்றுவார் என்று கனவு கண்டனர். அவர்களின் கனவுகள் இன்னும்கூட சாமானிய ஜனங்களிடை உலாவிக்கொண்டிருக்கின்றன. பூத வாழ்வை நீத்தாலும் என்றும் அழியாத சிரஞ்சீவியாய்ப் புகழுடம்புடன் லெனின் வாழுகிறார் என்பதற்கு அவையே போதுமான சான்று.

லெனின் இறந்த பிறகு அவருடைய உடலை ருஷிய விஞ்ஞானிகள் அறுத்துப் பரிசோதித்தனர். அவருடைய மூளையிலிருந்த ரத்தக் குழாய்கள் எல்லாம் கல்லாய் இறுகிப் போயிருந்தன. அதற்குக் காரணம் லெனினுடைய அசாதாரணமான உழைப்புத்தான். ரத்தக் குழாய்கள் வெகு காலத்துக்கு முன்பே இறுக ஆரம்பித்திருக்க வேண்டும். அவை முழுவதும் இறுகிப் போகும்வரை லெனின் ஜீவித்திருந்ததே மிகப் பெரிய ஆச்சரியம் என்றுதான் விஞ்ஞானிகள் கருதுகின்றனர். அப்படி அவர் வாழ்ந்ததற்கும் அவருடைய வியக்கத்தக்க மனோபலம்தான் காரணமா யிருந்திருக்கும்!

1917-ல் புரட்சி ஆரம்பித்ததிலிருந்து ஓய்வு ஒழிவின்றி இராப் பகலாய் உழைத்து ருஷியாவில் புது யுகத்தை ஸ்தாபித்து, மகத்தான காரியங்களைத் தனியாக, யாருடைய துணையுமின்றி, முடித்தவர் லெனின்தானே? அவர் இறந்துவிடலாமோ என்ற சந்தேகம் தோன்றின போதெல்லாம் ட்ராட்ஸ்கிக்குக்கூட 'பிறகு என்ன செய்வது?' என்ற கலக்கம்தான் உண்டாயிற்று. லெனின் இல்லாவிடில்

பொதுவுடைமை அரசாங்கம் முறிந்துவிடும், ருஷியாவே பாழ் என்று எல்லாருக்கும் தோன்றியது. அப்படி எல்லாவற்றிற்கும் ஆதாரமாய், கட்டிடம் பூராவையும் தாங்கி நிற்கும் தூண் போலே லெனின் இருந்து வந்தார். அவ்வளவு வேலையும் அவர் தலைமேலேதான். மனித உடலுக்கு எவ்வளவுதான் சாத்தியம்? எத்தனை காலம்தான் வெறும் மனோபலத்தால் உயிரையும் உடம்பையும் தள்ளிக்கொண்டு போக முடியும்?

லெனின் இறந்தால் என்னவாகுமோ என்று கவலைப்பட்டவர்கள் இன்று மனத் திருப்தியுடன் இருக்கும்படி அவருடைய உதவியாள் ஸ்டாலின் செய்துவிட்டார். ஸ்டாலினுக்கும் லெனினுக்கும் பல வித்தியாசங்கள் இருந்தபோதிலும், ருஷியாவில் பொதுவுடைமை ஸ்தாபனம் அழியாது பார்த்துக்கொள்ளும் நோக்கத்தில் இருவரும் ஒன்றுபட்டவர்களே. லெனின் ஒரு அவதார புருஷர், அவருடைய ஞாபகத்தை ஜனங்கள் என்றென்றும் மறக்காமலிருக்கவேண்டும் என்று ஸ்டாலின் பாடுபடுகிறார். அடுத்த அத்தியாயங்களில் ஸ்டாலினும், புகழ்பெற்ற ருஷிய ஆசிரியர் கோர்க்கியும் இன்னும் மற்றவர்களும் லெனினைப்பற்றிக் கூறியுள்ளதை மொழிபெயர்த்துக் கொடுத்திருக்கிறது.

9. நிர்மாண கர்த்தா லெனின்

[ஸ்டாலின் எழுதியது]

மார்க்ஸீயத்தாரில் இரு வகுப்புக்கள் உண்டு. இரு வகுப்பாருமே மார்க்ஸின் பேரால் காரியங்கள் நடத்துகின்றனர்; தாங்கள்தாம் நிஜமாக மார்க்ஸின் கொள்கைகளைப் பின்பற்றுவதாக இருவருமே கருதுகின்றனர். என்றாலும் அவர்களை ஒன்றாக நினைக்க முடியாது. கவனித்துப் பார்த்தால் அவர்களுக்கிடையே ஓர் அகண்ட பாதாளம் கிடந்து அவர்களைப் பிரிக்கிறது. ஏனெனில் அவர்களுடைய வழிகள் ஒன்றிற்கொன்று முற்றிலும் வேறுபட்டவை.

அவர்களில் முதல் வகுப்பார் அநேகமாய்ப் பெயரளவில்தான் மார்க்ஸீயர்கள். தங்கள் கொள்கையைப் பறையடிப்பதுடன் அவர்கள் நின்றுவிடுகிறார்கள். மார்க்ஸீயத்தின் ஆழ்ந்த உட்கருத்தை அவர்களால் அறிந்துகொள்ள முடியவில்லையோ அல்லது இஷ்டமில்லையோ; அனுபவத்தில் அதைக் கொண்டுவரத் தெரியவில்லையோ, அல்லது விருப்பமில்லையோ; மார்க்ஸீயத்தின் உயிர்கொண்ட புரட்சித் தத்துவங்களை இவர்கள் அர்த்தமற்ற, உயிரற்ற, திவச மந்திரமாய் மாற்றிவிடுகிறார்கள். அனுபவத்தையும் காரியாம்சத்தையும் விட்டுவிட்டு மார்க்ஸை ஒப்பிப்பதிலேயே இவர்கள் ஈடுபடுகிறார்கள். கண்கூடாக இன்று நடக்கும் உண்மை நிகழ்ச்சிகளை விட்டுவிட்டு, உவமைகளையும் சரித்திர உதாரணங்களையும் தேடி அலைகிறார்கள். இவர்களுடைய பேச்சுக்கும் நடத்தைக்கும் சம்பந்தமே இராது — இதுதான் இவர்களைப் பிடித்துள்ள அடிப்படையான நோய். இவர்கள் ஏமாறுவதற்கும், 'ஐயோ, விதியே!' என்று எப்பொழுதும் நொந்துகொள்வதற்கும் இந்த நோய்தான் கார

ணம். இதனால்தான் இவர்கள் வழி தவறிப்போய் மடத்தன மாய் அகப்பட்டுக்கொண்டு விழிக்கிறார்கள். ருஷியாவில் இந்த வகுப்பாருக்கு 'மென்ஷிவிக்குகள்' என்று பெயர். ஐரோப்பாவில் இவர்களையே சந்தர்ப்பவாதிகள் என்கிறார் கள்.........

இரண்டாவது வகுப்பினர், மார்க்ஸின் கொள்கைகளை வாயால் ஒப்புக்கொண்டால் மட்டும் போதாது, அவற்றை அனுபவத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்கிறவர்கள். சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு வழிகளை அமைத்தும் மாற்றி யும் மார்க்ஸீயத்தைக் கிரியாம்சையில் கொண்டுவருவதற் குத்தான் இவர்கள் முக்கியமாய்ப் பாடுபடுகிறார்கள். சரித்திர உதாரணங்களிலோ உவமைகளிலோ அல்லாமல், சுற்றியுள்ள கால தேச வர்த்தமானங்களில் கவனம் செலுத்துகிறார்கள். பழைய பாடங்களையும் வாக்கியங்களையும் வெறுமனே ஒப்பிப் பது இவர்கள் நோக்கமல்ல. நிஜமான அனுபவ பூர்வமாக நடந்து, ஒவ்வொரு படியிலும் நின்று சரிதானா என்று பார்த்து, பிசகா யிருந்தால் நிவர்த்தி செய்து, மற்றவர் களும் புதிய ஒரு வாழ்க்கையை நிர்மிக்கக் கற்றுக்கொடுக் கிறார்கள். இவர்களுடைய நடத்தைக்கும் வார்த்தைக்கும் பேதமில்லாம லிருப்பதற்கும், இவர்களுடைய உயிருள்ள புரட்சிச் சக்தியை மார்க்ஸின் போதனைகள் பூரணமாக ஆத ரித்து நிற்பதற்கும் மேற் கூறியதுதான் உண்மையான கார ணம். மார்க்ஸீயத்தார் உலகப்போக்கை விளக்குவதோடு மட் டும் நிற்கக் கூடாது, உலகத்தின் போக்கையே மாற்றவேண்டி முன்னேறவேண்டும் என்று மார்க்ஸ் கூறியிருப்பது இவர் களுக்கே சரிவரப் பொருந்தும். இவ்வகுப்பைத்தான் 'போல்ஷி விக்கர்கள்' அல்லது பொதுவுடைமைக் கட்சியினர் என்று அழைக்கின்றனர். இவ் வகுப்பின் நிர்மாண கர்த்தா லெனின்.

மேல் நாட்டில் தொழிலாளர் கட்சிகள் ஏற்பட்டபோது அங்கிருந்த நிலைமையும், ருஷியாவில் பாட்டாளி மக்களின் கட்சி ஏற்பட்டபோது இருந்த நிலைமையும் ஒன்றிற்கொன்று வேறுபட்டவை. பிரான்ஸ், ஜெர்மனி முதலிய மேல் நாடுகளில், நடுத்தர மக்கள் புரட்சி செய்து வெற்றிபெற்று, அதிகாரத்தைக் கைப்பற்றித் தங்களுடைய சட்ட சபைகளை அமைத்துக்கொண்டு, பாட்டாளி மக்களை எதிர்த்து நின்ற காலத்தில், தொழிற் சங்கங்கள் அங்கே சட்ட பூர்வமாக ஏற்பட்டு, அவற்றின் மூலம் தொழிலாளர் கட்சிகள் முளைத்தன. ருஷியாவிலோ என்றால், நடுத்தர மக்களின் ஜனநாயகப் புரட்சி ஏற்படுவதற்கு முன்னால், மிகக் குரூரமான கொடுங்கோல் ஆட்சியின்போது, பாட்டாளி மக்களின் கட்சி உண்டாக ஆரம்பித்தது. ஆகவே ஒரு புறத்தில், நடுத்தர மக்களின் புரட்சிக்காகப் பாட்டாளி மக்களைப் பயன்படுத்திக் கொள்ள ஆசைகொண்ட 'சட்டபூர்வமான மார்க்ஸீய'த்தார் கட்சி ஸ்தாபனங்களில் ஏராளமாய்ப் புகுந்து கொண்டனர். இன்னொரு புறத்தில், மிகச் சிறந்த ஊழியர்களை ஜார் அரசனின் போர்வீரர்கள் கட்சிக்கு உழைப்பதிலிருந்து அகற்றிக்கொண்டிருந்தார்கள். தானாக வளருகின்ற புரட்சி இயக்கத்தைச் சரியான முறையில் நடத்துவதற்கு, கொடுங்கோன்மையை ஒழிக்கத் தக்க, உறுதி கொண்ட, ஒன்றுபட்ட ஊழியர்கள் நடுவிலிருந்துகொண்டு ரகசியமாக உழைப்பது மிக மிக அவசியமாயிருந்தது.

இதற்கு முதல் வேலை, கருக்காயை நெல்லிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும். போலிகளிலிருந்து அசல் சரக்கைத் தனியாகப் பிரிக்கவேண்டும். அவ்வவ்விடங்களில் அனுபவமுள்ள புரட்சி வீரர்களை ஒன்று சேர்க்கவேண்டும். அவர்களுக்கு எல்லாம் நிச்சயமான ஒரு திட்டத்தையும் உறுதி

யான முறைகளையும் காட்டவேண்டும். பிறகு இச்சிறு படைகளை எல்லாம் ஒன்றுகூட்டி அவர்களைப் புரட்சியே லட்சியமாகக் கொண்ட சைனியமாகத் திரட்டவேண்டும். இச்சைனியம் ஜாரின் போர்வீரர்களால் கண்டுபிடிக்க முடியாதபடி ரகசியமாகவும் வேலை செய்யவேண்டும். ஆனால் பொதுமக்களுடன் அவர்கள் உறவு வைத்துக்கொள்ளவும் வேண்டும். ஏனெனில் சரியான சமயத்தில் பொதுமக்கள் இவர்களுடைய தலைமையில் புரட்சி செய்யத் தயாராகவும் வேண்டும்.

மென்ஷிவிக்குகளுக்கு இந்தப் பிரச்னையில் கொஞ்சம் கூடக் கஷ்டமிருப்பதாகத் தெரியவில்லை. மேல் நாடுகளில் எல்லாம், தொழிலாளர்களின் பொருளாதார நிலைமை சீர் திருந்துவதற்காகப் போராடும் தொழிற் சங்கங்களிலிருந்து தானே தொழிலாளரின் அரசியல் கட்சிகள் தோன்றின? ஆகையால் ருஷியாவிலும் அப்படியே செய்துவிட்டால் போகிறது என்றார்கள். அதாவது, பலவேறு இடங்களில், முதலாளிகளுடனும் அரசாங்கத்துடனும் தொழிலாளர்களின் பொருளாதாரப் போராட்டத்தை மட்டும் இப்போதைக்கு நடத்துவது; அகில ருஷியப் புரட்சி ஸ்தாபனம் எதுவும் வேண்டியதில்லை: அப்புறம்—அதற்குள் தொழிற் சங்கங்கள்கூடத் தோன்றவில்லை என்றால், பிறகு வேண்டுமானால் தொழிலாளர்களின் காங்கிரஸ் ஒன்றைக் கூட்டி, அதையே அரசியல் ஸ்தாபனமாக நிர்மித்து விடலாமே என்றார்கள்.

ஆனால் மென்ஷிவிக்குகளின் இந்தப் 'பிளான்' உண்மையில் எப்பேர்ப்பட்டது? ருஷிய நிலைமையுடன் கவனித்துப் பார்த்தால் இது வெறும் பகற்கனவு என்பது தெளிவாகும். அதோடு, அரசியல் கட்சி என்ற தத்துவத்தையே பழிக்கும் கிளர்ச்சியை அடிப்படையாக எங்கும் பரவச் செய்யும் நோக்கம் கொண்டது. கட்சிப் படைகளை அழித்து,

பாட்டாளி மக்களின் சொந்தக் கட்சி என்பதே இல்லாமல் செய்து, அவர்களை லிபரல்களின் சூட்சிக்கும் ஆட்சிக்குமாய்த் துரோகம் செய்துவிடக் கூடியது. இந்த உண்மை அக்காலத்தில் மென்ஷிவிக்குகளுக்குத்தான் தெரியவில்லை என்றால், போல்ஷிவிக்கர் அநேகருக்கும்கூடப் புலப்படவில்லை.

ருஷியப் பாட்டாளி மக்களுக்கு லெனின் செய்த பேருதவி, மென்ஷிவிக்குகளின் இந்த மோசடிப் பிளானால் விளையக்கூடிய அபாயத்தை, அப்பொழுதே, இந்தப் பிளான் பரிபூரணமாக அதன் கர்த்தர்களுக்கு விளங்கும் முன்னரே, எடுத்துக் காட்டியதுதான். அப்படிச் செய்ததோடு நில்லாமல், லெனின், காரியாம்சையில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் யாவருடைய கவனத்தையும் கவரும்படியாக, மென்ஷிவிக்குகளின் நிர்மாண பலவீனத்தை முழு வேகத்துடனும் எதிர்க்க ஆரம்பித்தார். ஏனென்றால் இப்பிரச்னைதான் அரசியல் கட்சி ஸ்தாபனத்தின் உயிரை உண்டாக்குவதற்கோ, அதற்கு உலை வைப்பதற்கோ சாதகமானது.

அகில ருஷிய அரசியல் கட்சிக்காக ஒரு பத்திரிகை ஸ்தாபிக்கவேண்டும். அதன் மூலம் தொழிலாளர் சக்தியை எல்லாம் ஒன்றுதிரட்டவேண்டும். பல்வேறு இடங்களில் கட்சிப் படைகளாகக் கிளைச் சபைகள் ஏற்படுத்தவேண்டும். பத்திரிகையின் மூலம் அவற்றை எல்லாம் இணைத்து ஒன்றாக்கி அவற்றை ஒரு அகில ருஷியப் புரட்சிக் கட்சியாக்க வேண்டும். அக்கட்சிக்கு நிஷ்கரிஷையான திட்டம் வகுத்து அதன் நடைமுறைகள் நிர்ணயிக்கப்படவேண்டும். கட்சியை இயக்க ஒரு தலைவன் வேண்டும். இதுதான் லெனின் தம்முடைய பிரசித்தி பெற்ற "என்ன செய்வது?" "ஓரடி முன்னே, ஈரடி பின்னே" என்ற பிரசுரங்களில் விவரித்த திட்டம். இத்திட்டத்தின் சிறப்பு

என்னவென்றால், இதுதான் உண்மையில் அன்று ருஷியாவில் தேவையாயிருந்ததைப் பூர்த்தி செய்யக்கூடியதா யிருந்தது. மேலும் கிரியாம்சையில் ஈடுபட்டிருந்த சிறந்த ஊழியர் களின் அனுபவத்தின் சாராம்சத்தைக் கைதேர்ந்த முறையில் விளக்கி யிருந்தது. இத்திட்டத்தை ஏற்க நடந்த போராட் டத்தில், ருஷிய ஊழியர்களில் பெரும்பாலோர், பிளவு வருகிறதே என்று கூடத் தயங்காமல் லெனினைப் பின்பற்றி ஞர்கள். இத்திட்டத்தை ஏற்கச் செய்வதில் பெற்ற வெற்றி தான் பொதுவுடைமைக் கட்சியின் எஃகைப் போன்ற உறு திக்கும், ஈடில்லாத ஒற்றுமைக்கும் அடிகோலியது.

லெனின் வெறும் வாதமும் சண்டையும் உண்டாக்குகிற வர் என்றும், சமரஸப்படுத்துகிறவர்களையும்கூடப் பிடிவாத மாய்த் தடுத்து எதிர்க்கிறவர் என்றும், மென்ஷிவிக்கு களுடன் சேர்ந்து நமது தோழர்கள்கூட அநேகந் தடவை பழித்தார்கள், குற்றஞ்சாட்டினார்கள். அவர்கள் சொன்னதில் உண்மையிருந்தது என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் ஒன்று; நம் மத்தியிலிருந்து பாட்டாளி மக்க ளல் லாத வெறும் சந்தர்ப்ப வேஷதாரிகளை அகற்றியிராது போனால் நமக்குள்ளேயிருந்த பலவீனத்தைப் போக்கிக் கொண்டிருக்க முடியாது. நமக்கு எட்டவிருந்த பலத்தை யும் அதிகாரத்தையும் நாம் பிடித்திருக்கவும் முடியாது என் பதைப் புரிந்து கொள்வதிலும் கஷ்டமிராது. நடுத்தர மக் களின் ஆட்சி நடக்கையில் நாம் எவ்வளவுக் கெவ்வளவு நம் மத்தியிலும் தொழிலாளர்களிடையும் உள்ள சந்தர்ப்ப வேஷ தாரிகளுடனும், புரட்சிக்கு எதிராய் வேலைசெய்கிறவர்களுட னும், கட்சித் துரோகிகளுடனும் போரிடுகிறோமோ, அவ் வளவுக் கவ்வளவுதான் பாட்டாளி மக்களின் கட்சிக்குப் பலம் வளரும். "கட்சியைச் சுத்தம் செய்து அழுக்குகளை அகற்

றுவதால் அதற்குப் பலமே" என்று லஸால் சொல்லியது முற்றிலும் உண்மை.. ஆம், லெனின் செய்ததுதான் சரி என்று நான் ஆயிரம் முறை கூறவும் தயார். அப்பேர்ப்பட்ட நிர்மாணத் திட்டத் தினால்தான் நமது கட்சியில் சிறந்த ஒற்றுமை ஏற்பட்டது. அதன் காரணமாகத்தான் 1917 ஜூலையில் கெரன்ஸ்கியும் மென்ஷிவிக்குகளும் தொழிலாளரைச் சதிசெய்யக் கொண்டு வந்த நெருக்கடிக்குச் சாகாமல் பிழைத்தது; அதன் பிறகு அக்டோபரில் நிகழ்ந்த பெரும் புரட்சியைத் தானே முன் னின்று நடத்தி வைத்தது. அதற்கப்புறம் ப்ரெஸ்ட்-லிடா வ்ஸ்க் சமாதானத்தை ஏற்கும்போது ட்ராட்ஸ்கியும் புக்காரி னும் உண்டுபண்ணப் பார்த்த பிளவையும் நெருக்கடியையும் தாண்டிச் சென்றதும் அதனால்தான். கடைசியில் நேச தேசங்கள் மீது வெற்றி பெற்றதற்கும், முடிவில், இன்று, எந்த நிமிஷத்திலும் சேர்தி நத்திக்கொண்டு லக்ஷக்கணக்கான அங்கத்தினர்களை எப்பேர்ப்பட்ட மகத்தான காரியத்திலும் இறங்கும்படி செய்யவும், நடுவில் ஒரு குழப்பமும் நேராத படி பார்த்துக் கொள்ளவும் சக்தி வாய்ந்திருப்பதற்கு அன்று லெனின் போட்ட திட்டமே காரணம்.

* * * *

ருஷியப் பொதுவுடைமைக் கட்சியின் அமைப்புச் சிறப் புக்கள் ஒருபுற மிருக்கட்டும். அதனுடைய காரியங்களின் அரசியல் அம்சமும், வேலைத் திட்டமும், முறைகளும் ருஷி யாவின் வாஸ்தவமான நிலைமைக்கு ஏற்றதாக இல்லாதிருந் தால், இவ்வளவு சிக்கிரமாக அக்கட்சி பலம் அடைந்து வளர்ந்திருக்க முடியாது. தொழிலாளிப் பொதுமக்களை அத

னுடைய கோஷங்கள் விழிப்படையச் செய்து புரட்சி இயக்கத்தைப் பெரிதாக்கி விராவிட்டாலும் இது முடியாது. ஆகவே இவ்விரண்டையும் இப்பொழுது கவனிப்போம்.

1905-ல் ருஷியாவில் நடந்த நடுத்தர மக்களின் புரட்சியின் போதிருந்த நிலைமைக்கும், பிரான்ஸ், ஜெர்மனி முதலிய மேல்நாடுகளில் புரட்சி நடந்தபோதிருந்த நிலைமைக்கும் வித்தியாசங்கள் உண்டு. மேல் நாடுகளில் அப்பொழுது யந்திரத்தால் உற்பத்தி செய்ய ஆரம்பிக்கவில்லை. வர்க்கப் போராட்டம் முன்னேறவில்லை. பாட்டாளி மக்கள் தொகை சிறியதாகவும் பலம் குறைவாகவும் இருந்தது. அவர்களுக்கென்று தனிக் கட்சி ஏற்பட்டு அவர்களுடைய கோரிக்கைகளைக் குறிப்பிடவில்லை. நடுத்தர மக்களிடம் போதிய புரட்சி மனப்பான்மை இருந்தது. மேன்மக்களுடன் எதிர்த்துப் போராடுவதற்குத் தொழிலாளர்களையும் குடியானவர்களையும் தங்களுடன் அவர்கள் சேர்த்துக் கொண்டார்கள்.

ருஷியாவிலோ வென்றால், 1905-ம் வருஷப் புரட்சிக்கு முன்பே யந்திரங்கள் வந்தாயிற்று. வர்க்கப் போராட்டம் மும்முரமாய் நடந்துகொண்டிருந்தது. பெரிய தொகை கொண்ட ருஷியப் பாட்டாளி மக்கள், முதலாளித்துவத்தால் ஒற்றுமைப்பட்டு, ஏற்கெனவே நடுத்தர மக்களுடன் பல போராட்டங்கள் நடத்தியிருந்தார்கள். அவர்களுடைய சொந்த அரசியல் கட்சியு மிருந்தது. அதில் நடுத்தர மக்கள் கட்சியைவிடச் சிறந்த ஒற்றுமையுண்டு. அவர்களுடைய கோரிக்கைகளும் நிச்சயப்பட்டிருந்தன. ருஷிய நடுத்தர மக்களுக்கு கவர்ன்மெண்டு கண்டிராக்டுகளால்தான் பிழைப்பு. அதோடு, பாட்டாளி மக்களின் புரட்சி மனப்பான்மையைக் கண்டு நடுக்கம். ஆகையால் அவர்கள், தொழிலாளர்களையும் குடியானவர்களையும் விட்டுப்பிரிந்து, அவர்களுக்கு எதிராய் கவர்ன்

மெண்டுடனும் நிலச்சுவான்தார்களுடனும் சேர்ந்து கொண்டனர். 1905-ம் வருஷப் புரட்சியை மஞ்சூரியாவில் யுத்த களத்தில் நேர்ந்த தோல்விகள் துரிதப்படுத்தினவே தவிர வேறு மாறுதல் ஏதும் செய்யவில்லை.

அப்பொழுது பாட்டாளி மக்கள் புரட்சித் தலைமையை ஏற்றுக்கொள்ளவும், புரட்சிப்பான்மை கொண்ட குடியானவர்களைத் தங்களுடன் சேர்த்துக் கொள்ளவும் அவசியமாயிற்று. அதன் பிறகு ஜார் ஆட்சியையும் நடுத்தர மக்களையும் எதிர்த்துப் போராடி, தேசத்தில் எங்கும் ஜனநாயகம் பரவச் செய்வதும், தங்கள் வர்க்க நலன்களைப் பாதுகாப்பதும் தேவையாயிருந்தன.

ஆனால் இதைப்பற்றியெல்லாம் மென்ஷிவிக்குகளுக்குக் கவலையே இல்லை. அவர்கள் மனத்தில் இந்தப் பிரச்னை வெகு சுலபமாய்த் தீர்ந்து போய்விட்டது. இந்தப் புரட்சி நடுத்தர மக்கள் புரட்சி; நடுத்தர மக்கள் புரட்சியில் அவர்களுடைய பிரதிநிதிகளே தலைமை வகிக்கவேண்டும். (உதாரணம்: பிரெஞ்சு, ஜெர்மன் புரட்சிகளின் 'சரித்திரம்.'); ஆகையால் ருஷியப் புரட்சியில் பாட்டாளி மக்கள் தலைமை வகிக்கக் கூடாது; தலைமையை ருஷிய நடுத்தர மக்கள் கையிலே கொடுத்துவிடவேண்டும். (நடுத்தர மக்கள், புரட்சிக்குத் துரோகம் செய்யத் தயார் என்பதைப்பற்றி அக்கறையில்லை.) குடியானவர்கள் விஷயத்தை நடுத்தர மக்களிடமே விட்டுவிடலாம்; பாட்டாளி மக்கள் வேண்டுமானால் தீவிர எதிர்க் கட்சியாக இருந்து வைக்கலாம்.

இவ்வாறு, படுமோசமான 'லிபரல்'களிடமிருந்து கடன் வாங்கின உபயோகமற்ற யோசனைகளை மென்ஷிவிக் கட்சியார், அவைதான் 'உண்மையான' மார்க்ஸீய முறைகள் என்று கூறினார்கள்.

இந்தப் படுமோசத்தை எடுத்துக் காட்டியதுதான் லெனின் செய்த மகத்தான சேவை. மென்ஷிவிக்குகள் அலங்காரமாய்க் காட்டிய சரித்திர உவமைகளின் கோரத்தை அவர் உடைத்துக் காட்டினர். மென்ஷிவிக்கர்களின் 'புரட்சித் திட்டத்தின்' அபாயத்தை விளக்கிக் கூறினர். அதனால் பாட்டாளி மக்கள் நடுத்தர மக்களின் கையில் அகப்பட்டுக்கொள்வார்கள் என்று அறிவுறுத்தினர். "நடுத்தர மக்களின் சர்வாதிகாரத்திற்குப் பதிலாக, பாட்டாளி மக்களின் புரட்சி - ஜனநாயக சர்வாதிகாரத்தை ஸ்தாபிப்போம்; வெறும் ஆலோசனை சொல்ல மட்டும் அதிகாரம் வாய்ந்த டூமா சபையில் சேர்ந்து ஒத்துழைப்பதற்குப் பதிலாக, அதைப் பகிஷ்கரித்துவிட்டு, ஆயுத பலத்தினல் புரட்சி செய்வோம்; டூமா சபையை அமைத்துவிட்டால், அதைப் பிற்போக்காளர் பிடித்துக்கொண்டு 'கேடட்' கட்சி மந்திரி சபை அமைத்து விடாமல் தடுப்பதற்காக, தீவிரக் கட்சியை அதில் ஸ்தாபித்து, டூமா நியாயாதிகாரிகளைக் கொண்டே அச்சபைக்கு வெளியில் நடக்கவேண்டிய போராட்டத்தை நடத்துவோம்; புரட்சியை எதிர்க்கும் 'கேடட்' கட்சியுடன் சேருவதற்குப் பதிலாய், அதை எதிர்த்துச் சண்டையிடுவோம்;"— இவைதான் லெனின் எழுதிய 'இரு உபாயங்கள்' 'கேடட் கட்சியின் வெற்றி என்ற இரு பிரசுரங்களில் விவரித்துள்ள திட்டம்.

மேற்கூறிய திட்டத்தின் சிறப்பு என்ன? நடுத்தர மக்களின் ஜனநாயகப் புரட்சியின் போதே பாட்டாளி மக்களின் கோரிக்கைகள் நிச்சந்தேகமாய் உறுதியாக விவரிக்கப்பட்டன. இவற்றிலேயே பாட்டாளி மக்களுடைய சர்வாதிகாரத்தின் விதை விதைத்தாயிற்று. அதன் மூலம் அபேதவாதப் புரட்சி சுலப மாக்கப்பட்டது. இத்திட்டத்தை மேற்கொள்ளவேண்டிப் பாடு படும்போது காரியவாதிகளான ருஷிய ஊழியர்களில்

பெரும்பாலோர் லெனினை மனப்பூர்வமாக ஆதரித்தனர். இத் திட்டம் வெற்றி யடைந்ததினுல்தான் இன்று உலக ஏகாதிபத்தியத்தின் அஸ்திவாரத்தையே ஆட்டச்செய்யும் நம்முடைய கட்சியின் சக்திக்குப் பலத்த ஆதாரம் கிடைத்தது.

பாட்டாளி மக்களின் புரட்சி நடக்கும் இக்காலத்தில், கட்சிக்கோஷங்களையும் தலைவர் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையையும்கூட அனுபவத்தில் சாத்தியமா என்று பரீட்சிக்கும் இந்நாளில், தலைவர்கள் பாட்டாளி மக்களைப் பூரணமாகத் திருப்தி செய்யவேண்டியது அவசியம். முன் காலத்தில் பலவிதமான தலைவர்கள் இருந்திருப்பதைச் சரித்திரத்தின் மூலம் அறியலாம்—பாட்டாளி மக்களின் தலைவர்கள், கொந்தளிப்பான காலங்களில் தோன்றும் தலைவர்கள், தியாகிகள், தைரியசாலிகள், ஆனுல் தத்துவஞானத்தில் அவ்வளவு பரிச்சய மில்லாதவர்கள். அப்பேர்ப்பட்ட தலைவர்களையும் ஜனங்கள் சுலபத்தில் மறப்பதில்லை—உதாரணமாய், பிரான்ஸிலிருந்த பிளாங்கியையும், ஜெர்மனியிலிருந்த லஸாலையும் சொல்லலாம்: ஆனுல் மகத்தான இயக்கம் எதுவும் பழைய ஞாபகங்களின் பெருமையால் மட்டும் நீடித்திருக்க முடியாது. அது நீடித்திருக்க வேண்டுமானுல் அதற்கு ஒரு லட்சியம், திட்டம், முறைகள் நிச்சந்தேகமாய் அமைய வேண்டும்.

அமைதியான காலங்களில் தோன்றும் இன்னொருவிதத் தலைவர்களும் இருக்கிறுர்கள். அவர்கள் தத்துவ ஞானத்தில் சிறந்தவர்கள். ஆனுல் காரியத்திலும் நிர்மாணத் திறமையிலும் அவ்வளவு போதாதவர்கள். இத்தலைவர்கள் பாட்டாளி மக்களில் உயர்ந்த ரகத்தாரால் மட்டும், அதுவும் கொஞ்ச காலம் மட்டுமே, கௌரவிக்கப்படுவார்கள். புரட்சி செயலில் நடக்கவேண்டிய சமயம் வந்தால் அப்பொழுது

புரட்சிக்கான, அநுபவ சாத்தியமான முறைகள் தலைவர்களிடம் எதிர்பார்க்கப்படும். அப்பொழுது தத்துவஞானிகள் பின்னல் ஒதுங்கிக்கொண்டு, புதிய தலைவர்களுக்கு இடங் கொடுக்கத்தான் வேண்டும். ருஷியாவிலிருந்த ப்லெக்கனேவும், ஜெர்மனியில் காட்ஸ்கியும் அப்பேர்ப்பட்ட தத்துவ ஞானிகள்.

பாட்டாளி மக்களின் புரட்சிக்கும் தலைவராய், அவர்களின் கட்சிக்கும் தலைவரா யிருக்கவேண்டுமானல், அவரிடம் தத்துவ ஞானத்தோடு நிர்மாணத் திறமையும், பாட்டாளி மக்கள் இயக்கத்தின் அனுபவ ஞானமும் சேர்ந்திருப்பது அவசியம். லெனினிடம் "சிறந்த காரியவாதியான ஊழியரின் அனுபோகமும், முறைப்படி கற்ற தத்துவ ஞானமும்,விரிந்த அரசியல் நோக்கமும் அழகாகச் சேர்ந்து அமைந்திருக்கிறது," என்று மிஸ்டர் பி. ஆக்ஸில்ராட் என்பவர், அவர் மார்க்ஸிஸ்டா யிருந்தபோது எழுதியிருக்கிருர்......லெனினுடன் அந்தரங்கமாய்ப் பழகின நமக்குக் கடைசி வரையில் லெனினிடம் இந்த நல்ல அம்சங்கள் பரிபூரணமாய்க் காணப்பட்டனவென்று நிச்சயமாய்த் தெரியும். உலகத்தில் உள்ள எல்லாக் கட்சிகளையும்விட மிகவும் வலுத்த, இரும்பினும் கடினமான உறுதிகொண்ட பாட்டாளி மக்களின் கட்சிக்கு இன்றும் லெனினே தலைவர் என்பதற்கு மேற்கூறிய சிறப்புத்தான் காரணம்.

10. லெனின்

[மாக்ஸிம் கோர்க்கி எழுதியது]

லெனினைச் சித்திரிப்பது மிகக் கஷ்டமான வேலை. ஏனெனில், மீனுக்கு அதனுடைய செதிள்களைப் போலே, லெனினுடைய வாய் மொழியும் அவருடைய தோற் றத்தின் ஒரு பகுதியே. வார்த்தைகளில் கள்ளங் கபடு இல்லாதது போல, குணத்திலும் சூதுவாதற்ற, ஒளிவு மறைவில்லாத மனுஷர் லெனின். அவருடைய வீரத்தனத் தில் பளபளவென்று டால் அடிக்கும் மாயைப் பிரகாசம் கிடையாது. ஆடம்பர மற்ற, தன்னல மொழிந்த, தியாக வாழ்க்கை வாழ்ந்த தபஸ்வி அவர். மண்ணுலகத்தில் சமூக நியாயம் கிடைக்கச் செய்யலாம் என்று அசைக்க முடியாத நம் பிக்கை கொண்ட, உண்மையான புரட்சி மனப்பான்மை வாய்ந்த ருஷியர் அவர். சுகங்களை எல்லாம் துறந்தவர் அவர். அவருடைய வீரத்தை ருஷியா நன்கு அறியும்......

நெடுங் காலத்துக்குப் பின்னால் வரப்போவதை அவர் இப்பொழுதே அறிந்து சொல்வது வழக்கம்; 1914—1921 வருஷங்களில் பலரைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்த பொழுது, பல வருஷங்களுக்குப் பின்னால் அவர்கள் எப்படி யாவார்கள் என்பதைப்பற்றி அவர் கூறியதெல்லாம். ஒரு பிசகில்லாமல் அப்படியே பலித்துவிட்டது. அவர் கூறிய தீர்க்கதரிசனங்கள் எல்லாமே நல்லதாகக் கூறினவை என் றல்ல. பலரைப்பற்றி அவர் சந்தேகமாய்ச் சொன்னதுங்கூட அப்படியே பலித்துவிட்டது. லெனினைப்பற்றி நான் முன்பு எழுதிய குறிப்புகள், நடுவில் விட்டுவிட்டுப் போயும், சில இடங்களில் ஒன்றிற்கொன்று முரணாகவும் இருந்தன. லண்

டன் காங்கிரஸ் முதற்கொண்டே ஆரம்பித்திருந்தேனானால் நன்றாயிருந்திருக்கும். ஏனெனில் அந்தச் சமயத்தில்தான், பின்னாடியிருந்த சந்தேகத்துக்கும் அவநம்பிக்கைக்கும் மேலே, பகிரங்க எதிர்ப்புக்கும் துவேஷத்திற்கும் மேலே, லெனினுடைய உருவம் பளிச்சென்று தெரியவந்தது.

லண்டன்மா நகரத்தின் ஓர் ஓரத்தில் இருந்த ஒரு சர்ச்சின் அழகற்ற சுவர்கள் என் மனக் கண் முன் இப்பொழுது எழுகின்றன; அதன் சிறிய, குறுகிய ஹாலும், அதிலிருந்த வேல் வடிவ ஜன்னல்களும் தெரிகின்றன. அந்த ஹால் ரொம்ப எளிய பள்ளிக்கூடத்தின் ஒரு வகுப்புக்குத்தான் லாயக்கு.

கட்டடத்தை வெளியிலிருந்து பார்க்கும்போதுதான் சர்ச் என்று சந்தேகப்படலாம். உள்ளே பார்த்தால் சர்ச் சம்பந்தமான ஒரு அடையாளம்கூடக் கிடையாது. பிரசங்க மேடைக்கு உயரந்தான் இல்லை என்றால், அதை ஹாலின் எதிர் ஓரத்திலாவது போடக் கூடாதோ? வாசல் புறத்திலேயே இரண்டு கதவு நிலைகளுக்கு மத்தியில் அதைப் போட்டிருந்தார்கள்.

நான் இதுவரை லெனினைப் பார்த்ததுமில்லை; அவர் எழுதியவற்றையும் நான் வாசிக்கவேண்டிய அளவுக்கு வாசித்ததுமில்லை. ஆனால் நான் வாசித்திருந்த மட்டில்,—எல்லாவற்றையும்விட, அவரை நேரில் தெரிந்தவர்கள் அவரைப்பற்றிச் சொன்ன உற்சாகத்திலிருந்து—எனக்கு அவரிடம் மிகுந்த கவர்ச்சி ஏற்பட்டிருந்தது. ஒருவருக்கொருவர் அறிமுகமாக்கப்பட்டதும் அவர் என் கையை ஆர்வத்துடன் பிடித்துக் குலுக்கினார். பிறகு தம் கூரிய கண்களால் என்னை ஏற இறங்கப் பார்த்துக்கொண்டே, பழைய சிநேகிதனுடன் பேசுவதைப் போல, இவ்வாறு வேடிக்கையாய்ச் சொன்னார்:

"நீங்கள் வந்தது எனக்கு ரொம்ப சந்தோஷம். ஏதாவது கலகலப்பானால் உங்களுக்குப் பிடிக்குமோ, இல்லையோ? பயந்து போய்விட மாட்டீர்களே? சரியான சண்டை ஒன்று இங்கே நடக்கத்தான் போகிறது."

லெனின் இப்படியிருப்பார் என்று நான் எதிர்பார்க்க வில்லை. அவரிடம் ஏதோ ஒன்று குறைவாயிருந்தது. 'ர'கரம் வரும்போ தெல்லாம் அவர் நாக்கை ரொம்ப மடித்து உச்சரித்தார். கட்டை விரல்களை எப்படியோ கக்கத்தில் வைத்துக்கொண்டு அவர் நின்றதே ஒரு கோணலா யிருந்தது. அவரைப்பார்த்தாலே என்னவோ ரொம்ப சாமானியமா யிருந்தது—இவர் ஒரு தலைவர் என்று தோன்றவே யில்லை. நான் கதை எழுதுகிறவனாதலால் இந்தச் சிறு விஷயங்கள் எல்லாம் கூட என் கண்ணில் படத்தான் செய்தன; இது எனக்கு வழக்கமாய்ப் போய்விட்டது—கெட்ட வழக்கம் என்றுகூடச் சொல்லலாம். அடுத்தாற் போல், தலைவர் ப்லேக்கனேவிடம் என்னை அறிமுகம் செய்வித்த போது அவர் நின்ற நிலையும், பார்த்த பார்வையும் என்ன?—கைகளைக் கட்டிக்கொண்டு நிமிர்ந்து நின்றபடியே கடுத்த முகத்துடன் அலட்சியமாக என்னைப் பார்ப்பது போல அல்லவா இருந்தது? அவர் பேசின பேச்சு ஒன்றாவது என் ஞாபகத்தில் நிற்கவே யில்லை. "நீங்கள் எழுதுவதைப் படிப்பதில் எனக்கு ரொம்ப இஷ்டம்" என்று சொன்னது ஒன்றுதான் நினைவிருக்கிறது. காங்கிரஸின் போது ஒரு தடவையாவது ஒருவருக்கொருவர் மனம் விட்டுப் பேசிக்கொள்வோம் என்று எங்கள் இரண்டு பேருக்கும் தோன்றவே யில்லை.

ஆனால் இப்பொழுது, எனக்கு முன்னால், கட்டை குட்டையாய், தடித்துத் தலை வழுக்கை விழுந்த ஒரு மனுஷர்

'ர'கரத்தை நாக்கை மடித்து உச்சரித்துக் கொண்டும், ஒரு கையால் என் கையைப் பிடித்துக்கொண்டும், இன்னொரு கையினுல் ஸோக்ரட்டீஸின் நெற்றி போன்ற தன் விசால நெற்றியைத் துடைத்துக்கொண்டும் நின்றுகொண்டிருந்தார். அவருடைய பிரகாசம் பொருந்திய கண்களிலிருந்து என் மீது அன்பு மழை பொழிந்துகொண்டிருந்தது. அவர் உடனே பேச ஆரம்பித்தார். நான் எழுதின 'அம்மா' என்ற நாவலிலுள்ள குறைகளைப்பற்றிச் சொன்னுர். அந்த நாவலின் கையெழுத்துப் பிரதி லடிஷ்னிகோவ் என்பவரிடமிருந்தது. அதை அவர் ஏற்கெனவே வாசித்திருந்தார். அந்த நாவலை முடிக்கத் துடித்துக் கொண்டிருக்கிறேன் என்று சொல்ல ஆரம்பித்தேன். அதற்குக் காரணத்தை நான்சொல்லு முன், லெனினே தலையை அசைத்துக்கொண்டு சொல்லிவிட்டார்—"ஆமாம், நீங்கள் அதைச் சீக்கிரம் முடிக்கவேண்டியதுதான். அப்பேர்ப்பட்ட புஸ்தகம் இப்போது ரொம்ப அவசியம். ஏனெனில் புரட்சி இயக்கத்தைச் சேர்ந்த ஊழியர்களில் பெரும்பாலோர் தாம் எதற்காகச் சேர்ந்திருக்கின்றனர் என்றுகூடத் தெரியாமல் குழம்பி யிருக்கின்றனர். "அம்மா"வை ஒரு தரம் வாசிப்பார்களானுல் அவர்களுக்கு மிக உதவியாயிருக்கும் - நிஜமாய்த்தான். இந்தக் காலத்துக்கேற்ற புத்தகம்!" என்ருர். இந்த ஒரு விஷயம்தான் அவர் என்னைப்பற்றிப் புகழ்ச்சியாய்க் கூறியது. ஆனுல் இதையே நான் மிகச் சிறந்த புகழாகக் கருதினேன்.

இதற்கப்பால் அவர் என்னுடன் பேசியதெல்லாம் சாதாரண விஷயங்கள்தாம். அந்தப் புஸ்தகம் பிற பாஷையில் மொழிபெயர்க்கப் படுகிறதா, ருஷிய சர்க்கார், அமெரிக்க சர்க்கார் முதலியவர்கள் பரிசீலனை செய்ததால் புஸ்தகத்தில் ரொம்ப இடங்களைப் பாழ்செய்துவிட்டார்களா என்

றெல்லாம் விசாரித்தார். புஸ்தகத்தின் ஆசிரியரைக் கைது செய்ய உத்தரவிட்டிருக்கிறார்கள் என்று நான் சொல்லவும், அவர் ஒரு நிமிஷம் கோபமாய் நின்றார். அடுத்த நிமிஷமே தலையைப் பின்னால் சாய்த்துக் கண்ணை மூடிக்கொண்டு ஒரே யடியாய்ச் சிரிக்க ஆரம்பித்துவிட்டார். அவருடைய சிரிப் பைக் கேட்டு மூன்று நான்கு பிரதிநிதிகள் எங்கள் அருகில் வந்தனர்.

நானும் அப்பொழுது ரொம்ப உற்சாகத்துடன் இருந் தேன். கட்சியின் முக்கியமான பிரதிநிதிகள் நூற்றைம்பது பேரில் நானும் ஒருவன். ஒரு லக்ஷத்து ஐம்பதினாயிரம் ஊழி யர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் நாங்கள். என்கூட, எனக்கு முன்னால், பெரிய பெரிய தலைவர்கள் என்ன, பிரசித்தி பெற்ற புரட்சி வீரர்கள் என்ன, ப்லேக்க னேவ், ஆக்ஸில்ராட், டேஷ்......இப்பேர்ப்பட்டவர்கள் எல் லாரும் இருந்தார்கள்.

என்னுடைய உற்சாகம் அவ்வளவும் காங்கிரஸின் முதல் நாள் கூட்டத்துடன் தீர்ந்துபோயிற்று. கட்சித் திட்டத்தைப் பற்றி பிரதிநிதிகள் சண்டை போட ஆரம்பிக்கவும் என் உற்சாகம் பறந்துவிட்டது. பிரதிநிதிகளின் ஆங்காரமும் கோபமும் என் மனசில் மண்ணை வாரிப் போட்டுவிட்டது. கட்சியில் சீர்திருத்தக்காரர்கள் - புரட்சிக்காரர்கள் என்று பிளவு ஏற்பட்டிருந்ததனால் அல்ல, இந்தப் பிளவு இருப்பது 1903-லேயே எனக்குத் தெரியும். சீர்திருத்தக்காரர்கள் லெனினை மூர்க்கன்யமாய் எதிர்த்ததைப் பார்த்துத்தான் எனக்கு அப்படி ஆயிற்று. ஓட்டைக் குடத்தில் நாலாபுறமும் ஒழுகுவது போல அந்தக் கோபம் அவர்களுடைய பேச்சு ஒவ்வொன்றிலும் ஒழுகிற்று.



இடமிருந்து : யேனுகிட்ஜ், ஸ்டாலின், கோர்க்கி.

பேசும்போது என்ன சொல்லுகிறார்கள் என்பது முக்கியமில்லை; எப்படிச் சொல்லுகிறார்கள் என்பதுதான் முக்கியம். காங்கிரஸைத் திறந்துவைத்த ப்லெக்கனேவ் ஒரு பாதிரியைப் போலே நீண்ட இறுக்கமான சொக்காயைப் போட்டுக்கொண்டு, தாம் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் வேத வாக்காய் ஏற்கப்படும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன் பேசினார். வந்திருந்த பிரதிநிதிகளுக்குப் புரியாத மிக உயர்ந்த பாஷையில் அவர் அழகிய சொற்றொடர்களை லாகவமாக வீசினார். போல்ஷிவிக் கோஷ்டியார் யாராவது மூச்சுவிட்டார்களானால்,—அல்லது குசுகுசுவென்று அடுத்தவனோடு பேசினாலும் போதும்—இந்த வாசாலகர் சட்டென்று நிறுத்திக்கொண்டு அந்தப் பக்கமாய்த் திரும்பித் தமது ஈட்டி போன்ற கூரிய பார்வையைச் செலுத்துவார். ப்லெக்கனேவுக்குத் தமது சொக்காயிலிருந்த பல பொத்தான்களுள் ஒரு பொத்தான்மீதுதான் விசேஷ அபிமானம் போலிருக்கிறது; அவர் அதையே தடவிக் கொடுத்துக்கொண்டிருந்தார். பேச்சைநிறுத்திக்கொள்ளப்போகும்போதெல்லாம்,ஸ்விச்சை அழுத்துவதைப் போல், பொத்தானை ஒரு அழுத்து அழுத்துவார். மின்சாரம் போல் ஓடிக்கொண்டிருக்கும் அவருடைய சொற்பொழிவு உடனே சற்று தடைப்பட்டு நிற்கும். ஒரு சமயம் எதற்கோ பதில் சொல்ல எழுந்தவர், கையை மார்பின் மேல் சேர்த்துக் கட்டிக்கொண்டு, உரத்த குரலில், மிக அலட்சியமாக "ஹா!" என்றார். இதைக் கேட்டதும் சில போல்ஷிவிக்கர்களுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. உடனே ப்லெக்கனேவின் புருவங்கள் உயர்ந்தன. அவருடைய கன்னம் வெளுத்துப் போயிற்று—ஆமாம், அவருடைய கன்னம் தான். ஏனெனில், நான் உபன்யாச மேடைக்கு ஒரு புறத்தில் உட்கார்ந்தபடியால் எனக்கு அவருடைய பாதி முகந் தான் தெரிந்தது.

முதல் நாள் கூட்டத்தின் போது ப்லெக்கனேவ் பேசிக் கொண்டிருக்கையில், ஆசனத்தில் இருப்புக் கொள்ளாமல் ரொம்பத் தவித்தவர் லெனின்தான். ஒரு சமயம் குளிர் நடுக்குவது போல் அவர் ஒண்டிக்கொண்டிருப்பார். இன்னொரு சமயம் ரொம்ப உஷ்ணம் தாங்காமல் வியர்ப்பது போல் காலையும் கையையும் பரப்பிக்கொண்டு கிடப்பார். கட்டை விரல்களைக் கக்கத்தில் வைத்துக்கொள்வார்; முகவாய்க்கட்டையைக் கரகர வென்று தேய்த்துக்கொள்வார். தலையை ஆட்டுவார்......கட்சியிலே அடிப்படையான மாறுதல் விரும்புகிறவர்கள் யாருமே இல்லை என்று ப்லெக்கனேவ் சொல்லிக் கொண்ட பொழுது லெனின் தலையைக் குனிந்துகொண்டார். அவர் தலையிலிருந்த வழுக்கை சிவந்தது. அவர் தமக்குள் சிரித்துக்கொண்ட சிரிப்பால் அவர் உடம்பு முழுவதும் குலுங்கிற்று. அவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவர்களாலும் சிரிக்காம லிருக்க முடியவில்லை. அந்தச் சமயத்தில் எங்கோ ஒரு மூலையிலிருந்து ஒரு கேள்வி கிளம்பியது: “அப்படியானல் எதிர்க் கட்சியிலே உட்கார்ந்திருப்பவர்கள் சேதி என்ன ?” என்று.

ரோஸா லக்ஸேம்பர்க் பிரசங்கத்தில் உணர்ச்சியும் ஆர்வமும் பொங்கி வழிந்தன. அவருடைய பேச்சில் வீண் வார்த்தை கிடையாது. கிண்டல் பண்ணுவதில் சூரர். அவருக்கு அப்புறம் லெனின் எழுந்து மேடைக்குச் சென்றார். “தோழர்களே!” என்று அடித் தொண்டையில் ஆரம்பித்தார். இவர் எங்கே நன்றாய்ப் பேசப்போகிறார் என்று தோன்றியது எனக்கு. ஆனல் ஒரு நிமிஷத்திற்குப் பிறகு நானும் மற்றவர்களும் அப்படியே பிரமித்துப் போய்விட்டோம். அவருடைய பிரசங்கத்தில் நாங்கள் எங்களை மறந்து லயித்துப் போய்விட்டோம். மிகப் பிரமாதமான, சிக்கலான அரசி

யல் விஷயங்களை அவ்வளவு எளிதாக உணரும்படி செய்த பிரசங்கம் அதுதான் நான் முதன் முதலில் கேட்டது. சாதுரியமான சொற்ரொடர்களை அவர் தேடிச் சொல்லவில்லை. ஆனால் மனத்தில் எண்ணமிட்டது ஒவ்வொன்றும் மிகத் தெளிவாய்ச் சொல்லப்பட்டது. ஒன்றின் அர்த்தமாவது விளங்காமலிருக்கவில்லை. அவர் சொன்ன பிறகு, இவ்வளவு சுலபமாய் விளங்கக்கூடிய விஷயமா இது, என்று ஆச்சரியப்படுவோம். அவருடைய பேச்சினல் எங்களிடம் தோன்றிய உணர்ச்சியை இப்படி என்று விவரிக்கவே முடியாது.

புஜத்தை நீட்டிக்கொண்டு, கையைச் சற்று உயர்த்தினபடியே அவர் பேசினர். வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையையும் அவர் அந்தக் கையினல் நிறுத்து நிறுத்துப் போடுவது போலவும், எதிராளிகளின் வாதங்களை அலசிப் புடைப்பது போலவும், அவற்றிற்குப் பதிலாகத் தம்முடைய கனத்த, மணி போன்ற வாதங்களைத் தருவது போலவும் தோன்றும். லிபரல் மனப்பான்மை கொண்ட நடுத்தர மக்கள் கூடவோ அல்லது பின்னலேயோ போவதற்குப் பதிலாக, பாட்டாளி மக்கள் தங்கள் சொந்த வழியே போவதற்கு உரிமையுண்டு, அதுதான் அவர்களுடைய கடமை என்ருர். இது கேட்கப் புதிதாய்த்தானிருந்தது. ஆனலும் லெனின் ஏதோ புதிதாக வழி பண்ணிக் காட்டுவது போலில்லை. உலக அனுபவமே, சரித்திரமே அப்படித்தான் விதித்திருப்பது போல் தோன்றியது. விஷயத்தை அவர் நேரடியாகவும், குற்றம் குறையில்லாமலும் அநாவசியமானவற்றுடன் குழப்பாமலும், அழுத்தமாக, பரிபூரணமாக எடுத்துச் சொன்னதும், அவர் மேடைமீது நின்று பேசிய அழகும்,—ஒரு உயர்ந்த கலை என்றே அதைச் சொல்ல

வேண்டும். அதிலே என்ன இல்லை என்று குறை சொல்லு வது? எல்லா அம்சமும் பரிபூரணமாய் அமைந்திருந்தது. இது அமிதம் என்று ஒரு அம்சத்தைக்கூடச் சுட்டிக்காட்ட முடியாது. அலங்காரமான பாகங்கள்கூட இயற்கையாகவே தோன்றின. கை என்றால் ஐந்து விரல் இருக்கத்தானே செய்யும்? முகம் என்றால் இரண்டு கண் இருக்காதோ? அதைப் போலே. இவ்வளவுக்கும் இவருக்கு முன் பேசிய வர்களைவிட இவருடைய பிரசங்கம் சிறியதுதான். ஆனால் அதனால் ஏற்பட்ட உணர்ச்சி என்னமோ பிரமாதம்தான். எனக்கு மட்டும் அப்படியிருந்தது என்றில்லை. எனக்குப் பின்னாலே இருந்தவர்கள் எவ்வளவு உற்சாகமாய்ப் பேசிக் கொண்டார்கள், தெரியுமோ? "இவர் ஒருத்தரிடம்தான் விஷயம் இருக்கிறது!" என்றார்கள். உண்மையிலேயே அப்படித்தான். அவர் கொண்டுவந்து விட்ட முடிவுகள், எங்கி ருந்தோ பிடித்துக்கொண்டு வந்து முடிச்சுப் போட்டவை யல்ல. விஷயத்தைத் தானாகவே விட்டாலும் அந்த முடி வுக்குத்தான் அதுவாய் வந்து நிற்கும். மென்ஷிவிக்கர் களுக்கு லெனின் மீதும் அவர் பிரசங்கத்தின் மீதும் வந்த கோபத்தை அவர்களால் அடக்கவே முடியவில்லை. புரட்சித் தத்துவத்தின் சிகரத்தை எட்டிப் பிடித்து அதிலிருந்து தங் கள் கட்சியின் அனுபவ ஞானத்தைப் பரிசீலனை செய்ய வேண்டியதன் அவசியத்தை அவர் எவ்வளவுக்கெவ்வளவு தெளிவாய்க் காட்டினாரோ, அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் ஆத்திரம் அதிகமாகி அவருடைய பிரசங்கத்தின் போது இடை மறித்தார்கள். குறுக்குக் கேள்விகள் போட்டார்கள்.

"தத்துவ வாதம் செய்வதற்காகக் காங்கிரஸ் கூடவில்லை" என்று கூவினார்கள்.

" வாத்தியார் மாதிரி நீ ஒன்றும் சொல்லிக்கொடுக்க வேண்டாம்! நாங்கள் பள்ளிக்கூடப் பையன்களில்லை!" என்று கத்தினார்கள்.

உயரமான ஒரு பேர்வழி—தாடி வைத்துக்கொண்டிருந்தவர் — யாரோ கடைக்காரர் போலிருந்தது — ரொம்ப முரட்டு ஆசாமி—தம் இடத்திலிருந்து குதித்து எழுந்தார். "மோ-மோ-மோ-மோசம் ப-ப-ப-பண்ணவா, ஏ-ஏ-ஏமாற்றி மோ-மோ-மோசம்பண்ணப் பா-பா-பார்க்கறே?" என்று திக்கித் திக்கிக் கூவினார்.

ஹால் முழுவதும் ஒரே கொந்தளிப்பு—துவேஷமும் வெறுப்பும் ஆங்காரமும் சூழ்ந்தது. லெனினைப் பார்த்துக் கொண்டிருந்த கண்களில் எத்தனை வித உணர்ச்சிகள் ஜொலித்தன! ஆயினும் தம்மை எதிர்த்துப் பாய்ந்த அந்தப் பார்வைகளால் அவர் சற்றும் பாதிக்கப்பட்டதாய்த் தெரியவில்லை. அவர்பாட்டிலே, அசைக்க முடியாத நம்பிக்கையுடன், நிதானமாகவும் உறுதியுடனும் பேசிக்கொண்டு போனார். மேலுக்கு இவ்வளவு சாந்தமா யிருக்கவேண்டி அவர் மனதுக்குள் எவ்வளவு கஷ்டப்பட்டார் என்பது சில நாளைக்குப் பிறகே எனக்குத் தெரியவந்தது.

" தத்துவ ஞானத்தின் உச்சியிலிருந்து பார்த்தால்தான் நம் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள அபிப்பிராய பேதங்களின் காரணத்தை அறியக்கூடும்" என்று அவர் சொன்னதிலே என்ன தப்பு? சுலபமாய் ஒப்புக்கொள்ளக்கூடிய இந்த வாக்குமூலத்திற்கு இவ்வளவு எதிர்ப்பா என்று நினைக்கும் போது, எனக்கு வருத்தமும் ஆச்சரியமும் உண்டாயிற்று. காங்கிரஸ் நடவடிக்கைகள் நடந்துகொண்டிருக்கையில், நாளுக்கு நாள் லெனினுடைய செல்வாக்கு அதிகரிப்பதாகவே எனக்குத் தோன்றி

யது. நாளுக்கு நாள் அவருடைய பலமும் நம்பிக்கையும்கூட அதிகமாயிற்று. இன்றைக்குப் பேசினதைவிட நாளைக்கு அவருடைய பேச்சு இன்னும் கனீர் என்றிருக்கும். காங்கிரஸுக்கு வந்திருந்த போல்ஷிவிக்கர் மனப்பான்மையும் நாளுக்கு நாள் அதிகமாய் உறுதிப்பட்டு வந்தது....

அவகாசமிருந்த போதெல்லாம் லெனின் தொழிலாளர்களிடையே போய் அவர்களுடைய வாழ்க்கையைப்பற்றிய நெருக்கங்களை.எல்லாம் விசாரித்துக்கொண்டிருப்பார்.

"உங்கள் மனைவிமார்கள் என்ன செய்கிறார்கள்? வீட்டு வேலை தலைக்கு மேலே இருக்கிறதோ? ஏதாவது படிக்கக் கிடைக்க அவர்களால் முடிகிறதோ? சமாசாரங்கள் தெரிந்து கொள்கிறார்களோ?" என்றெல்லாம் கேட்பார்.

லெனினை முதல் தடவையாகப் பார்த்த சில தொழிலாளர்கள், காங்கிரஸில் அவருடைய நடத்தையைப்பற்றி ஹைட்பார்க் சிங்காரத் தோட்டத்தில் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன் இவ்வாறு சொன்னான்: "எனக்குத் தெரிந்ததைச் சொல்லுகிறேன், ஐயா! நம்ம கட்சிக்குப் பாடுபடுகிறவர்களிலே அவரவ்வளவு கெட்டிக்காரர்கள் ரொம்பப் பேர் ஐரோப்பாவிலே யிருக்கலாம். ஆனால் எடுத்த எடுப்பிலேயே நம்ம மனசைக் கவர்ந்துவிடுகிறவர் வேறே யாருமே இருப்பார் என்று என்னாலே நம்ப முடியவில்லை."

உடனே இன்னொருவன், "சந்தேகமில்லை. அவர் நம்ம ஆள்தான்!" என்று குதூகலமாய்க் கூறினான். அப்பொழுது ஒருவன், "ப்லெக்கனோவ்கூட நம்ம ஆள்தான்!" என்றான்.

இதற்குக் கிடைத்த பதில்தான் ஆணித்தரமானது: "ப்லெக்கனோவ் என்ன ஐயா, சும்மா, பள்ளிக்கூட வாத்தி

யார் மாதிரி அதிகாரம் பண்ணவும் கற்றுக் கொடுக்கவும் வந்துவிடுகிறார்! இவர் மாதிரி ஆவாரா? வாஸ்தவமாய் நம்ம தோழர், உண்மையிலே நமக்குத் தலைவர் என்றால் லெனினைத்தான் சொல்லலாம்" என்றான் வேறொருவன். அதைத் தொடர்ந்து ஒரு வாலிபன் பரிகாசமாக, "ப்லெக்கனேவ் சொக்காய் ரொம்பப் பிடிப்பாய்ப் போச்சு, அப்பா!" என்றான்.

ஒரு சமயத்தில் நாங்கள் ஒரு ஹோட்டலுக்குப் போய்க் கொண்டிருந்தோம். வழியில் ஒரு மென்ஷிவிக் ஊழியர் லெனினை நிறுத்தி ஏதோ கேட்டுக்கொண்டிருந்தார். அவரை விட்டுவிட்டு நாங்கள் ஹோட்டலுக்குள் சென்றோம். ஐந்து நிமிஷத்துக்குப் பிறகு லெனின் கடுத்த முகத்துடன் உள்ளே வந்தார். "சே, இவனைப் போன்ற அசடுகள் எல்லாம் காங்கிரஸ் பிரதிநிதியாய் எப்படி வந்தார்கள்? கட்சி இரண்டு பட்டுக்கொண்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்று இப்போதுதான் கேட்கிறான்! 'காரணத்தைத் தெரிந்து கொள்ளவேண்டுமா? சொல்லுகிறேன்' என்றேன். 'உன் சிநேகிதர்கள் சட்ட சபைக்குள் போகவேண்டும் என்கிறார்கள். நாங்களோ பாட்டாளி மக்களைப் போராட்டத்துக்குத் தயார் பண்ணவேண்டும் என்கிறோம். அவ்வளவுதான்.' நான் சொன்ன பிறகு அவனுக்கு விஷயம் புரிந்தது என்று நினைக்கிறேன்..." என்று அவர் கூறினார்.

நாங்கள் ரொம்பப் பேர் அந்த மலிவான சின்ன ஹோட்டலிலேயே சேர்ந்தாற் போல் சாப்பிட்டுக்கொண்டிருந்தோம். லெனின் மிகக் குறைவாகச் சாப்பிடுகிறவர் என்று அங்கே தெரிந்துகொண்டேன். இரண்டு மூன்று பொரித்த முட்டை, ஒரு சிறு இறைச்சித் துண்டம், ஒரு போகணி பீர் இதுதான் அவர் ஆகாரம். சொந்த சௌகரியத்தைப்பற்றி அவர் கொஞ்சம்கூட சிரத்தை எடுத்துக் கொள்வதில்லை என்பது

எல்லாருக்கும் தெரியும். ஆகலால் மற்ற ஊழியர்களின் சௌகரியங்கள் ஒவ்வொன்றிலும் அவர் காட்டிய சிரத்தை என்னை அதிகமாய் வியப்படையச் செய்கிறது.

உணவு வசதிகளைக் கவனிக்க ஸ்ரீமதி ஆண்ட்ரீவா இருந்தார். அவரிடம் லெனின் சென்று, "எல்லாருக்கும் போதிய அளவுக்குச் சாப்பாடு கிடைக்கிறதா? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? போதவில்லை என்றா? ஹூம், ஹூம்... மாமிசம் பொதிந்த ரொட்டித் துண்டுகள் கொஞ்சம் வரவழைத்துக் கொடுப்போமா?" என்றெல்லாம் சொன்னார். ஒரு சமயம் அவர் நான் தங்கியிருந்த ஹோட்டல் அறைக்கு வந்திருந்த போது, என்னவோ யோசித்துக்கொண்டே, எனக்குக் கொடுத்திருந்த படுக்கையை அமுக்கி அமுக்கிப் பார்த்துக்கொண்டிருந்தார். "என்ன பார்க்கிறீர்கள்?" என்று கேட்டேன். "இல்லை, படுக்கை எல்லாம் சரியாய் உலர்த்தி நல்ல விரிப்பாயக் கொடுத்திருக்கிறார்களா என்று பார்த்தேன்?" என்றார். எனக்குச் சரியாய் விளங்கவில்லை. லண்டன் ஹோட்டலில் கொடுக்கும் படுக்கை எப்படியிருந்தால் இவருக்கென்ன என்று எண்ணினேன். நான் புரியாமல் விழிப்பது கண்டு, அவர், "நீங்கள் உடம்பைச் சரியாய்ப் பார்த்துக்கொள்ள வேண்டும்" என்றார்.

1918-ம் வருஷம் சரத் காலத்தில் ஸாமோவா விலிருந்து வந்திருந்த டிமிட்ரி, பாவ்லோவ் என்ற ஊழியரிடம் லெனினுடைய சிறந்த குணம் என்னவென்று கேட்டேன். பளிச்சென்று அவர் "எளிமை" என்றார். "சத்தியம் எப்படிக் கண்ணாடி போல் நிர்மலமாயிருக்கிறதோ அப்படி யிருக்கிறார் லெனின்!" என்று பதில் அளித்தார். இந்தக் கேள்வியைப்பற்றி அவர் முன்னமேயே யோசித்து ஏற்கெனவே முடிவு செய்திருந்தது போலத் தோன்றியது.

ஒருவரிடமுள்ள குற்றங் குறைகளைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் அவருக்குக் கீழே வேலை பார்ப்பவர்களைக் கேட்டால் போதும். லெனினுடைய மோட்டார் டிரைவர் ஜில் நல்ல அனுபோகஸ்தன். அவன் என்ன சொன்னான் தெரியுமா? "லெனினைப் போல நான் பார்த்ததே யில்லை. அவரைப் போல யாருமே கிடையாது. கேளுங்கள்; நான் ஒரு சமயம் அவரை ஏற்றிக்கொண்டு மியாஸ்நிட்ஸ்காயா தெரு வழியாய்ப் போய்க்கொண்டிருந்தேன். அப்பொழுது தெரு நெடுக வண்டிகளா யிருந்தது. ஆகையால், என்னால் கொஞ்சங்கூட முன்னேறிப் போக முடியவில்லை. வண்டிக்கு எங்கே அடிகிடி பட்டுவிடப் போகிறதோ என்று ரொம்பக் கவலையாய் ஹார்னை அமுக்கிக்கொண்டே யிருந்தேன். லெனின் வண்டிக் கதவைத் திறந்துகொண்டு, விழுந்துவிடுவோமோ என்ற பயமில்லாமல் மிதிபலகை மேல் நடந்து, என்னருகில் வந்து நின்று கொண்டு, வண்டியைவிடச் சொல்லி என்னை வற்புறுத்தினர். 'பயப்படாதே ஜில்! பயப்படாதே! மற்றவர்களைப் போலே சும்மா விடு!' என்றார். நானும் எத்தனையோ காலமாய் வண்டி ஓட்டுகிறேன். வேறே யாரும் அவர் மாதிரி நடந்துகொள்ள மாட்டார்கள். அது எனக்கு நன்றாய்த் தெரியும்" என்றான். அவருடைய உணர்ச்சிகள் எண்ணங்கள் எல்லாம் எப்படி சகஜமாய் ஒரே பாதையில் போய்க்கொண்டிருந்தன என்பதை எடுத்துக் காட்டுவது சுலபமல்ல. திசை காட்டும் கருவியிலுள்ள காந்த முள் தெரியுமல்லவா? அது எப்படி எந்த விதமாகத் திருப்பினாலும், வட திசையையே நோக்கி நிற்கிறது. அது போலே, லெனினுடைய மனம் பூராவும் எப்பொழுதும் பாட்டாளி மக்களின் நலன்களையே நாடிக் கொண்டிருந்தது.

லண்டனில் ஒருநாள் சாயங்காலம் சாவகாசமாக நாங்கள் ஒரு (ஸௌ-ஸௌ) கதம்பக் கச்சேரிக்குப் போயிருந்தோம். அதில் நடித்த பஞூன்களையும் விதூஷகர்களையும் பார்த்து லெனின் ஒரு குழந்தையைப் போலே சந்தோஷித்தார். மற்றதை அவர் அவ்வளவாய்க் கவனிக்கவில்லை. ஆனால் ஒரு ஸின் அவருடைய கவனத்தைக் கவர்ந்தது. பிரிட்டிஷாருக்குச் சொந்தமான அமெரிக்கக் காடு ஒன்றில் மரம் வெட்டுவது போல் அதில் காண்பித்தார்கள். இளம் வாலிபர்கள் இருவர், மூன்றடி கனமுள்ள ஒரு பெரிய மரத்தை ஒரே நிமிஷத்தில் அடியில் வெட்டிப் பிளந்தெறிந்தார்கள். அதைப் பார்த்த லெனின், "இது சும்மா, ஜனங்கள் பார்ப்பதற்காகத் தான். உண்மையிலே இவ்வளவு சீக்கிரமாக யாரும் இந்த வேலையைச் செய்துவிட முடியாது. ஆனால் ஒரு விஷயம் இதைப் போலவேதான் அங்கும் நடக்கலாம். அங்கும் கோடாலியாலேதான் வெட்டி ஏராளமான மரத்தை உபயோகமற்ற சிராயாக வீணாக்குகிறார்கள். இதுதான் இங்கிலீஷ் நாகரிகம், பார்த்துக்கொள்ளுங்கள்!" என்றார்.

பிறகு முதலாளித்வ முறையின் கீழ் சாமான்களின் உற்பத்தி ஒழுங்கு செய்யப்படாமல் நடப்பதையும், மூலப் பொருள்கள் அதிகமாய் வீணாவதையும் பற்றி அவர் பேச ஆரம்பித்துவிட்டார். கடைசியில், இவ்விஷயமாக ஒரு புஸ்தகம் எழுதலாம் என்று யாருக்குமே யோசனை வந்ததில்லையே என்று வருத்தத்துடன் கூறி முடித்தார். அவர் சொன்ன விஷயம் எனக்குத் தெளிவாய் விளங்கவில்லை. ஆனாலும் நான் அவரை மேற்கொண்டு கேள்வி கேட்டுத் தெரிந்துகொள்ளவும் சாத்தியப்படவில்லை. ஏனென்றால், இதற்குள் அவர், நடிப்புக் கலைகளுக்குள் அபிநயம்தான்

சிறந்த கலை என்று வெகு அழகாக எடுத்துரைக்கத் தொடங்கிவிட்டார்....

லண்டனில் என்னிடம் விடைபெற்றுக் கொள்ளுகை யில், சில நாள் காப்ரிக்கு வந்து தங்கி ஓய்வு எடுத்துக்கொள்வ தாக என்னிடம் வாக்குறுதி கூறினர். ஆனல் அப்படி வரு வதற்குள்ளாக நானே அவரைப் பாரிஸில் சந்தித்தேன்...... நான் சம்பந்தப்பட்டிருந்த 'ஞானி' பிரசுராலயம் கொஞ்ச காலத்துக்குமுன் முறிந்து போய்விட்டது. வேருெரு புதிய பிரசுராலயம் ஆரம்பிக்க ஏற்பாடு செய்யவும், அதில் முடிந்த வரையில் இலக்கிய எழுத்தாளர்கள் எல்லாரையும் சேர்க்க வேண்டும் என்பதற்காகவும் அவருடன் கலந்தாலோசனே செய்யவே நான் அங்கு வந்திருந்தேன். அப்பிரசுராலயத் தின் வெளிநாட்டு ஆசிரியப் பிரதிநிதியாக லெனினேயும் இன்னும் இருவரையும் ஒப்புக்கொள்ளச் செய்ய முயன்று கொண்டிருந்தேன்.

ருஷிய இலக்கியத்தைப்பற்றியும், மேல் நாட்டு இலக் கியங்களின் சரித்திரத்தைப்பற்றியும், நாகரிக வளர்ச்சியைப் பற்றியும் புஸ்தகங்கள் பிரசுரிக்க நான் ஆவல்கொண்டிருந் தேன். அவற்றைப் பாட்டாளி மக்கள் படிப்பதால் அவர்கள் தாமாகவே தம் கல்வியறிவை விருத்தி செய்துகொள்ளலாம், ஏராளமான புது விஷயங்களேத் தெரிந்துகொள்ளலாம், பிர சாரத்துக்கும் உபயோகமா யிருக்கும் என்று நான் எண்ணிக் கொண்டிருந்தேன்.

ஆனல், லெனின் அந்தக் கனவைப் பறக்கடித்துவிட்டார். அரசாங்கத் தணிக்கையின் கொடுமையையும், பிரசுராலயம் ஏற்பாடு செய்வதிலுள்ள கஷ்டங்களேயும் அவர் எடுத்துக் காட்டிய பிறகுதான் எனக்குப் புரிந்தது. எங்கள் தோழர்

களில் பெரும்பாலோர் கட்சி வேலையை நடத்துகிறவர்கள். அவர்களுக்கு எழுதுவதற்கு அவகாச மிராது. அதோடு, நீண்ட பெரிய புஸ்தகமாய் எழுதுவதற்குப் போதிய அவகாசம் யாருக்குமே இராது. மேலும் பெரிய புஸ்தகத்தை யாராலே பூரா வாசிக்க முடியும்? படித்தவர்கள் வேண்டுமானல் வாசிக்கலாம். ஆனல் அவர்கள் எல்லாருந்தான் அபேதவாதத்தைக் கைவிட்டுவிட்டு 'லிபரல்' களாகிக் கொண்டிருக்கிறார்களே! அவர்களை நல்ல வழியில் திருப்ப முயலுவதா நம்முடைய ஜோலி? நமக்குப் பயன்படக்கூடியது வர்த்தமானப் பத்திரிகைகளும் சிறு பிரசுரங்களுந்தான். 'ஞானி' பிரசுரங்களை மறுபடியும் நடத்துவது நல்லதுதான். ஆனல் ருஷியாவில் அது சாத்தியமில்லை. அரசாங்கத்தின் கண்டிப்பு அதிகமாகிவிட்டது. வெளியே அந்நிய தேசத்தில் பிரசுரித்துக்கொண்டு வருவதும் உசிதமன்று. சுமை கூலி அளவுக்கு மீறிவிடும். எல்லா ஜனங்களுக்கும் கிடைக்கவேண்டுமென்றால் லட்ச லட்சமாய் அனுப்பவேண்டும். அவ்வளவையும் ரகசியமாகத் தள்ளிவிடுவது முடியாத காரியம். ஆகையால் கொஞ்ச நாள் பொறுப்போம். நல்ல காலம் வந்த பிறகு அதைப்பற்றி யோசிப்போம். இவ்வாறு லெனின் அபிப்பிராயப்பட்டார். அவருடைய யோசனையே சரி என்று எனக்கும் பட்டது......

இதன் பிறகு அவர் யுத்தத்தைப்பற்றிப் பேச ஆரம்பித்தார். பெரிய யுத்தம் ஒன்று சீக்கிரத்தில் வந்தே தீரும் என்பதற்கு அவர் பல காரணங்களை எடுத்துக் காட்டினர். "ஒரு யுத்தத்தோடு நின்றால் தேவலையே! தொடர்ச்சியாய்ப் பல யுத்தங்கள் நேரலாமே!" என்று வருத்தப்பட்டார். அவர் கூறிய தீர்க்கதரிசனம் வெகு சீக்கிரத்திலேயே பால்கன் பிரதேசங்களில் பலித்துவிட்டது.

இப்படிச் சொன்ன பிறகு—அவருக்கென்று ஒரு தனிச் சேஷ்டை உண்டே!—கட்டை விரல்களைக் கக்கத்தில் வைத்துக்கொண்டு எழுந்து, அந்தச் சின்ன அறையில் குறுக்கும் நெடுக்குமாய் உலாவினார். தம்முடைய பிரகாசமான கண்களை இடுக்கிக்கொண்டு பேச ஆரம்பித்தார்: "யுத்தம் வரத்தான் போகிறது; வந்தே தீரும். முதலாளித்துவ உலகம் உளுத்துப் புழுத்துப் போய்விட்டது; ஜனங்கள் தேசிய வெறி பிடித்துப் பிற தேசங்கள்மீது விஷத்தைக் கக்க ஆரம்பித்துவிட்டார்கள். ஐரோப்பா முழுவதற்கும் பொதுவான பெரிய யுத்தம் நடக்கிறதைப் பார்க்கத்தான் போகிறோம். பாட்டாளி மக்களோ? இந்த இரத்தக் களரியைத் தடுக்கக்கூடிய பலம் தங்களுக்கு இருப்பது அவர்களுக்கே தெரியாது. ஆகையினாலே யுத்தத்தை எப்படித் தடுப்பது? ஐரோப்பா முழுவதிலும் பொது வேலை நிறுத்தம் செய்வதா? ஊஹூம். அவ்வளவு தூரத்திற்கு இன்னும் வர்க்க உணர்ச்சி வளரவில்லை. அப்படி ஒரு வேலை நிறுத்தம் செய்ய முயன்றால் உள்நாட்டுக் கலகம்தான் விளையும். அதிலிருந்து ஒரு நன்மையும் கிடைக்காது என்பது அனுபோகஸ்தர்களான நமக்குத் தெரியும்." (இப்படிச் சொல்லிவிட்டு பூட்ஸால் தரையைத் தேய்த்துக்கொண்டு நின்றார். பிறகு மீண்டும் துக்கத்துடன் சொல்லலானார்:)

"பாட்டாளி மக்களுக்குக் கஷ்டந்தான்—சகிக்க முடியாத கஷ்டத்தை அனுபவிக்கப் போகிறார்கள். இன்னும் கொஞ்ச காலத்துக்கு அப்படித்தான் அவர்கள் தலையெழுத்து. ஆனால், அவர்களுடைய விரோதிகளும் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு சாகப் போகிறார்கள்! அதையும் யாராலும் தடுக்க முடியாது!"

இவ்வாறு சொல்லிவிட்டு என் அருகே வந்து, ஆச்சரி யம் அடைந்தவர் போல, ஆக்கிரமாய் மேலும் கூறலானார்: "நன்றாய் யோசனை பண்ணுங்கள்! வயிறு நிறையச் சாப்பிட்டு விட்டு சௌக்கியமாயிருக்கிற பேர்கள், பசியாலே துடித்துக் கொண்டிருக்கிறவர்களை எதற்காக ஒருவரோடொருவர் சண்டை செய்யும்படி ஏவவேண்டும்? இதைவிட மோசமான, அநியாயமான பாவத்தைக் கேட்டதுண்டா? தொழிலாளி மக்களுக்கு இதனால் மிகப் பயங்கரமான கஷ்டங்கள் வரப் போகின்றன. ஆனாலும் கடைசியிலே அவர்கள் வெற்றி அடைவது நிச்சயம். அதைத் தவிர்க்க முடியாது. அது தான் சரித்திரத்தின் சாஸனம்!"

இப்படிப் பேசும்போதே அவருக்குப் பதட்டம் அதி கரித்துவிட்டது. ஆகையால் சற்று உட்கார்ந்து நெற்றியில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக்கொண்டார். பிறகு, ஆறிப்போன 'டீ'யைக் கொஞ்சம் குடித்துவிட்டு, என்னைத் திடீரென்று ஒரு கேள்வி கேட்டார்: "என்னமோ அமெரிக் காவிலே உங்கள் விஷயம் ஒன்று சொன்னார்களே, என்ன அது? எனக்குப் பேப்பர் சமாசாரம்தான் தெரியும். அது எப்படி முடிந்தது?" நான் நடந்தவற்றைச் சுருக்கமாகத் தெரிவித்தேன். லெனின் கடகடவென்று சிரித்தார். அவர் சிரிக்க ஆரம்பித்துவிட்டால் பக்கத்தில் இருக்கிறவர்களால் சிரிக்காமலிருக்க முடியவே முடியாது. அவர் சிரித்து ஓய் கிறவரைக்கும் மற்றவர்களாலும் சிரிப்பை யடக்கிக்கொள்ள முடியாது. அப்படிச் சிரித்துச் சிரிப்பூட்டுகிறவர்கள் வேறே யாரையும் நான் பார்த்ததே யில்லை. லெனின் வெறும் விளையாட்டுப் பேர்வழி அல்லர்; நுனிப் புல் மேய்கிறவரும் அல்லர். விஷயங்களை ஆழ்ந்த கருத்தோடு கவனிப்பவர். மிகப் பெரிய லட்சியங்களையும் சமூகப் பிரளயங்களையும் பற்

றிச் சதா காலமும் சிந்திப்பவர். முதலாளித்துவத்தை அடி போடு தொலைக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பவர்—அப் பேர்ப்பட்டவர், ஒரு குழந்தையைப் போலே, கண்ணில் ஜலம் வருகிற வரைக்கும் சிரிப்பதென்றால், சிரித்துச் சிரித்து மூச்சுத் திணறிப் போவதென்றால், எனக்கு எவ்வளவு வியப் பாயிருந்தது தெரியுமோ? அந்த மாதிரி ஒருவர் சிரிக்கவேண்டு மென்றால் மனசிலே கல்மஷமே யில்லாதிருந்தால்தான் முடி யும். சிரிப்புக்கு நடுவிலே, "ஓ—நீங்கள் பெரிய விகடரா யிருக்கிறீர்களே! நீங்கள் சொன்னதைப் போன்ற வேடிக்கை எதையும் நான் கேட்டதே யில்லை" என்றார். கடைசியில் கண்ணைத் துடைத்துக்கொண்டு மீண்டும் பழைய குரலில், "பரவாயில்லை. காரியம் ஜெயமாகாது போனாலும் அதற் காக வருத்தப்படாமல் அதிலிருக்கும் ஹாஸ்யத்தை உணர் ந்து அனுபவிப்பது நல்லதுதான். ஹாஸ்ய உணர்ச்சி ஒரு சிறந்த குணம். அது இருந்துவிட்டால் அப்புறம் பயமே இல்லை. ஹாஸ்யம் எங்கேயாவது இருந்தால் அதைப் பார்த்து அனுபவிக்கத் தெரியும் எனக்கு. ஆனால் என்னிடம் அது துளிகூடக் கிடையாது. ஆமாம், நம் நிஜ வாழ்க்கையிலே துக்கம் எவ்வளவு இருக்கிறதோ அவ்வளவு வேடிக்கையுந் தான் இருக்கிறது!" என்றார்.......

அடுத்த தடவை நாங்கள் காப்ரியில் சந்தித்தோம். அப்பொழுது என்னமோ இரண்டு லெனின்களைப் பார்த்த மாதிரி எனக்கு ஒரு உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. கரையில் இறங்கினவுடனே பார்த்த லெனின் ஒரு புதுதினுசாக என் னுடன் பேசினார். வந்ததும் வாராததுமாய் அவர் என்னி டம் மிகக் கண்டிப்பாய்க் கூறுகிறார்: "ஒன்று சொல்லிவிடு கிறேன், அலெக்ஸீ! என்னை எப்படியாவது 'மாஷீய'க் கட்சி ஆட்களுடன் சமரஸம் பண்ணி வைத்துவிடலாம் என்று நீங்

கள் கனவு கண்டுகொண்டிருக்கிறது எனக்குத் தெரியும். அது சாத்தியமில்லை என்று உங்களுக்கு ஏற்கெனவே கடிதம் எழுதியிருக்கிறேன். ஆகையினாலே அதற்காக நீங்கள் கொஞ்சமும் பாடுபட வேண்டாம்.” வீட்டுக்குப் போகும் வழியிலும், பிறகும், எனக்கு அந்த மாதிரி நோக்கமே கிடையாதென்றும், மாஷியமோ, மார்க்ஸீயமோ எனக்கு இரண்டும் புரியாதென்றும் கூறி, அவருடைய எண்ணம் பிசகானது என்று காட்ட முயன்றேன். வாஸ்தவத்தில், சிறு வயதிலிருந்தே தத்துவக் கோட்பாடுகளில் எனக்கு நம்பிக்கையில்லாமற் போய்விட்டது. அதற்குக் காரணம், அவற்றிற்கும் என்னுடைய சுவானுபவத்திற்கும் பொருந்தாமல் முரண்பட்டிருந்ததே. என்னுடைய ஞானம் சொன்னது இதுதான்: பிரபஞ்சம் இப்பொழுதுதான் பிறந்து வளர்ந்துகொண்டிருக்கிறது. ஆனால் அதற்குள்ளே தத்துவம் அதைத் தலையில் குட்டி அநாவசியமான, அசந்தர்ப்பமான கேள்வி கேட்கிறது: “நீ எங்கே போகிறாய்? எதற்காகப் போகிறாய்? என்னத்திற்காக யோசனை பண்ணுகிறாய்?” என்றெல்லாம். சில வேதாந்திகள் பிரபஞ்சத்தைப் பார்த்து, “போதும். நீ அப்படியே நில்” என்றுகூட ரொம்ப எளிதாய் ஒரு கடூரமான கட்டளையைப் போட்டு விடுகிறார்கள். இந்தத் தத்துவ வேதாந்தம் இருக்கிறதே, இது அழகே இல்லாத ஒரு கோரமான பெண்: இவளை மிகத் தந்திரமாய் அலங்காரம் பண்ணி, ரம்பை, திலோத்தமை என்று மயக்கி விடுகிறார்கள் என்று கூறினேன். லெனின் சிரிசிரி என்று சிரித்தார். “சரிதான். இது வெறும் வேடிக்கையாய்ச் சொல்லுகிறது. ஆனாலும் பிரபஞ்சம் இப்பொழுதுதான் பிறந்து வளர்ந்திருக்கிறது என்ற அபிப்பிராயத்தைப்பற்றி இன்னும் கொஞ்சம் ஆழ்ந்து

யோசனை பண்ணிப் பாருங்கள். அப்பொழுது அந்த முடிவி லிருந்து நீங்கள் ரொம்ப நாளைக்கு முந்தியே வந்திருக்க வேண்டிய வேறொரு முடிவுக்கு வருவீர்கள்" என்றார்....... இவ்வாறாக முன்பு லண்டன் காங்கிரஸில் இருந்ததைவிட அதிக உறுதியும் பிடிவாதமும் கொண்டவராக லெனின் என் முன் தோன்றினார். அந்தக் காலத்தில் அவருக்குக் கொஞ்சம் பதட்டமுண்டு; கட்சிப் பிளவுகளால் மனத்தில் சஞ்சலப் பட்ட வேளைகள் உண்டு. இப்பொழுதோ அவருக்கு ஒரே நிலைதான்—கலைக்க முடியாத அமைதி, பதட்டமற்ற உறுதி, கலங்காத நெஞ்சழுத்தம். தத்துவ சமாசாரங்களை எல்லாம் கிட்ட நெருங்க விடமாட்டார். அபிப்பிராய பேதங்களைப் பழித்துத் தள்ளிவிடுவார். ஆனால் எப்பொழுதும் புலி போன்ற உஷார்நிலை. யாராவது அவரிடம் வாதம்பண்ண ஆரம் பித்தால் அதோகதிதான். ஏ. ஏ. போக்டோனேவ் ரொம்ப அப்பாவியான பேர்வழி. எல்லாருக்கும் பிடித்தவர் லெனி னிடம் அவருக்கு மிக்க வாஞ்சையுண்டு. ஆனால் கொஞ்சம் தற்பெருமைக்காரர். அவர், பாவம், லெனினிடம் கீழ்க்கண்ட வாறு ரொம்ப இறக்கமான குத்தலான வார்த்தைகளை எல் லாம் வாங்கிக் கட்டிக்கொள்ள நேர்ந்தது.

"தெளிவான யோசனை யிருந்தால் தெளிவான பேச்சு வரும் என்று ஷோப்பனவர் சொல்லியிருக்கிறார். அவர் வாக்கு எவ்வளவு உண்மையானது? தோழரவாள், தாங்கள் பேசு வது சற்றும் தெளிவாயில்லை. நீங்கள் சொல்லுகிற 'பதில் வெட்டு முறை'யினால் தொழிலாள வர்க்கத்தாருக்கு என்ன கிடைக்கும் என்கிறீர்கள்? மார்க்ஸீயத்தைவிட மாஷியத்தில் புரட்சித் தத்துவம் அதிகமாய் எப்படியிருக்கும்? இவை இரண்டுக்கும் சுருக்கமாய் விடையளியும்."

தோழர் போக்டோனேவ் விளக்கிச் சொல்ல முயன்றார். ஆனால் அவரால் முடியவில்லை. ஒரேயடியாய் எல்லாவற்றையும் குழப்பி வீண் வார்த்தைகளாய்க் கொட்டினார். "'போதும் ஐயா, நிறுத்திக்கொள்ளும்!" என்றார் லெனின். "வேதாந்தத்தைப்பற்றிப் பேசுவதைவிட உண்மையைச் சொல்லிவிடுவது எளிது' என்று யாரோ ஒருவர் சொன்னாரே அந்த மாதிரியிருக்கிறது. 'மாஷியத்தைப்பற்றிப் பேசுவதைவிட உண்மையைச் சொல்லிவிடுவது எளிது' என்று அந்த வசனத்தை மாற்றிக்கொள்ள வேண்டியதுதான்" என்றார்.

பேச்சை நிறுத்திவிட்டு இருவருமாய்ச் சதுரங்கம் ஆட உட்கார்ந்தார்கள். அதில் லெனின் தோற்றுப்போனார். அவருக்குக் கோபம் கோபமாய் வந்தது. தோற்றால் குழந்தையைப் போலே வருத்தப்படுவதா? ஆனாலும் குழந்தையைப் போன்ற இந்தச் சுபாவமும், அவருடைய சிரிப்பு மாதிரியே அவர் நல்ல மனதைத்தான் காட்டியது.

இரண்டு லெனின் என்று சொன்னேனல்லவா? காப்ரியில் சந்தித்த லெனின் முழுவதும் வேறே மாதிரி. கலகலப்பான தோழர் என்றால் அவர் ஒருவரைத்தான் சொல்லவேண்டும். அவரைப் போல சந்தோஷகரமான சிநேகிதரை நான் பார்த்ததே இல்லை. எதைக் கண்டாலும் அவருக்குப் பிடிக்கும். எல்லாவற்றிலும் சிரத்தை. எல்லாரிடமும் பிரீதி. ஒருநாள் பொழுது போகிற சமயம். உலாவுவதற்காக எல்லாரும் வெளியில் போய்விட்டார்கள். நானும் ஆண்ட்ரீவாவும்தான் அவர் கூட இருந்தோம். அப்பொழுது சொல்லுகிறார்: "இவர்கள் எல்லாரும் எப்பேர்ப்பட்ட மனுஷாள்! எவ்வளவு புத்திசாலிகள்! எவ்வளவு கெட்டிக்காரர்கள்! நம் கட்சிக்காக எவ்வளவு பாடுபட்டிருக்கிறார்கள்! இன்னும் எவ்வளவு காரியம் சாதிக்கலாம்! ஐயோ, இவர்கள் நம்மோடு வர மாட்டார்களே!

அவர்களாலே முடியாது. அவர்களைச் சொல்லக் குற்றமில்லை. நம்முடைய சமூக முறை அப்படிக் கெட்டுப் போய்விட்டது. இப்பேர்ப்பட்ட நூற்றுக் கணக்கான மனுஷர்களைக் கெடுத்துக் குட்டிச்சுவர் ஆக்கி விடுகிறது!" இவ்வாறு அந்தரங்கமான துக்கத்தோடு பேசினர்.

இன்னொரு சமயம், "லூனசார்ஸ்கி திரும்ப நம் கட்சியில் சேர்ந்துவிடுவார். மற்ற இரண்டு பேரைப் போல அவ்வளவு தூரம் இவர் தனிவழியில் போகப்பட்டவரில்லை. யாரிடமும் காண முடியாத புத்தி சாமர்த்தியம் அவருக்கு இருக்கிறது. என்ன இழவோ, அவரிடம் எனக்கு ரொம்பச் சபலமாய்த்தான் இருக்கிறது. நிஜமாய், அவர் என்னை வசியந்தான் பண்ணிக்கொண்டுவிட்டார். எப்பேர்ப்பட்ட, கலகலப்பான தோழர் அவர், தெரியுமோ? பிரெஞ்சுக்காரர்களிடம் இருக்கிற மாதிரி 'டால்' வீசும் ஐயா, அவரிடம்! ஆமாம், அவருடைய சபல சுபாவங்கூட பிரெஞ்சு குணந்தான்—அது அவருடைய ரஸிகத் தன்மையில் உண்டானது."

காப்ரியிலிருந்த செம்படவர்களின் வாழ்க்கையைப்பற்றி அவர் விவரமாய் விசாரித்தார்:—அவர்கள் சம்பாத்யம் என்ன, அவர்களிடம் குருமாருக்கு எவ்விதமான செல்வாக்கு, பள்ளிக்கூடங்கள் உண்டா என்றெல்லாம் கேட்டார். நானுவித விஷயங்களிலும் அவர் கவனம் செலுத்துவது எனக்கு ரொம்ப வியப்பா யிருந்தது. ஏழைக் குடியானவனுடைய மகன் ஒருவன் குருக்களாக இருக்கிறுன் என்று அறியவும், லெனின் உடனே, எத்தனை குடியானவர்கள் தங்கள் பிள்ளைகளை மதப் பாடசாலைக்கு அனுப்புகிருர்கள் என்றும், அப்பிள்ளைகள் படித்துவிட்டுக் குருக்களாகித் தங்கள் ஊருக்கே திரும்பி வருகிருர்களா என்றும் விசாரித்தார்.

"இது வழக்கத்துக்கு விரோதமான சங்கதி என்றால் சரிதான். அப்படிக்கின்றி இதுவே வழக்கமா யிருந்தால் இதைக் கத்தோலிக்க மடாதிபதிகளின் கொள்கை என்றே யூகிக்கலாம்—ஆம், ரொம்பத் தந்திரமான யுக்திதான்—" என்றார்.

புத்தி சாமர்த்தியத்தில் எல்லாரையும் தோற்கடிக்கக் கூடியவரா யிருந்தாலும், கொஞ்சமாவது தாம் உயர்வா யிருக்கவேண்டும் என்ற ஆசை யில்லாமலும், சாமானிய ஜனங்களிடம் அபரிமிதமான சிரத்தை கொண்டவராயு முள்ள மனுஷர் லெனினைத் தவிர இன்னொருவரை என்னால் கற்பனை செய்து கொள்ளக்கூட முடியவில்லை.

பாடுபடும் தொழிலாளி மக்களின் இதயங்களையும் உணர்ச்சிகளையும் வசிகரிக்கும் ஓர் ஆச்சரியமான காந்த சக்தி லெனினுக்கிருந்தது. அவருக்கு இத்தாலிய பாஷை தெரியாது. என்றாலும் காப்ரியிலிருந்த செம்படவர்கள் லெனினை எப்படியோ இயற்கை அறிவால் உணர்ந்துகொண்டார்கள் போலிருக்கிறது. அவர்கள் எத்தனையோ ருஷியத் தலைவர் களைப் பார்த்திருக்கிறார்கள். ஆனாலும் லெனினுக்கு ஒரு விசேஷ மரியாதை கொடுத்தார்கள். அவருடைய சிரிப்பே தான் ஆட்களை மயக்கிவிடுமே!—சாமானிய மனிதர்க ளுடைய அறிவீனத்துடன்கூட சமர்த்தர்களுடைய குட்ர யுக்திகளையும் அறிந்திருந்தாலும், குழந்தை போல நிர்மல மான உள்ளம் உடையவர்களின் தூய சுபாவத்தைக் கண்டு மகிழ்ச்சியுடன் சிரிக்கும் இதய பூர்வமான சிரிப்பல்லவா அது? ஒரு கிழட்டுச் செம்படவன் அவர் சிரிப்பதைப் பார்த்துவிட்டு, "கள்ளங் கபடில்லாத மனுஷனால்தான் இந்த மாதிரி சிரிக்க முடியும்!" என்றான்.

ஒவ்வோர் சமயம் நாங்கள் ஆகாயத்தைப் போல நிர்மல மான நீரில் படகோட்டிக்கொண்டு போவோம். கழி யில்லா மல் தூண்டிலை மட்டும் தண்ணீரில் விட்டு மீன் பிடிப்பதற்கு லெனின் கற்றுக்கொண்டுவிட்டார். தூண்டிலின் அசைவை விரலால் உணர்ந்து இழுக்கவேண்டு மென்று செம்படவர்கள் அவருக்குத் தங்கள் பாஷையில் சொல்லிக்கொடுத்தார்கள்: "கோஸி: ட்ரின், ட்ரின். காப்பிஸ்சி?"

ஒரு நிமிஷத்தில் லெனின் ஒரு மீனைப் பிடித்துவிட்டார். உடனே அதை எடுத்துக் குழந்தை போலக் குதூகலமாய் "ட்ரின், ட்ரின்!" என்று கத்தினர். செம்படவர்கள் எல்லா ரும் 'ஓ' வென்று ஒரே சிரிப்பாய்ச் சிரித்து, அவருக்கு "மிஸ் டர் ட்ரின் - ட்ரின்" என்று பெயர் வைத்துவிட்டார்கள். லெ னின் அங்கிருந்து போன பிற்பாடு அடிக்கடி அவர்கள், "ட்ரின் ட்ரின் சௌக்கியமா யிருக்கிறாரா? ஜார் கைபிலே அகப்பட்டுக் கொண்டுவிடவில்லையே?" என்று விசாரிப்பார்கள்......

வாழ்க்கை நம்மை ஏமாற்றுவதற் கென்றே பல விசித்திர குணங்களைக் காண்பிக்கும். மனத்தில் ஆழ்ந்த வெறுப்புக் கொள்ள முடியாத எந்த மனிதனுக்கும் ஆழ்ந்த அன்பு கொள்ளுவதும் சாத்தியமில்லாமல் இருப்பது அப்பேர்ப்பட்ட விசித்திரங்களில் ஒன்று. இவ்வாறு, ஆத்மாவுக்கு ஒரு துவைத சுபாவத்தைக் கொடுத்து, மனித இயற்கையின் அஸ்திவாரத் தையே கெடுத்திருக்கிறான் சிருஷ்டிகர்த்தா. ஒன்றைத் துவே ஷித்தால்தான் இன்னொன்றை நேசிக்க முடியும் என்று விதித் திருப்பதாலேயே நவீன வாழ்க்கை அழிவடைகின்றது.

உலகம் ஒரு துன்பக் கடல், துக்கப்படுவதே நம் தலை விதி என்று உணர்ந்துகொண்டால்தான் ஈடேறும் வழி புலப் படும் என்று என் தேசமான ருஷியாவில் இதுவரை போதித்

திருக்கிறார்கள். இந்தத் தேசத்திலும் சரி, வெளியிலும் சரி, லெனினைப்போல சகல துக்கத்தையும், துன்பத்தையும், கஷ்டத்தையும் வெறுத்துத் தரித்து இகழ்ந்து தூரவென்று தள்ளும் மனிதன் இன்றொருவனை நான் பார்த்ததில்லை. என்னுடைய மதிப்பில் லெனினை ஆகாயமளவு தூக்கி வைத்தது வாழ்க்கையிலுள்ள துன்பங்கள்மீது அவர் கொண்டிருந்த பகைமைதான். ஆனால், அவரும் இந்த ருஷியாவிலேதான் பிறந்தார்—துன்பத்திற்கு ஆளாவதினால் புனிதம் அடைவோம் என்று எழுதியுள்ள புஸ்தகங்களையே வேதமாகக் கொண்டுள்ள இதே ருஷியாவில்தான். இங்கே இளைஞர்கள் கையிலெடுத்து வாசிக்க ஆரம்பிக்கும் புஸ்தகங்கள் எல்லாம் சாரமற்ற அற்பமான சம்பவங்களைச் சோகரஸத்துடன் விவரிக்கின்றவையே. வாஸ்தவத்தில் ஐரோப்பாவிலேயே ருஷிய இலக்கியம் ஒன்றுதான் ரொம்ப 'அழுகை மூஞ்சி' இலக்கியம். அநேகமாய் எங்கள் புஸ்தகங்கள் எல்லாவற்றிற்கும் ஒரே ஒரு விஷயம்தான்—வாலிபப் பருவத்திலும் நடுப்பருவத்திலும் எப்படி நம்முடைய அசட்டுத்தனத்தினாலே கஷ்டப்படுகிறோம், ஸ்திரீகளாலே எவ்விதம் துயரப்படுகிறோம், கொடுங்கோன்மையால் எவ்விதம் வாட்டப்படுகிறோம், அடுத்தவன்மீது வைக்கும் அன்பினால் எவ்வாறு துன்பம் அடைகிறோம், எப்படிப் பிரபஞ்சமே துக்கத்திற்கு ஹேதுவாய் அமைந்திருக்கிறது, கடைசியில் அந்திய காலத்தில் எப்படி ஒவ்வொரு மனுஷனும் தான் ஆரம்பத்தில் செய்த தவறுகளை உணர்ந்து பச்சாத்தாபப்படுகிறான், பற்களை இழந்து, தேக சௌக்கியம் கெட்டுப்போய், மரணத்தை எதிர்பார்த்து நடுங்குகிறான்—இது போன்ற விஷயங்கள்தான் ஒவ்வொரு புஸ்தகத்திலும் கிடைக்கும். ஏதாவது ஒரு ராஜீயக் குற்றத்திற்காக ஒரு

ருஷியன் ஒரு மாசம் ஜெயிலில் இருந்துவிட்டோ, அல்லது ஒரு வருஷம் ஸைபீரியாவில் பிரஷ்டமாகி இருந்துவிட்டோ வந்தானானால், உடனே தான் பட்ட கஷ்டங்களைப்பற்றி ஒரு புஸ்தகம் எழுதி ருஷியாவுக்கு வெகுமதியாக அளிக்கவேண்டியது தன் முதல் கடமை என்று எண்ணுகிறான். ஆனால் சந்தோஷகரமான வாழ்க்கையைப்பற்றியும் ஒரு புஸ்தகம் எழுதுவோமே என்று ஒருவருக்காவது தோன்றவே யில்லை. ருஷியர்களுக்குத் தங்கள் வாழ்க்கை எப்படி யிருக்கவேண்டுமென்று கற்பனை செய்துகொள்ளத்தான் தெரியுமே ஒழிய, அப்படி வாழ்க்கையை நடத்திப் பார்க்கத் தெரியவே தெரியாது. ஆகையினால் அந்த மாதிரி ஒரு புஸ்தகம் வெளிவந்தாலாவது சந்தோஷகரமாக வாழ்வது எப்படி என்று அவர்கள் தெரிந்துகொள்ள உபயோகப்படும், அல்லவா?

லெனினுடைய தனிச் சிறப்பு இதுதான் என்பது என் அபிப்பிராயம்: மனித வர்க்கம் அனுபவிக்கும் துன்பங்கள்மீது அவர் அடக்க முடியாத, அசைக்க முடியாத விரோதம் கொண்டிருந்தார்; வாழ்க்கைக்குத் துன்பமே இயற்கை, அதைத் தவிர்க்க முடியாது என்ற மூட நம்பிக்கை முழுப் பொய், நாறும் குப்பைகளை அகற்றுவது போல துன்பத்தை வாழ்க்கையிலிருந்து எடுத்தெறிய ஜனங்களுக்குச் சக்தி இருக்கிறது என்ற தீவிர நம்பிக்கை அவர் மனத்தில் அணையாச் சுடராய் எரிந்துகொண்டிருந்தது. அவருடைய இந்த அடிப்படையான குணத்தை லோகாயதவாதிகளின் நிமிர்ந்த உற்சாகம் என்று சொல்லலாம். இக்குணம் ருஷியர்களிடம் சாதாரணமாய்க் காண முடியாது. இந்த விசேஷம் ஒன்றுதான் என்னை இந்த மனிதரிடம்—மனிதர் என்றுபெரிய எழுத்தில் குறிக்கவேண்டும்—வசீகரித்து இழுத்தது.

இயற்கையிலேயே அவர் மிகத் துணிச்சல் கொண்டவர். ஒரு சூதாடி லாப ஆசையால் காட்டும் துணிச்சல்

அல்ல. ஒரு கடமையை நிறைவேற்றவே உயிர் வாழ்கிறோம் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டவருக்கு,—தமக்கும் லோகத்துக்கும் உள்ள சம்பந்தத்தைத் தெளிவாய் உணர்ந்து, பிரபஞ்சக் குழப்பத்தில் தாம் செய்யவேண்டிய காரியம் இன்னதென்று சந்தேகமின்றித் தெரிந்துகொண்டவருக்கு—அக்குழப்பத்தை எதிர்த்துத் தூக்கியடிக்க வந்த அதன் ஜன்ம விரோதிக்கு, பிரத்யேகமான வேறு ஒருவருக்குமில்லாத ஆத்மிக தைரியம் இருக்குமல்லவா? அதனுடைய பரிமளிப்புத்தான் லெனினுக்கிருந்த துணிச்சல். இந்த உற்சாகத்தை அவருடைய எல்லா நடவடிக்கைகளிலும் காணலாம். சதுரங்கம் ஆடும்போதும் சரி, 'மனித ஆடைகளின் வரலாறு' என்ற புஸ்தகத்தைப் படிக்கும்போதும் சரி, தோழர்களுடன் வாதம் பண்ணும்போதும், மீன் பிடிக்கும்போதும், காப்ரியின் கல் நிறைந்த தெருக்களில் சுடுகின்ற வெயிலில் நடக்கும்போதும், முள் செடிகளின் பளபளப்பான பொன்னிறத்தைக் கண்டு களிக்கும்போதும், செம்படவர்களின் பிள்ளைகளுடைய கறுத்த முகங்களைப் பார்த்து ஆனந்திக்கும் போதும், எப்பொழுதும் இந்த உற்சாகந்தான். சாயங்காலமாய் ருஷியக் கதைகள் சொல்லக் கேட்டுக்கொண்டிருப்பார். கதை கேட்டுவிட்டு வருத்தமாய்ப் பெருமூச்செறிவார். "ருஷியாவில் நான் என்னத்தைப் பார்த்திருக்கிறேன்? ஒன்றுமேயில்லை. ஸிம்பர்ஸ்க், காஸான், பீட்டர்ஸ்பர்க்—ஸைபீரியாவில் பிரஷ்டம்—அவ்வளவுதான்" என்பார்.

வேடிக்கையிலும் விளையாட்டிலும் அவருக்கு ரொம்பப் பிரியம். சிரிக்கும்போது அவர் உடம்பு பூராவும் சிரிக்கிறாப் போல் தோன்றும். பேச்சு நடுவிலே 'ஹூம்' போடுவாரே, அந்த 'ஹூம்'மிலே எத்தனை தினுசு தெரியுமோ?—பழித்துக் காட்டுகிற 'ஹூம்'மிலிருந்து வெறும் சந்தேகத்

தைக் காட்டுகிற ‘ ஹூம் ’ வரைக்கும் உண்டு. அந்த ‘ஹூம்’ ஒவ்வொன்றிலும், வாழ்க்கையில் நடக்கும் அசட்டுத்தனங் களை எல்லாம் ஒன்று விடாமல் பார்த்துச் சிரித்துக்கொள் ளும் அநுபவசாலியினுடைய கேலி தொனிக்கும்.

கட்டை குட்டையான உருவம், பெரிய மண்டை, சுறு சுறுப்பான கண்கள்—அவர் நிற்கும் நிலையே ஒரு வேடிக்கை—தலையை ஒரு புறமாய்த் தோளில் சாய்த்துக்கொண்டு, உயரப் பார்த்துக்கொண்டு, கட்டை விரல்களைக் கக்கத்தில் வைத்துக் கொண்டு நிற்பார். அதைப் பார்க்கும் போதே சிரிப்பு வரும் —கொக்கரிக்கும் சண்டைச் சாவல் நினைவு வரும். அப்படி நிற்கும்போது அவர் மனசில் எவ்வளவு சந்தோஷம் கூத் தாடும்! இந்தப் பாழும் பூமியிலே அவர் ஒருவருக்குத்தான் குழந்தை உள்ளம் என்றென்றும் மாருமல் இருந்தது. அன்பை நிலைநாட்டுவதற்காக அவர் தம்மைத் துவேஷத்துக் கும் விரோதத்துக்கும் பலியாக அளித்துவிட்டார்.

இதற்குப் பிறகு, 1918-ல் அவரைக் கொல்ல வேண்டி ஒரு அக்கிரம முயற்சி நடந்ததே, அதுவரைக்கும் லெனினை நான் சந்திக்கவே யில்லை. அந்த நிகழ்ச்சிக்கு அப்புறம் நான் வந்து பார்த்தபோது, அவர் படுத்த படுக்கையாய்த்தா னிருந் தார். கையை நீட்ட, மடக்க அவரால் முடியவில்லை. குண்டு பாய்ந்த கழுத்தைத் திருப்பவும் முடியவில்லை. நான் என் னுடைய சினத்தைத் தெரிவித்தேன். அது ஏதோ சலித் துப்போன விஷயம் போலே அவர் அதை ஒதுக்கி விட்டார்: “என்ன பண்ணுகிறது? வெறுஞ் சண்டை. அவரவர்க ளுக்கு எது சரி என்று படுகிறதோ அப்படித்தானே நடப் பார்கள்?” என்றார்.

எங்கள் இருவருக்குமுள்ள சிநேகிதம் அப்படியேதா னிருந்தது. ஆனாலும் லெனின் என்னை ஊடுருவிப் பார்த்த

பார்வையில் கொஞ்சம் இரக்கமும் கலந்துதா னிருந்தது. ஏனெனில் அபிப்பிராய பேதத்தால் சிறிது 'வழி தவறி' விட்ட பேர்வழிகளில் நானும் ஒருவன்.

கொஞ்ச நேரம் கழித்து அவர் என்னிடம் அழுத்தமாகக் கூறினர்: "யார் எங்களுடன்கூட இல்லையோ அவர்களும் எங்கள் விரோதிகள்தான். உலகம் போகிற போக்கை விட்டுத் தனியாக நிற்கும் ஜனங்கள் என்று ஒருவரும் இருக்க முடியாது. அது வெறும் கனவு. அப்பேர்ப்பட்ட ஜனங்கள் முந்தி இருந்ததாக வைத்துக்கொண்டாலும் இப்போது அப்படி யாரும் இல்லை; இருக்கவும் கூடாது. அவர்களாலே யாருக்கு என்ன உபயோகம்? ஒருவர் பாக்கியில்லாமல் எல்லாரும் பிரத்யட்ச நிகழ்ச்சிகளின் சுழலில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த நிகழ்ச்சிகளோ முன்னிருந்ததைக் காட்டிலும் எவ்வளவோ சிக்கலானவை. வாழ்க்கையையே ரொம்ப எளியதாய், சுலபமானதாய்த் திரித்துவிடப் பார்க்கிறேன் என்று சொல்லுகிறீர்களோ? அப்படி முயற்சி செய்தால் நாகரிகமே பாழாய்விடும் என்று நினைக்கிறீர்களோ? என்ன?" இப்படிச் சொன்ன பிறகு, சுபாவப் பிரகாரம் இரண்டு மூன்று 'ஹூம்' போட்டுக்கொண்டார்.

இப்போது அவர் கூரிய கண்களில் அதிகப் பிரகாசம் ஜொலித்தது. குரலையும் சற்றுத் தணித்துக்கொண்டார். "சரி. கோடிக்கணக்கான குடியானவர்களைத் துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு போரிடச் சொல்வதுமட்டும் நாகரிகத்தை அழிக்காதாக்கும்? அப்படித்தானே? அப்பேர்ப்பட்ட குழப்பத்தைச் சமாளிக்கச் சட்டசபையால் முடிந்திருக்கும் என்று நினைக்கிறீர்கள்? கிராமப் புறங்களில் ஒரே குழப்பமாயிருக்கிறது என்று பிரமாதப்படுத்துகிற உங்களுக்கு எங்களுடைய சிரமம் நன்றாய்த் தெரிந்திருக்கவேண்டும். ருஷிய

மக்களுக்கு முன்னால் அவர்களுக்கு சுலபமாய்ப் புரியக்கூடிய தாய் என்னத்தை வைப்பது? பொதுவுடைமை, ஸோவியத் என்றால் புரிகிறது. தொழிலாளிகள் - அறிவாளிகள் ஐக்கியம் என்றால்? ஊஹூம். சரி, பரவாயில்லை. அறிவாளிகளிடம் போய்ச் சொல்லுங்கள். அவர்களை எங்களிடம் வரச் சொல்லுங்கள். அவர்கள் உண்மையான தர்மத்திற்காகப் பாடுபடுவார்கள் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். அப்படியானால் அவர்கள் வருவதற்கு என்ன தடை? நன்றாய் வரட்டும் அவர்கள், ஆட்சேபமில்லை. ஜனங்களை எழுப்பி நிற்கச் செய்யவும், வாழ்க்கையின் உண்மையை உலகுக்கெல்லாம் அறிவிக்கவும் நாங்கள் அல்லவா ஏற்றுக்கொண்டிருக்கிறோம்? அடிமைத் தனம், பிச்சைக்காரத்தனம், நீசத்தனம் இவற்றிலிருந்து விலகி உண்மையான மனித வாழ்வு வாழக்கூடிய வழியை ஜனங்களுக்கு நாங்கள் அல்லவா காட்டுகிறோம்?"

இப்படிச் சொல்லிவிட்டு, சற்றும் கோபமே யில்லாமல் அவர் சிரித்தார். சிரித்துக்கொண்டே, "இந்த சேவைக்காகத் தான் அறிவாளிகளில் ஒருவர் எனக்கு ஒரு குண்டை வெகுமதியாக அளித்தார்" என்றார். சம்பாஷணை கொஞ்சமும் உஷ்ணம் இல்லாமல் சாதாரணமாய் நடக்கும்போது அவர் நொந்த மனதுடன் இவ்வாறு கூறினார்: "அறிவாளிகள் உதவி எங்களுக்கு அவசியமில்லை என்கிறேனா நான்? அவர்களிடம் எவ்வளவு விரோத மனப்பான்மை இருக்கிறதென்று உங்களுக்குத் தெரியவில்லையா? உடனே செய்ய வேண்டியது என்னவென்று அவர்களுக்குச் சுத்தமாய் அறிய முடியவில்லையே, அதையும் பார்த்துக்கொண்டுதானே இருக்கிறீர்கள்? அட, நாங்கள் இல்லையானால் அவர்களால் ஒரு காரியமும் முடியாது, பொதுமக்கள் பக்கம் நெருங்கவே முடியாது என்பதைக்கூட அவர்களால் தெரிந்துகொள்ள முடியவில்லையா? எங்களால்

எத்தனையோ மண்டைகள் உடையப்போகிற தென்றால் அந்தப் பழி அறிவாளிகளையே சேரும்."

ஒவ்வொரு தரம் நாங்கள் சந்தித்தபோதும் இவ்விஷயமாகப் பேசினோம். படித்த அறிவாளிகளைப்பற்றி அவருக்கு எப்போதும் சந்தேகமும் விரோதமும் இருந்தாலும், நடப்பில் புரட்சி முறைக்கு அறிவாளிகளின் சக்தி எவ்வளவு முக்கியமானது என்பதைப் பற்றி அவர் சரிவர உணர்ந்திருப்பது தெரியவந்தது. அந்தச் சக்தியானது சிறைப்படுத்தி வைக்கப்பட்டால் வளர முடியாமல் போய், பிறகு அச்சிறையை உடைத்துக்கொண்டு எழுவதுதான் புரட்சி என்பதையும் அவர் ஒப்புக்கொள்வதாகவே தோன்றிற்று.

விஞ்ஞானக் கலைக் கழகத்து அங்கத்தினர்கள் மூவருடன் அவரை ஒரு தடவை சென்று பார்த்தேன். பீட்டர்ஸ்பர்க்கிலுள்ள ஒரு பெரிய விஞ்ஞான ஸ்தாபனத்தை ஆதரிக்க வேண்டிய விஷயமாக நாங்கள் சம்பாஷித்தோம். அவர்கள் மூவரும் விடைபெற்றுச் சென்ற பிறகு லெனின் என்னிடம் கூறுகிறார்: "ஆ, இது ரொம்ப சரி. இவர்கள் நல்ல புத்திசாலிகள்தான். இப்பேர்ப்பட்டவர்களோடு சுலபமாய், நிஷ்கபடமாய்ப் பேச முடிகிறது. தங்களுக்கு வேண்டியது இன்னது என்று இவர்களுக்குத் தெரியும். அது நமக்கும் தெரிகிறது. இப்பேர்ப்பட்டவர்களுடன் ஒத்துழைப்பது மனசுக்குச் சந்தோஷமாயிருக்கிறது. முக்கியமாக — — —ரை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது" என்று திருப்தியுடன் சொன்னார். லெனின் குறிப்பிட்ட மனிதர் ருஷிய விஞ்ஞான ஆராய்ச்சியிலேயே மிகக் கீர்த்தி பெற்றவர். மறுநாள் லெனின் என்னை டெலிபோனில் கூப்பிட்டு அந்த ஆராய்ச்சிக்காரர் தங்களுடன் சேர்ந்து உழைக்கத் தயாரா என்று விசாரிக்கச்

சொன்னார். அவர் அப்படிச் சேரச் சம்மதித்தது லெனினுக்கு மிக்க மகிழ்ச்சி யளித்தது. கை இரண்டையும் தேய்த்துக்கொண்டே வேடிக்கையாய் லெனின் சொல்லுகிறார்: "பேஷ்! ஐரோப்பாவிலுள்ள விஞ்ஞான ஆராய்ச்சிக்காரர்கள் எல்லாரையும் ஒவ்வொருவராய் நம்மோடு சேர்த்துக்கொண்டு விட்டோமானால் பிறகு இந்த உலகமே—அதற்குப் பிடிக்கிறதோ, பிடிக்கவில்லையோ—இந்தப் பக்கம் சாயவேண்டியதுதான்."......

லெனினுக்கிருந்த மன உறுதிக்கு எல்லையே யில்லை. அத்துடன், புரட்சி மனப்பான்மையுள்ள அறிவாளிகளிடம் இருக்கவேண்டிய சிறந்த குணங்கள் யாவுமே படைத்தவர்: தம்மைத் தாமே கட்டுப்படுத்திக் கொள்ளுதல், கடுந் தபஸ்விகளைப் போலே முள் படுக்கை, ஆணிமீது நிற்பது இவை போன்ற சுய ஹிம்ஸைக்குக்கூடத் தேகத்தை உட்படுத்துவது, கலைகள் உள்பட ஐம்புலன்களால் உணரக்கூடிய சுகங்களனைத்தையும் தியாகம் செய்தல், மற்ற ஜனங்கள் கஷ்டவாழ்வு வாழ்வதால் தாமும் சுகவாழ்வைத் துறப்பது, இத்யாதி குணங்கள் யாவும் அவரிடம் பொருந்தியிருந்தன.

1919-ம் வருஷம் பரவிய கொடிய பஞ்சத்தின் போது ருஷியா வெங்கிலுமிருந்து தோழர்களும், குடியானவர்களும், போர்வீரர்களும் அனுப்பிக்கொண்டிருந்த ஆகாரங்களைத் தொடக்கூட லெனினுக்கு மனம் கூசியது. அந்தப் பார்ஸல்கள் அவருடைய லட்சணமற்ற விடுதிக்கு வரும் போதெல்லாம் அவருக்கு மிகச் சங்கடமா யிருக்கும்; கோபமும் முகத்தில் துடிக்கும். பார்ஸல்களில் வந்த மாவு, வெண்ணெய், சர்க்கரை இவற்றையெல்லாம் நோய்வாய்ப்பட்டிருந்தவர்களுக்கும், பலவீனமடைந்தவர்களுக்கும் உடனே அனுப்பி விடுவார். ஒரு தடவை என்னை அவர் சாப்பிட அழைத்த

போது, "இன்றைக்கு வாட்டின மீன் வந்திருக்கிறது. அஸ்ட்ரகானிலிருந்து அனுப்பியிருக்கிறார்கள்" என்று சொல்லும்போதே, அவருடைய விசால நெற்றி, கோபத்தால் சுளித்தது. பிறகு முகத்தைத் திருப்பிக்கொண்டு, "என்னைத் தங்கள் ஆண்டையாகக் கருதியிருப்பது போல் பல பொருள்களை அனுப்புகிறார்கள்! 'அனுப்பாதே!' என்று அவர்களை எப்படித் தடுப்பது? அவைகளை வேண்டாம் என்று சொல்லி மறுத்துவிட்டால் அவர்களுக்கு ரொம்ப வருத்தம் வருகிறது. அதோடு என்னைச் சுற்றியிருக்கிறவர்கள் எல்லாரும் பசியால் துடிக்கிறார்கள்!" என்று புலம்பினார்.

புகையிலையும் ஒயினும் எப்படியிருக்குமென்றுகூட அவருக்குத் தெரியாது. சூரியன் உதித்தது முதல் பாதி ராத்திரி வரைக்கும், ஓய்வு ஒழிவில்லாமல், மிகச் சிக்கலான கஷ்டமான வேலை அவரே செய்த போதிலும் அவருக்கு 'தான்' என்ற அகங்காரமே கிடையாது. தம்முடைய சொந்த சௌக்கியத்தைப்பற்றித் துளிகூட அக்கறையும் கிடையாது. ஆனால் தம் தோழர்களுடைய க்ஷேமத்தை இமை கண்ணைக்காப்பது போல ஜாக்கிரதையாய்க் கவனித்து வந்தார். காரியாலயத்தில் வேலை பார்க்கும்போது கடுதாசியில் வைத்த பேனவை எடுக்காமல் எழுதிக்கொண்டும், அதே சமயத்தில் மளமளவென்று பேசிக்கொண்டும் இருப்பார்; "வாருங்கோ வாருங்கோ! நமஸ்காரம். க்ஷேமந்தானே? இதோ வந்துவிட்டேன், இப்போ முடித்து விடுகிறேன். கிராமாந்தரத்திலே தோழர் ஒருவர் இருக்கிறார். தனியாகச் சங்கடப்படுகிறார், களைத்துச் சலித்துப் போய்விட்டார் போலிருக்கிறது. அவருக்குக் கொஞ்சம் உற்சாக மூட்ட வேண்டும். மனசு நிலைமையைக் கவனிக்காமல் விட முடி

கிறதா?"—இந்த மாதிரி பேசிக்கொண்டே எழுதிக்கொண் டிருப்பார்.

இன்னொரு சமயம் அவர் மாஸ்கோவிலிருந்த போது நான் வந்து சேர்ந்தேன். என்னைப் பார்த்ததும், "சாப்பிட் டாச்சா?" என்றார் முதலில். "ஆச்சு" என்றேன். "வெறு மனே பேச்சுக்குச் சொல்லவில்லையே?" என்றார். "இல்லை, இல்லை. சாட்சிகள் இருக்கிறார்கள்—க்ரெம்லின் (சர்க்கார் காரி யாலய) சாப்பாட்டு விடுதியில்தான் சாப்பிட்டேன்" என் றேன்.

"அங்கே சாப்பாடு நன்றாயில்லை என்று கேள்விப்பட் டேன்!"

"மோசமில்லை. ஆனால் சீர்திருத்த இடமுண்டு."

உடனே அவர் என்னை விவரமாய் விசாரிக்க ஆரம்பித்து விட்டார். "ஏன் நன்றாகவே ஆக்கிவிடக் கூடாது? எவ்வகை யில் சீர்திருத்தலாம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?" என்று கேட்டு, பிறகு தமக்குள்ளேயே கோபமாய் முணுமுணுத்துக் கொண்டார்: "ஒரு நல்ல சமையற்காரனை வைத்துக்கொண் டால் என்ன அவர்கள்? முடியாமல் போய்த் தள்ளாடி விழு கிற வரைக்கும் உழைக்கிறார்கள், அவர்களுக்கு நல்ல சாப்பா டாய்ப் போட்டால் அல்லவா நிறையச் சாப்பிடுவார்கள்? ஆகாரம் ஏராளமாய்க் கிடைக்கவில்லைதான், கிடைக்கும் பொருளும் மோசமாய்த்தா னிருக்கிறது. அதற்காக நல்ல சமையற்காரன் வைத்துக்கொள்ளக் கூடாதா என்ன?" பிறகு பதார்த்தங்களைச் சம்பாரம் போட்டு, ஊறுகாய், வத்தல் முதலியவை மாதிரியாக்கிச் சாப்பிடுவதால் வயிற்றுக்கும் ஜீரணசக்திக்கும் என்ன நன்மை என்பது பற்றி வைத்தியர் ஒருவர் சொல்லியிருப்பதை விளக்க ஆரம்பித்தார். "இதை யெல்லாம் தெரிந்துகொள்ள உங்களுக்கு எங்கே அவகாசம்

கிடைத்தது?" என்று நான் வியப்போடு கேட்டேன். "சாப்பாட்டைப்பற்றித் தெரிந்துகொள்ள அவகாசம் வேணுமா?" என்று திருப்பி அவர் கேள்வி போட்டார்.

வ்லோரகோடோவ் என்பவர் ஸோர்மோவோவைச் சேர்ந்த ஊழியர். எனக்குத் தெரிந்தவர். இளகிய மனதுடையவர். இப்போது இரகசியப் போலீஸில் வேலை பார்த்துவந்தார். அந்த வேலை தம் மனசுக்கு எவ்வளவு பிடிக்காமலிருக்கிறது என்று என்னிடம் அவர் தெரிவித்தார். "அந்த வேலை உமக்கு ஏற்றதல்ல. அது உமக்குச் சரி வராது" என்றேன். "வாஸ்தவம்தான். துளிகூடச் சரிப் படவில்லை" என்றார் அவரும். ஆனால் சில நிமிஷம் யோசனை செய்துவிட்டுப் பிறகு, "ஆமாம், ஆனால் லெனினுக்குக் கூடத் தம் ஆசாபாசங்களை அடக்கிக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. சே, அது தெரிந்தும் நான் இப்படிப் பெண்பிள்ளை போலே அழுகிறேனே?" என்று தம்மையே இகழ்ந்து கொண்டார்.

அன்றும் இன்றும் எனக்குத் தெரிந்துதா னிருக்கிறது, எத்தனையோ ஊழியர்கள், தாங்கள் எடுத்துக்கொண்டுள்ள காரியத்திற்காகப் பல்லைக் கடித்துக்கொண்டு, ஆசாபாசங்களை அடக்கி, இயற்கை ஆவல்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளத்தான் வேண்டியிருக்கும் என்று. அப்படி லெனின் கூடத் தம் ஆசாபாசங்களை அடக்கிக்கொள்ளத்தான் செய்தாரோ? ஆம், அவருக்குத் தம்மைப்பற்றிக் கொஞ்சங்கூட அக்கறையில்லை. ஆகையால் தம்மைப்பற்றி யாரிடமும் சொல்லிக்கொள்வதே கிடையாது. அவர் உள்ளத்தில் பட்ட அவஸ்தைகளை வெகு ரகசியமாக வைத்துக்கொண்டு பேசாம லிருக்க அவருக்கு முடிந்தது. ஆனால் ஒரே ஒரு சமயம் அவரும் கொஞ்சம் ஜாடையாகத் தம் உள்ளத்திலுள்ள

காயங்களைத் திறந்து காட்டினார். அப்பொழுது கோர்க்கையில் சில குழந்தைகளுடன் கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்தார். "இவர்களுக்காவது நம்மைவிட நல்ல வாழ்க்கை இருக்கும். நாம் அனுபவித்ததில் பெரும் பகுதி இவர்கள் அனுபவிக்க மாட்டார்கள். நம் வாழ்க்கையில் இருந்த அவ்வளவு குரூரம் இவர்கள் வாழ்க்கையில் இராது" என்றார். தூலையில் சில குன்றுகளும், அவைகளின் அடியில் ஒரு கிராமமும் தெரிந்தது. அந்தப் பக்கமாய்த் தூரத்தில் பார்த்துக்கொண்டே துக்கத்தோடு சொல்லுகிறார்: "இவர்களைக் கண்டு நான் பொறாமைப்படவுமில்லை. சரித்திரத்திலேயே வியக்கத்தக்க சிறந்த காரியம் ஒன்றை நம் தலைமுறையில் சாதித்துவிட்டோம். நம் வாழ்க்கையில் நாம் காட்ட வேண்டியிருந்த குரூரத்தின் அவசியத்தை உணர்ந்து நம்மை க்ஷமித்து விடுவார்கள். ஆமாம், எல்லாவற்றையும் புரிந்து கொள்வார்கள், எல்லாவற்றையும்!" இவ்வாறு சொல்லிக் கொண்டே, அவர் தம் கையினால் குழந்தைகளை மிக்க அன்புடன் மிருதுவாகத் தடவிக்கொடுத்தார்.

வேறொரு சமயம் நான் வந்தபோது அவர் மேஜை மீது டால்ஸ்டாய் எழுதிய "யுத்தமும் சமாதானமும்" என்ற நாவல் கிடந்தது. "ஆ, டால்ஸ்டாய்தானே? ஆமாம். அதிலே அந்த வேட்டையாடும் காட்சியை மறுபடியும் வாசிக்க வேண்டுமென்று எடுத்தேன். அப்புறம் ஒரு தோழருக்குக் கடிதம் எழுதவேண்டுமே என்று நினைவு வந்தது. இப்படித் தான்—வாசிப்பதற்கு நேரமே கிடைப்பதில்லை. நேற்று ராத்திரி எப்படியோ நீங்கள் டால்ஸ்டாயைப்பற்றி எழுதிய கட்டுரையை வாசித்துவிட்டேன்" என்று புன்னகையுடன் கூறினார். பிறகு நாற்காலியில் சுகமாகச் சாய்ந்துகொண்டு, தணிந்த குரலில், "எப்பேர்ப்பட்ட மகத்தான மனுஷர்—

ஆகாசத்துக்கும் பூமிக்குமாய் வளர்ந்தவரைப் போலே— இல்லையா? என்ன சொல்லுகிறீர்கள்? கலைஞர் என்றால் அவரைத்தான் சொல்லலாம்..........இன்னொரு ஆச்சரிய கரமான விஷயம் தெரியுமா உமக்கு? இந்த மேற் குலப் பிரபு எழுதுகிறவரைக்கும், நிஜக் குடியானவன் ஒருவனைக்கூட யாருமே இலக்கியத்தில் சித்திரிக்கவில்லை!" என்றார். பிறகு தம் கண்களை இடுக்கி என்னை உறுத்துப் பார்த்துக்கொண்டே, "ஐரோப்பாவிலே வேறே யாரை யாவது இவருக்குச் சமமாகக் கூற முடியுமா?" என்று கேட்டார். அந்தக் கேள்விக்கு உடனே அவரே பதிலும் சொல்லிவிட்டார்: "ஊஹூம். யாருமே யில்லை!" இப்படிச் சொல்லிவிட்டுத் தம் கையிரண்டையும் பரபரவென்று தேய்த்துக்கொண்டே கலகலவென்று சிரித்தார்.

அவர் ருஷியக் கலையைப் பற்றிக் கொண்டிருந்த பெரு மையை நான் பல தடவைகளில் பார்த்துத் தெரிந்து கொண் டிருக்கிறேன். இது அவருடைய சுபாவத்துக்குப் பொருந்த வில்லையே, சிறு பிள்ளைத்தனமாக இருக்கிறதே என்றுகூட எண்ணியிருக்கிறேன். ஆனால் இதிலும் தொழிலாளர்பால் அவர் கொண்டிருந்த ஆழ்ந்த, மகிழ்ச்சிகரமான அன்பே தொனித்தது.

காப்ரியில் செம்படவர்கள், சுறா மீன்கள் கிழித்து அறுத் துச் சிக்கலாக்கிவிட்ட தங்கள் வலைகளை மிக ஜாக்கிரதை யாய்ப் பிரித்துச் சீர்திருத்துவதை அவர் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருப்பார். "நம்முடைய ஜனங்களுக்குக் கெட்டிக்காரத்தனம் அதிகந்தான்" என்பார். "அது எப் படி உண்மையாயிருக்க முடியும்," என்று நான் சந்தேக மாய்ச் சொன்னேன். அவருக்கு எரிச்சல் வந்துவிட்டது.

"ஹூம், ஹூம்... இந்த மூலைக் காட்டில் இருப்பதால் ருஷியா வையே நீங்கள் மறந்துவிட்டாற் போலிருக்கிறதே!" என்றார்.

வி. ஏ. டி. யும் லெனினும் ஸ்வீடன் தேசத்தில் ரயிலில் போய்க்கொண்டிருந்தார்கள். லெனின் அப்பொழுது ட்வீரர் என்பவரைப்பற்றி எழுதியிருந்த ஒரு புஸ்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தார். அதே வண்டியில் சில ஜெர்மானியர்களும் வந்துகொண்டிருந்தனர். அவர்கள் அது என்ன புஸ்தகம் என்று விசாரித்தார்கள். அவர்கள் அந்தக் கலைஞரின் பேரைக்கூடக் கேள்விப்பட்டதில்லை என்று தெரியவந்தது. லெனினுக்கு இது ரொம்ப வேடிக்கையா யிருந்தது. அவர் ரொம்பக் கர்வத்துடன் இரண்டு தரம் சொல்லிக்கொண்டாராம்: "பார்த்தீர்களா, அவர்களுக்குத் தங்களுடைய கலைஞர்களைக்கூடத் தெரிந்துகொள்ளச் சக்தியில்லை. ஆனால் நாம் அப்படியில்லை" என்று. இதை வி ஏ. டி. யே என்னிடம் சொன்னார்.

ஒரு நாள் மாலை, மாஸ்கோவில் இ. பி. பி. யின் அறையில் பீத்தோவன் என்ற பிரசித்திபெற்ற சங்கீத வித்வானுடைய கீர்த்திபெற்ற பாட்டு ஒன்றை வாசிக்கக் கேட்டுக்கொண்டிருந்தார். "இந்தப் பாட்டைவிட இனிமையானது ஒன்றையும் நான் கேட்டதே யில்லை. எத்தனை தடவை வேண்டுமானாலும் ஒவ்வொரு நாளும் இதைக் கேட்டுக்கொண்டே யிருக்கலாம். அவ்வளவு அற்புதமான, தெய்வீகமான சங்கீதம் இதில் இருக்கிறது. நான் சிறுபிள்ளை மாதிரி சொல்லுவதாய் வேணுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள்—எப்பேர்ப்பட்ட அற்புதங்களை யெல்லாம் மனிதனாலே சிருஷ்டிக்க முடிகிறது என்று எனக்கு மிகப் பெருமையாய்த் தானிருக்கிறது. ஆனால் அடிக்கடி சங்கீதம் கேட்டுக்கொண்டிருக்க எனக்கு முடிகிறதே யில்லை. சங்கீதம் என் நரம்புகளை யெல்லாம்

தளர்ந்திளன்னை அடிமையாக்கி அசடாகவும் ஆக்கிவிடுகிறது. இந்தக் குரூரமான நரக லோகத்திலே இப்பேர்ப்பட்ட தெய்வீகமான அழகைச் சிருஷ்டிக்கக்கூடியவர்களை வியந்து என்னவெல்லாமோ சொல்ல வைத்துவிடுகிறது. அவர்களைப் பிரியமாய் தடவிக்கொடுக்கச் சொல்லுகிறது. ஆனால் நாம் எதையாவது அன்போடு தடவிக் கொடுக்கப் போகலாமோ? கையிலே கடித்துவிட்டதானல்? ஹிம்ஸையே புரியக் கூடாது என்பது நம் லட்சியமாக இருந்தாலும், காரிய சித்திக்காக தலையில் ஓங்கி இரக்கமில்லாமல் அடிக்கவேண்டியிருக்கிறது. ஐயோ, இது ரொம்பக் கொடிய குரூரமான கடமை. ஹூம், ஹூம்" என்ருர்........

தம் தோழர்களிடம் அவர் காட்டிய விசேஷ அன்பைப் பற்றியும் அவர்கள் வாழ்க்கை சம்பந்தமாகச் சாமானிய நுணுக்கங்களிலும் அவர் காட்டிய சிரத்தையைப்பற்றியும் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். சில தந்திரக்கார எஜமானர்கள் தங்கள் உண்மையான, கெட்டிக்கார வேலைக்காரர்களிடம் சில சமயம் காட்டும் அன்பைப் போல், சுயநலத்தால் பிறந்த சிரத்தையின் ஜாடை அவரிடம் கொஞ்சமும் தென்பட்டதே யில்லை. லெனினிடம் உண்மையில், சுயநலம் என்பது கடுகளவுகூடக் கிடையாது. தோழர்களிடம் அவர் காட்டிய அன்பு, ஒருவர்க்கொருவர் சமமான, அந்தரங்கமான சிநேகிதர்களுக்குள்ள இதய பூர்வமான அன்பு. அவருடைய கட்சியிலிருந்த மற்றப் பெரிய தலைவர்களில் ஒருவரைக்கூட இவ்விஷயத்தில் லெனினுக்குச் சமமாகக் கூற முடியாது. ஆனால் அவர் இந்த உண்மையையும் உணர்ந்திருக்கவில்லையோ, அல்லது உணர்ந்துகொள்ள மறுத்துவிட்டாரோ, சொல்ல முடியாது. பிறருடன் வாதம் பண்ணும்போது கொஞ்சம் காரமாய்ச் சில சமயம் பேசிவிடுவார்.

அல்லது இரக்கமே இல்லாமல் பழித்துவிடுவார். அல்லது விஷமாய்ச் சிரித்துத் தூரத்திவிடுவார். ஆனால் ஒன்று: நேற்றுத்தான் சிலரைக் கண்டனம் செய்து கோபித்திருப் பார்; அவர்களைப்பற்றி இன்று ஒரு தீர்ப்பு அளிக்கவேண்டு மென்றால் அவர்களுடைய புத்தி சாமர்த்தியங்களையும் நற் குணங்களையும் வியந்து பேச ஆரம்பித்துவிடுவார். 1918-21 வருஷங்களில் இருந்த பயங்கரமான நிலைமையின் போது அவர்கள் சளைக்காமல் உழைத்ததையும், எல்லாத் தேசங் களிலிருந்தும் எல்லாக் கட்சிகளிலிருந்தும் அனுப்பப்பட்டு வந்திருந்த ஒற்றர்கள், உளவாளிகள் மத்தியில் அவர்கள் சிரமப்பட்டதையும், யுத்தத்தில் அலுத்து விழுந்துவிட்ட தேசத்தில், புரையோடும் புண்களாகப் பெருகிய கணக் கற்ற சதிகளுக்கு மத்தியில், அவர்கள் அவஸ்தைப் பட்டதையும் ஞாபகப் படுத்துவார். "அவர்களுக்கு ஓய்வு இருந்ததா, ஒழிவு இருந்ததா? அவர்களுக்கு நல்ல சாப்பாடு உண்டா? வயிறு நிறையவாவது சாப்பிட்டிருப் பார்களா? அடுத்த நிமிஷம் எப்படிக் கழியுமோ என்று உயி ரைக் கையில் பிடித்துக்கொண் டிருக்கவில்லையா?......" என் றெல்லாம் கேட்க ஆரம்பித்து விடுவார்...........

ஆனால் இதே அவஸ்தைகளை எல்லாம் பட்ட லெனி னுக்குத் தாம் பட்ட கஷ்டங்களோ, உள்நாட்டுக் கலகத்தின் இரத்தக் களரியினால் அஸ்திவாரம் வரைக்கும் ஆடிப்போன வாழ்க்கையின் சிரமங்களோ சற்றும் நினைவிலிருந்த தாகத் தெரியவே யில்லை. ஒரே ஒரு தடவைதான் அவர் வாயிலிருந்து பரிதாபமான வார்த்தைகள் வந் தன. அப்பொழுது அவர் தம் அறையில் ஆண்ட்ரீவா வுடன் பேசிக்கொண்டிருந்தார்: "வேறே என்ன செய்வது, ஆண்ட்ரீவா? போர் செய்வதைத் தவிர வேறே வழியே

இல்லையே! அதனாலே கஷ்டமாய்த்தானே இருக்கிறது? ஆமாம், நிஜந்தான். எனக்குக்கூடச் சில சமயத்தில் அப்படித்தான் இருக்கிறது. ரொம்ப ரொம்பத் துன்பமாயிருக்கிறது. ஆனால் ஜோர்ஷின்ஸ்கியைப் பாருங்கள். அவர் இந்த உலகத்தில் இருப்பதாகவே தோன்றவில்லை. நாம் என்ன செய்வது? காரியத்தை முடிக்காமல் விட்டுவிடுவதைவிட நாம் கஷ்டப்படுவது தேவலையல்லவா?"......

ஒரு தோழர் - லெனினுடைய அரசாங்கத்தில் உத்யோகஸ்தராக வேலை பார்த்துக்கொண்டிருந்தவர் — அவரை லெனின் வாசல்வரைக்கும் கூடவந்து வழியனுப்பிவிட்டு, வியப்புடனும் மரியாதையுடனும் அவரைப்பற்றி என்னிடம் சொல்லுகிறார்: "உங்களுக்கு அவரை நன்றாய்த் தெரியுமோ? ஐரோப்பாவில் எங்கேயாவது இருந்தாரானால் ஒரு மந்திரி சபைத் தலைவராயிருப்பார்." பிறகு கரகரவென்று கைகளைத் தேய்த்துக்கொண்டே, சிரிப்புடன், "ஐரோப்பா நம்மைவிட புத்தி சாமர்த்தியத்தில் மட்டந்தானே!" என்கிறார்.

லெனின் தமது சுதேசத்தைவிட்டுப் பல வருஷங்கள் வெளியே வாசம் செய்தவர். தூரத்திலிருந்தே தம் தேசத்தை உன்னிப்பாய்க் கவனித்தவர். தள்ளியிருந்து பார்க்கும்போது இத்தேசம் இன்னும் அதிக அழகுடனும் பிரகாசத்துடனும் ஒளி வீசியது. வெளியிலிருந்தபடியே, ருஷியாவில் மறைந்து கிடந்த மிகப் பெரிய சக்திகளையும், அதன் ஜனங்களுடைய ஒப்பற்ற புத்திசாமர்த்தியத்தையும் சரியாக உணர்ந்திருந்தார். அவை ரஸமற்ற நீண்ட காலப்போக்கினாலும் அடக்கிவைக்கப் பட்டதாலும் மங்கியிருந்த போதிலும், இருண்ட மாயத் தோற்றம் கொண்ட ருஷிய வானத்தில் மின்னும் நட்சத்திரங்கள் போல விட்டுவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. அவற்றைத் தூண்டி ஜகஜ்ஜோதியாக மாற்றினவர் லெனின்.

லெனின், மனிதர்களில் சிரேஷ்டர், இன்று இறந்து விட்டார். அவருடன் பழகியவர்களுக்கு அவர் மரணம் பெருந் துக்கத்தை, தீராத துக்கத்தைக் கொடுத்துவிட்டது.

ஆனாலும் இத்துக்கத்தின் இருளில் உலகத் தொழிலாளர்களின் ஒப்பற்ற தலைவர் என்ற அவருடைய பெருமை இன்னும் அதிகக் காந்தியுடன் பிரகாசிக்கிறது.

பொய் புரட்டும், தூஷணையும், அபவாதமும் இன்னும் அதிகமாய் இருளைச் சூழச் செய்த போதிலும் பாதகமில்லை. இந்தப் பைத்தியக்கார உலகின் மூச்சை யடைக்கும் இருளைப் பிளக்க லெனின் ஏற்றி உயர்த்திய தீபத்தை எந்தச் சக்தியாலும் அணைக்க முடியாது.

என்றென்றும் மனிதர்கள் ஞாபகத்தில் வாழ்வதற்கு, லெனினைவிட வேறு யாரும் ஏற்றவர்களல்லர்.

மாடல் பிரஸ், ஜி. டி., மதராஸ்.

நவயுக வெளியீடுகள்

1. மாகாண சுயாட்சி

—ஏ. என். சிவராமன்

மாகாணங்களில் நடைபெறும் ஆட்சி முறையின் அடிப்படையான சட்டங்களையும், கவர்னர்களின் விசேஷாதிகாரங்களையும் பற்றி விவரமாகக் கூறப்பட்டிருக்கிறது. யாவரும் படித்தறியவேண்டிய அரசியல் பொக்கிஷம்.

விலை: அணா 8

2. தேய்ந்த கனவு

—கி. ரா. மொழிபெயர்ப்பு.

சார்லஸ் டிக்கன்ஸ் எழுதிய "இரு நகரக் கதை"யின் மொழிபெயர்ப்பு. நாடக மேடையிலும் சினிமாத் திரையிலும் கோடிக்கணக்கான மக்கள் இதயங்களை உருக்கியுள்ள அற்புதச் சரித்திரம்.

விலை: அணா 8

3. சீனு—ஜப்பான்

—ஏ. ஜி. வெங்கடாச்சாரி.

சீனாவுக்கும் ஜப்பானுக்கும் நேர்ந்துகொண்டிருக்கும் சண்டையின் அடிப்படையான காரணங்கள் மிகத் தெளிவான பாஷையில் கூறப்பட்டிருக்கிறது.

விலை: அணா 8

4. மைக்கேல் காலின்ஸ்

—ப. ராமஸ்வாமி.

250 வருஷம் அடிமைப்பட்டிருந்த அயர்லாந்து விடுதலையடைந்த விவரம் இதில் விவரிக்கப்பட்டிருக்கிறது. அவ்விடுதலைப் போரின் தலைவனான காலின்ஸின் வீரம் நிறைந்த சரித்திரத்தை இதில் படியுங்கள்.

விலை: அணா 8

5. எல்லோரும் ஓர் குலம்

—ப. ராமஸ்வாமி.

மனித சமூகம் காடுகளில் வாழ்ந்து வந்த அநாகரிக நிலையும், பின்னர் நாகரிகக் காலத்தில் இயந்திரங்களும் கருவிகளும் பெருகி முதலாளித்துவம் ஏற்பட்ட விதமும். அதனால் ஏற்பட்ட லாப நஷ்டங்களும், அடுத்தபடியாக முதலாளித்துவத்தின் ஸ்தானத்தில் ஏற்படப் போகும் அபேதவாதத்தின் தத்துவங்களும், இந்தியா சமபர்

தமாய் அபேதவாதம் எங்கிலேயிலிருக்கும் என்பதும் இப்புத்தகத்தில் எளிய நடையில் தெளிவாய் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

விலை: அணு 8

6. வார்தா திட்டம்

—பே. கோ. சுந்தரராஜன், பி.ஏ., எல்.டி.

மகாத்மா காந்தியின் நோக்கப்படி தயாரிக்கப்பட்டுள்ள வார்தா திட்டத்தைப் பற்றிய தெளிவான ஆராய்ச்சி நூல்.

விலை: அணு 8

7. இரட்டை மனிதன்

—கு. ப. ராஜகோபாலன், பி.ஏ.

ஆங்கில வசன நடை மன்னரான ஸ்டீவன்ஸன் எழுதிய Dr. Jekyll and Mr. Hyde-ன் மொழிபெயர்ப்பு. ஜெகிலும் ஹைடும் மனிதனிடமுள்ள நன்மை, தீமை என்ற இரண்டு வேறுபட்ட குணங்களின் உருவங்கள். போகப் போக ஆச்சரியத்துக்கு மேல் ஆச்சரியம் கொடுக்கும் இனிய கதை.

விலை: அணு 8

8. அடிமைத் தாய்

—“ சஞ்சீவி ”

கொடிய பஞ்சத்தில் அகப்பட்ட ஒரு பெண், தன் கணவனுல் வேறொருவனுக்கு மனைவியாக வாடகைக்கு அனுப்பப்பட்டு, புதியவனுடன் வாழ்வு செய்கிறுள். இதன் விளைவுதான் தாய் அடிமைப் பட்ட வரலாறு. இந்தக் கதையைப் படியுங்கள். அன்பு மலரான தாயின் உள்ளத்தைக் கண்டு ஆச்சரியப்படுவீர்கள்.

விலை: அணு 3

9. பொம்மையா, மனைவியா?

நார்வே நாட்டு நாடகக் கவீந்திரர் ஹென்றிக் இப்ஸன் எழுதிய Doll's House என்ற நாடகத்தின் மொழிபெயர்ப்பு. இது பல இதர பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. தமிழில் முதன் முதலாக வெளிவந்திருக்கிறது. கண் கவரும் பதிப்பு.

விலை: அணு 8

10. உலகத்துச் சிறு கதைகள்

—“ புதுமைப்பித்தன் மொழிபெயர்ப்பு. ”

“ இந்தத் தொகுதியில் கொடுக்கப்பட்டிருக்கும 24 கதைகளும் பல்வேறு தேசங்களின் நிகரற்ற இலக்கியங்களிலிருந்து எடுக்கப்

பட்டு, சரளமான தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. இது ஒரு நல்வரவாகும்." இவ்வாறு 'ஹிந்து' பத்திரிகை கூறுகிறது.
உயர்ந்த பதிப்பு— விலை: ரூ. 1—0—0

11. நாம் எங்கிருக்கிறோம் ?

—பண்டித ஜவாஹர்லால் நேரு எழுதியது

இன்றுள்ள தேச நிலைமையையும் காங்கிரஸில் ஏற்பட்டுள்ள மாறுதல்களிடம், உலக நிகழ்ச்சிகளையும் பற்றி நேருஜியின் எட்டுக் கட்டுரைகள் இதில் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு தேசாபிமானியும் படித்து ஆராய வேண்டிய நூல்.

விலை: அணு 4

12. திரிபுரி காங்கிரஸ்

—சா. கணேசன்.

தமிழ்நாடு காங்கிரஸ் நிர்வாக சபையின் அங்கத்தினரான ஸ்ரீ. கணேசன் அவர்கள் தாம் திரிபுரியில் கண்ட விஷயங்களை இதில் எழுதியிருக்கிறார். சுபாஷ் பாபு சேத் கோவிந்த தாஸ் தலைமைப் பிரசங்கங்களும், ஜவாஹர்லால், ராஜாஜி, கோவிந்த வல்லப பந்த் முதலியோர் சொற்பொழிவுகளும், ஏராளமான திரிபுரிப் படங்களும் இருக்கின்றன.

விலை: அணு 6

13. சுகாதாரச் சட்ட விளக்கம்

காரைக்குடி முனிசிபல் கமிஷனர் ஸ்ரீ. டி. புருஷோத்தம் அவர்கள் இயற்றியது. சுகாதார மந்திரி கனம் டாக்டர் ராஜன் அவர்கள் முகவுரையுடன் கூடியது.

விலை: அணு 1

14. கப்சிப் தர்பார்

[ஹிட்லரின் வாழ்க்கையும், கனவுகளும்]

ஆசிரியர்கள் :

சோ. விருத்தாசலம், ந. ராமரத்னம்

ஹிட்லரைப் பற்றியும், ஐரோப்பிய நிலைமையைப் பற்றியும் அறிந்துகொள்ள இணையற்ற புஸ்தகம். வாசிப்பதற்கு நாவல்போலிருக்கும். ஆனல் பெரிய விஷயங்களை எளிதில் தெரிவிப்பது.

விலை: அணு 8

எல்லாப் புஸ்தகங்களுக்கும் தபால் செலவு வேறு.

நவயுகப் பிரசுராலயம் லிமிடெட்,
17, மூக்கர் நல்லமுத்து தெரு, ஜி. டி., மதராஸ்.

கப்சிப் தர்பார்

(ஹிட்லரின் வாழ்க்கையும், கனவுகளும்)

ஆசிரியர்கள் :
சோ. விருத்தாசலம்
ந. ராமரத்னம்

ஹிட்லரைப்பற்றியும், ஐரோப்பிய நிலைமையைப் பற்றியும் அறிந்துகொள்ள இணையற்ற புஸ்தகம் வாசிப்பதற்கு நாவல் போலிருக்கும். ஆனால் பெரிய விஷயங்களை எளிதில் தெரிவிப்பது.

விலை : 8-அணா.

உலகத்துச் சிறு கதைகள்

['புதுமைப்பித்தன்' மொழிபெயர்த்துள்ள 24 கதைகள்]

"புத்தகம் மிகவும் சுவாரஸ்யமா யிருக்கிறது."
—பாரத மணி

"ஒவ்வொரு கதையும் படிக்கப் படிக்கச் சுவை தருவதாயிருக்கிறது." —தாருல் இஸ்லாம்

"ஒவ்வொரு கதையும் நமக்கு ஒவ்வொரு தனி உலகத்தைக் காட்டுவது போலிருக்கிறது."
—ஊழியன்

"நல்ல காகிதத்தில், பதிப்பு சுத்தமாய், அழகிய மேலட்டையுடன் கூடி புத்தகம் மனம் கவரும் முறையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது."
—ஹநுமான்

விலை : ரூ.-1

நவயுகப் பிரசுராலயம் லிமிடெட்
ஜி. டி. மதராஸ்.